www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 485 | 1998 ஜனவரி | ரூபா 8.00


உள்ளே


- வடக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்! ........ 2
- கீர்த்தி பாலசூரிய மறைவின் 10 வது நினைவு தினம்: ........ 3
- மார்க்சிசமும் உற்பத்தியின் பூகோள்மயமாக்கமும் ........ 14–15
- இந்திய பொதுத் தேர்தலும் முதலாளி வர்க்க நெருக்கடியும் ........ 16–17
- இனவாத அரசின் தாக்குதல்களை எதிர்த்து மீனவர்களின் நடவடிக்கை குழு ........ 18


**மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை அக்டோபர் புரட்சி ஊர்ஜிதம் செய்கின்றது**

10–11 பக்கம்

# அரசியல் அமைப்புச் சட்ட பிரேரணைகள் சிங்கள–தமிழ் மக்களுக்கு எதிரான சதி

**சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை– 1997–11–28**

தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வதாகவும் மக்களுக்கு பொதுவில் அதிகாரத்தை கிர்ந்தளிப்பதாகவும் கூறி பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் 'அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்த' பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது மற்றுமோர் அப்பட்டமான மோசடியாகும். இந்தப் பிரேரணைகளின் மோசடி வார்த்தை ஜாலங்கள் இதே பொதுஜன முன்னணி 1994 பொதுத் தேர்தலில் முன்வைத்த பொய் வாக்குறுதி சுருள்களுக்கு மட்டுமே இரண்டாம் தரமானவை. புதிய மந்திரஜாலங்களால் எவரும் ஏமாந்துபோகக் கூடாது எனவும் தமிழ், சிங்கள மக்களின் உரிமைகளை காக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு அவசியமான அரசியல் தயாரிப்புக்களில் விரைவாக ஈடுபடுமாறும் சோசலிச சமத்துவக் கட்சி/சோ.ச.க. தொழிலாளர்களையும் ஏழைகளையும் இளைஞர்களையும் வேண்டுகின்றது.

புதிய அரசியலமைப்புச் சட்டப் பிரேரணைகள் பொதுமக்களுக்கு எதிரான சதியின் வரைவாகும். ஏகாதிபத்தியவாதிகள் தொடக்கம் சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கப் பகுதியினர், இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்பவர்கள், தீவிரவாதிகள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் வரையிலான சகல பிற்போக்குச் சக்திகளும் இந்த மக்கள் எதிர்ப்பு சதியின் நேரடி பங்காளிகள் ஆவர். இந்தச் சதியின் பங்காளிகள் இன்னொரு தரப்பினரும் இருந்து கொண்டுள்ளனர். அவை முதலாளித்துவப் பகுதியினரின் ஆதரவுடன் அரசியலமைப்பு சட்டப் பிரேரணைகளைச் சூழ இனவாதத்தை தூண்டி, பொதுமக்களுக்கு எதிரான பாசிச வாளைத் தீட்டிக் கொள்ளச் செயற்படும் சிங்கள ஆணைக்குழு, ஜே.வீ.பி.போன்ற அமைப்புக்கள் ஆகும்.

தொழிலாளர் வர்க்கம் இந்தப் பிற்போக்கு சக்திகளில் இருந்து பூரணமாக சுயாதீனமாகி முன்னணியில் நிற்க வேண்டும். சிங்கள, தமிழ் ஏழை மக்களதும் இளைஞர்களதும் ஆதரவைத் தம்பக்கம் திரட்டிக் கொண்டு வாழ்க்கை உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் பேணிக் காக்க முன்னிற்க வேண்டும். அதற்கான முன்நோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் சோசலிச சமத்துவக் கட்சியே வழங்குகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இன்றைய பிரேரணைகள் எந்த விதத்தில் பொய்யும் சதியும் நிறைந்தவை என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

24 அத்தியாயம் பூராவும் 226 பக்கங்களில் அர்த்தமற்ற

4ம் பக்கம் பார்க்க

## ட்ரொட்ஸ்கிச தலைவி ஜீன் பிரஸ்ட் மரணம் –1921–1997



அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியினதும் அதன் முன்னோடியான வேர்க்கர்ஸ் லீக்கினதும் ஸ்தாபக அங்கத்தவரான தோழி.ஜீன் பிரஸ்ட் நவம்பர் 24ம் திகதி திங்கட்கிழமை காலமானார். 1966ல் வேர்க்கர்ஸ் லீக் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து கட்சியின் மத்திய குழு அங்கத்தவராக விளங்கிய தோழி.ஜீன் பிரஸ்ட் சோசலிச அடிப்படைக் கொள்கைகளுக்கான 60ஆண்டுகள் போராட்ட வரலாறு படைத்தவர். 76 வயது நிரம்பிய அவர் கடந்த நவம்பர் 21ம்திகதி திடீர் மாரடைப்பினால் காலமானார்.

ஜீன் பிரஸ்ட் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் வரலாற்றில் போராளி வரலாறு கொண்டிருந்தார். அவர் முதலாளித்துவ சுரண்டலுக்கும் பாசிச காட்டுமிராண்டித்தனத்துக்கும் ரூஷ்யப் புரட்சியை ஸ்டாலினிசம் காட்டிக்கொடுப்பதற்கு எதிராகவும் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கு கொள்ள 1937ல் இளம் சோசலிஸ்டுகள் இயக்கத்தில் சேர்ந்தார்.

அமெரிக்க சோசலிஸ்ட் கட்சியின் இளைஞர் இயக்கமான அதன் தலைமையை அன்று ட்ரொட்ஸ்கிஸ்டுகள் வெற்றி கொண்டிருந்தனர். இரண்டு ஆண்டுகளின் பின்னர் அவர் 1940 ஜனவரியில் அமெரிக்காவில் ட்ரொட்ஸ்கிசக் கட்சியாக விளங்கிய சோசலிசத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார். பிற்காலத்தில் அவரின் கணவராகவும் வாழ்க்கை சகபாடியாகவும் விளங்கிய பில் பிரஸ்ட் சோசலிச தொழிலாளர் கட்சியில் சேர்ந்ததும் இக்காலத்திலேயே.

1991ல் காலஞ்சென்ற பில் பிரஸ்டுடன் சேர்ந்து தோழி.ஜீன் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினுள் எந்த ஒரு சக்தியினாலும் அடித்துச் செல்லமுடியாத வரலாற்றுப் புகழ்மிக்க பணியை ஆற்றினார். சோசலிசத் தொழிலாளர் கட்சியும் 1960பதுகளின் ஆரம்ப காலத்தில் இருந்து யுத்தத்தின் பின்னைய பணவீக்கச் செழிப் பின் அழுத்தங்களுக்கு உள்ளாகி, தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத் திட்டத்தை கைவிட்ட வேளையில் பில்லும் ஜீன் பிரஸ்டும் அந்த காட்டிக் கொடுப்பை எதிர்த்துப் போராடினர். அவர்கள் ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளைப் பேணிக்காத்ததன் பெறுபேறாக சோசலிச தொழிலாளர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட இளம் தோழர்களுடன் சேர்ந்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ரீதியில் ஒன்றுகூடி அமெரிக்க ட்ரொட்ஸ்கிச அமைப்பான வேர்க்கர்ஸ் லீக்கினை அமைப்பதில் முன்நின்றனர்.

கடந்த 30 வருடங்களாக ஜீன் பிரஸ்ட் வேர்க்கர்ஸ் லீக்கினதும் சோசலிச சமத்துவக் கட்சியினதும் தலைவியாக அமெரிக்காவினுள் மட்டும் அல்லாது ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் நாடுகளிலும் ட்ரொட்ஸ்கிசத்துக்கு வெற்றி கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை மார்க்சிஸ்டுகளாக பயிற்றி எடுக்கும் பணியில் முன்நின்றார்.

தோழி.ஜீனின் 60 வருடகால அரசியல் போராட்டம் சம்பந்தமாகவும் அமெரிக்காவில் அவர் ஆற்றிய புரட்சிகரப் போராட்டங்களை நினைவுகூரும் வகையிலும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர்.விஜே டயஸ் அமெரிக்க சோ.ச.க.வுக்கு அனுப்பி வைத்த அனுதாபச் செய்தியில் "தோழி.ஜீன் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் பூராவும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் மிகவும் பெறுமதி வாய்ந்ததும் பிரமாண்டமானதுமான அனுபவங்களை தன்னகத்தே கொண்டிருந்தார். ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் அனைத்து திருப்புமுனைகளிலும் அவர் புரட்சிகர அடிப்படைக் கொள்கைகளின் பக்கம் உறுதியாக நின்று கொண்டிருந்தார். சங்கடமான காலகட்டங்களில் வழிகாட்டுவதற்காக எந்தவிதமான ஈடாட்டங்களும் இல்லாத விதத்தில் எம் அனைவரையும் தன் பக்கம் திரும்ப வைக்க அவர் செயற்பட்டார்." என அவர் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## களுத்துறை சிறையில் தமிழ் சிறைக் கைதிகள் மூவர் படுகொலை

டிசம்பர் 12 வெள்ளிக்கிழமை களுத்துறை சிறையில் சிங்கள இனவாதத்தினால் தூண்டிவிடப்பட்ட சிறைக்கைதிகளால் சிறைச்சாலை அதிகாரிகளதும் இராணுவத்தினரதும் கண்களின் எதிரில் தமிழ் தேசிய இன அரசியல் கைதிகள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டு மூவர் துடிக்கத் துடிக்க படுகொலை செய்யப்பட்டதோடு வேறும் பலர் படுகாயம் அடைந்தனர். இந்த இரத்தப் பலியெடுப்பு, சிங்கள-தமிழ் தேசிய இனங்களுக்கிடையே சமாதானத்தை சிருஷ்டிப்பதாகவும் "அதிகாரத்தை பரவலாக்கும் அரசியலமைப்பு திட்டத்தை வரைவதாகவும்" கூறும் பொய் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் நாட்டினுள் சிருஷ்டித்துள்ள நிஜ நிலைமை என்ன என்பதைக் காட்ட தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கண்களைத் திறப்பதாக அமைந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவர்கள் "விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள்" எனப் பிரச்சாரம் செய்வதன் மூலம் இனவாதத்தைத் தூண்டுவதன் மூலம் இந்தக் கொலைகளை நியாயப்படுத்த அரசாங்க ஊதுகுழல்கள் உட்பட்ட வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் ஈடுபட்டுள்ளன. உணவுப் பிரச்சினை மீதான வாக்குவாதமே இந்தப் படுகொலைகளுக்குக் காரணமாகியது என்ற கதையைக் கட்டிவிட்டு, பொதுமக்கள்ள தவறான வழியில் திசை திருப்பும் முயற்சியும் இடம்பெற்று வருகின்றது. இந்த இனவாத பொய் பிரசாரங்களை தவிடுபொடியாக்கி அம்பலமாக்க சோசலிச சமத்துவக் கட்சியின் இந்தக் கட்டுரை கைகொடுக்கும். இனவாதத்தின் மூலமும் பொய்பிரச்சாரங்களின் மூலமும்

(19ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர் பாதை

# வடக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்!

ஆசிரியர்: சே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

வடக்கில் உள்ளூராட்சி சபைகள் பலவற்றுக்கு டிசம்பர் 16 23வரை நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டதோடு எதிர்வரும் ஜனவரி 29ல் தேர்தல் நடாத்தப்படும் என பொதுஜன முன்னணி அரசாங்கம் அறிவித்துள்ளது வடக்கில் "ஜனநாயக நடவடிக்கை" யையும் "சிவில் நிர்வாகத்தை"யும் பலப்படுத்தும் பெயரில் இடம்பெற உள்ள இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலானது முதலாளித்துவ ஜனநாயகத்தின் இலட்சணங்களையும் மீறி, தமிழ் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு தொடுக்கப்பட்டுள்ள ஒரு பெரும் தாக்குதலாகும் என சோசலிச சமத்துவக் கட்சி தெரிவித்துக் கொள்கின்றது. வடபகுதி மக்களை இராணுவ இரும்புச் சப்பாத்தினால் ஏறி உழக்கிய வண்ணம் நடாத்தப்படும் இந்தத் தேர்தலை பகிஷ்கரிக்கும் சோசலிச சமத்துவக் கட்சி, வட பகுதி மக்களையும் இத்தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வேண்டுகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகள் இரண்டும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இராணுவ ஆட்சியின் கீழ் இருந்து கொண்டுள்ளவை. அரசாங்கத்தின் ஊது குழல்களான முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்கள் என்னதான் பிரமைகளுக்கு தூபம் போட்டாலும் யாழ்ப்பாண மக்கள் இராணுவ அடக்குமுறையின் கீளேயே இருந்து கொண்டுள்ளனர். இதுதான் நிஜ நிலைமை. 700க்கும் அதிகமான இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அங்கத்தவர்களை பிடிக்கும் பெயரில் தினமும் ஆக்கிரமிப்பு தொடர்கிறது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் யாழ்ப்பாணத்தில் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பகுதிக்குமே நடைபெற உள்ளது. இராணுவ இரும்புச் சப்பாத்துக்களால் ஏறி உழக்கிக் கொண்டுள்ள ஒரு நிலைமையில் தான் இந்தத் தேர்தல் நடைபெறப் போகின்றது என்பதற்கு இதைக்காட்டிலும் சிறந்த உதாரணம் வேண்டுமா ?

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடிய தமிழ் மக்களைக் காட்டிலும் இராணுவ முற்றுகை காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் இருந்து வெளியேறி அகதிகளாக வாழும் தமிழ் மக்கள் இலட்சக் கணக்கில் வன்னியில் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி உள்ளார்கள். ஒரு பகுதியினர் மீண்டும் திரும்பியுள்ள போதிலும் இன்னும் பல இலட்சக் கணக்கான மக்கள் ஒரு புறம் சோவினிச ஆக்கிரமிப்பு படைகளின் அட்டூழியத்துக்கும் மறுபுறம் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் வாழத் தள்ளப்பட்டுள்ளனர்.

1985ம் ஆண்டுக்குப் பின்னர் வட மாகாணத்துக்கான வாக்காளர் இடாப்பு தயார் செய்யப்படவில்லை. வாக்காளர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதையிட்டு அக்கறை கிடையாது; வாக்களிக்க முடிந்தாலும் முடியா விட்டாலும் பரவாயில்லை; கள்ள வாக்களிப்புடன் என்றாலும் தேர்தலை நடாத்துவோம்! பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத, சர்வாதிகார நிலைப்பாடு இதுதான்.

தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவோ அல்லது சுதந்திரமாக நடமாடிக் கருத்துக்களை முன்வைக்கவோ அல்லது தேர்தலில் சுதந்திரமாகப் பங்குகொள்ளவோ எந்த ஒரு வாய்ப்பும் இல்லாத நிலையில் இடம்பெறும் தேர்தலில் பங்கு கொள்ள மக்களுக்கு என்ன அவசியம் இருந்து கொண்டுள்ளது?

பொதுஜன முன்னணி அரசாங்கம் தேர்தல் ஒன்றை நடாத்துவதன் மூலம் தமது இனவாத யுத்தத்துக்கும் வடக்கில் இடம்பெறும் இராணுவ ஆட்சிக்கும் வடக்கின் பொதுமக்களது ஜனநாயக உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் உத்தேச அரசியல் தீர்வு திட்டத்துக்கும் பொதுமக்களின் அங்கீகாரம் கிட்டிவிட்டதாக பேரிகையிடுவதன் மூலம் தமது கொடிய அடக்குமுறை ஆட்சிக்கு பூச்சுப்போட்டுக் காட்ட முயற்சிக்கின்றது. எனினும் தயாரிப்புக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதைக் காணலாம்.

வடபகுதியில் நிலவும் நிலைமையை நன்கறிந்தும் தேர்தலை நடாத்த பொதுஜன முன்னணி அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் சகல ஜனநாயக உரிமைகளையும் நிராகரிக்கும் ஒன்றாகும். இதை சகல தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் நன்கு அறியும். அப்படி இருந்தும் தேர்தலுக்கு அங்கீகாரம் வழங்கி போட்டியிட முன்வந்ததன் மூலம் இக்கட்சிகள் தமது பலவீனத்தையும் சலுகைகளுக்கான பேராசையையும் பிற்போக்குத்தனத்தையும் வெளிக்காட்டிக் கொண்டுள்ளன. தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்ததன் பின்னர் தேர்தல் ஆணையாளரை சந்தித்த ஈ.பீ.ஆப்.எல்.எப். அமைப்பின் பிரமுகர்களின் முக்கிய கோரிக்கை தீவுப்பகுதியில் இராணுவ, பொலிஸ் பாதுகாப்பை பலப்படுத்து என்பதாககவே விளங்கியது. இதற்கு இவை வங்குரோத்து தமிழ் முதலாளித்துவ தேசிய வாத இயக்கங்கங்களுக்கு இடையேயான குத்துவெட்டுக்களை காட்டிக்கொண்டாலும் இன்றைய வடக்கு கிழக்கு யுத்த நிலைமைக்குள் சிங்கள முதலாளித்துவ அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை பலப்படுத்துவதாயும் விஸ்தரிப்பதாகவுமே உள்ளது. அரசாங்கத்துடனும் அரச படை அணிகளுடனும் சேர்ந்து செயற்படும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ.பீ.டி.பி., ரெலோ, புளொட், ஈ.பீ.ஆர்.எல்.எப். கட்சிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடாத்தப்பட இது உகந்த நிலைமை அல்ல எனவும் தாம் தேர்தலை ஒத்திப்போடும்படி கேட்டதாயும் ஆனால் அரசாங்கம் தேர்தலை நடாத்தியே தீருவது என நிற்பதால் தாமும் போட்டியிட முன்வந்ததாகவும் கூறிக் கொள்கின்றன. இந்த 'உகந்த நிலைமை' பற்றிய கூற்றில் ஒரு துளி தன்னும் உண்மை உண்டா?

இதே சமயம் தேர்தலை நடாத்துவதில் அக்கறை காட்டும் பொதுஜன முன்னணி தனது அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்தாததோடு யூ.என்.பி.யின் நிலைமையிலும் மாற்றம் இல்லை. ஆதலால் தேர்தலுக்கு உரமூட்டி பொதுஜன முன்னணி-யூ.என்.பி.தேர்தலை தோளில் சுமந்து கொண்டு, அரசாங்கத்திற்கு சுண்ணம் தடவும் முழுப் பொறுப்பையும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளிடம் ஒப்படைத்துள்ளது.

வட பகுதியில் இன்று நிலவும் இராணுவ ஆட்சி தற்காலிகமான ஒன்றல்ல. அது இனவாத யுத்தத்தை சாட்டாகக் கொண்டு நாடு பூராவும் இராணுவ பாசிச இயந்திரத்தை திணிக்கும் வேலைத்திட்டத்தின் ஒரு அம்சம்; ஒத்திகை.

1977ன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்த விதமான ஜனநாயக அம்சம் நிறைந்த எந்த ஒரு தேர்தலும் நடைபெறவில்லை. அது தமிழ் மக்களை ஒடுக்கித் தள்ளுவதைப்போல் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மிச்சசொச்சம் ஏதும் இருப்பின் அதையும் துடைத்துக் கட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதற்குச் சமாந்தரமாக தெற்கில் இராணுவ, பொலிஸ், குண்டர், பாசிச ஒடுக்குமுறையின் அடிப்படையில் வாக்கு "வெற்றி" கொள்வது இடம்பெறுகின்றது. இந்த அபிவிருத்திகளின் மறுபக்கமாகவே விடுதலைப் புலிகளின் பயங்கரவாதமும் வடக்கு கிழக்கில் அவர்கள் நிர்வாகத்தின் கீழான அடக்குமுறையும் இடம்பெற்று வருகின்றது.

ஜனநாயகம், நீதி, சமத்துவம், சுதந்திரத்தை வென்றெடுக்க தமிழ்-சிங்கள தொழிலாளர் வர்க்கம் ஒருங்கிணைந்து, ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி, சோசலிச சமத்துவத்துக்காக போராட வேண்டும்.

## கீர்த்தி பாலசூரிய நினைவு நிதி
## ரூபா. 500000



உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவராகவும் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் விளங்கிய தோழர் கீர்த்தி பாலசூரிய காலமாகி 10ஆண்டுகள் நிறைவுபெற்றதை முன்னிட்டு நினைவு நிதியாக ரூபா.500000 திரட்டுவதென சோசலிச சமத்துவக் கட்சி முடிவுசெய்துள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி அபிவிருத்திக்கான இந்நிதி இந்த அனைத்துலகவாதிக்கு செய்யும் பெரும் கௌரவமாக விளங்கும்.

லங்கா சமசமாஜக் கட்சி ட்ரொட்ஸ்கிசத்தை காட்டிக் கொடுத்து, முதலாளித்துவ சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கத்துக்குள் நுழைந்து கொண்டதற்கு எதிராக மீண்டும் ஒரு புரட்சிக் கட்சியை ஆரம்பிப்பதில் தோழர்.கீர்த்தி பாலசூரிய முன்னணியில் நின்றவர். இந்தக் காட்டிக்கொடுபபுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுள் போராட்டத்துக்கு இணைந்த கீர்த்தி, இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்ப பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டு இறக்கும்வரை ட்ரொட்ஸ்கிசத்துக்கான போராட்டத்துக்கு அனைத்துலகிலும், இலங்கையிலும் தலைமை தாங்கினார்.

மார்க்சிச கோட்பாட்டுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் அனைத்துலக ரீதியில கீர்த்தி பெரும் போராட்டம் நடாத்தினார். அவர் பல மார்க்சிச கோட்பாட்டு, அரசியல் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். கீர்த்தி உயிர்வாழ்ந்த காலத்தில் போலவே அவர் மறைந்து 10ஆண்டுகளின் பின்னரும் இந்நூல்கள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களுக்கு மார்க்சிச வழிகாட்டியாக இருந்து கொண்டுள்ளன.

அவர் முன்னணியில் நின்று அத்திவாரமிட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1996 நவம்பரில் சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யப்பட்டது. சோ.ச.க. அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதிகளுடன் இணைந்து இலங்கையின் உள்ளும் இந்தியத் துணைக் கண்டத்திலும் தொழிலாளர் வர்க்க போராட்ட முன்னோக்கையும் தலைமையையும் வழங்கப் போராடுகின்றது. சோ.ச.க. இலங்கையினுள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்துக்கு எதிராகவும் அணிதிரட்டப் போராடுகின்றது.

இந்த நினைவு நிதி அவர் எழுதிய நூல்களை வெளியிடவும் வேறு பல ட்ரொட்ஸ்கிச, மார்க்சிச நூல்களை வெளியிடவும் பயன்படுத்தப்படும். இந்த 1998 ஜனவரியில் ஆரம்பிக்கும் இந்நிதியை மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆதலால் உங்களது உதவி நிதிகளையும் மற்றும் வாக்குறுதி களையும் தாமதியாது எமக்கு அனுப்பி வைக்கவும்.

### அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

ஜெர்மன்:
:://gleichheit.de

படிப்பகம்

www.padippakam.com



## கீர்த்தி பாலசூரிய மறைவின் 10 வது நினைவு தினம்:



# ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் அரசியல் மறுமலர்ச்சியில் தீர்க்கமான பாத்திரம் வகித்தவர்

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் உலக ட்ரொட்ஸ்கிச அமைப்பான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் விளங்கிய தோழர்.கீர்த்தி பாலசூரிய மறைந்து 1997டிசம்பர் 18ம் திகதியுடன் பத்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. 1968 ஜூனில் நடைபெற்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்ப மகாநாட்டில் கீர்த்தி பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்படும் போது அவருக்கு வயது 19. அதில் இருந்து தொடர்ந்து வந்த 20ஆண்டுகள் அவர் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமையை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். அந்தப் போராட்டத்தில் எந்தவிதமான சமரசங்களுக்கோ அல்லது கொள்கைச் சறுக்கல்களுக்கோ அனைத்துலகவாதத்தில் இருந்து தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கான தடம்புரளல்களுக்கோ கிஞ்சித்தும் இடம்வைக்காது கீர்த்தி போராடினார்.

கீர்த்தி அரசியல் அரங்கில் நுழைந்ததும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக மார்க்சிசத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்ததும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ள தீர்மானம் எடுத்த காலப்பகுதி ஆகும். அந்தவிதத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்புக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், மாணவர்களிடையே வெடித்த கொதிப்புக்கு புதிய முன்நோக்கும் வேலைத்திட்டமும் வழங்கும் பொறுப்பும் ஏற்பட்டது.

இது ஒரு தேசிய ரீதியான பிரச்சினையாகத் தலையெடுக்கவில்லை என்பதை தோழர்.கீர்த்தியும் அவரின் சக சிந்தனையாளர்களும் உறுதியாகப் புரிந்து கொண்டிருந்தனர். லங்கா சமசமாஜக் கட்சியையும் உள்ளடக்கிய அன்றைய பப்லோ மண்டேல் தலைமையிலான திரிபுவாத நான்காம் அகிலத்தின் ஐக்கிய செயலகம், ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளை நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை கைவிட்டதன் பெறுபேறாகவே இலங்கையில் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தில் லங்கா சமசமாஜக் கட்சி பங்காளிகளாக சேரும் துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது என்பதை கீர்த்தி புரிந்து கொண்டிருந்தார்.

ஆதலால் இலங்கை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தோளில் நான்காம் அகிலத்தினதும் இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்தில் அதன் பகுதியாகப் போராடிய இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினதும் அடிப்படைக் கொள்கைகளைப் புனருத்தாரணம் செய்யும் பொறுப்பு சுமத்தப்பட்டது.

"கீர்த்தியின் வாழ்க்கையில் 1985 அக்டோபருக்கும் 1987 டிசம்பருக்கும் இடைப்பட்ட காலப்பகுதி அரசியல் ரீதியில் மிகவும் பயன்மிக்கதும் மகிழ்ச்சிமிக்கதுமென நான் அஞ்சாமல் கூறுவேன். அவர் அனைத்துலகக் குழுவின் கோட்பாட்டு, அரசியல் மறுமலர்ச்சியில் ஈடுசெய்ய முடியாததும் தீர்க்கமானதுமான பாத்திரத்தினை வகித்தார்" என் அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் இன்றைய தேசியச் செயலாளரும் கீர்த்தியின் சக சிந்தனையாளரும் உலக ட்ரொட்ஸ்கிச இயக்க தலைவருமான டேவிட் நோர்த் கூறினார். அவர் இங்ஙனம் கூறியதற்கு முக்கிய காரணம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அன்றைய தலைமையில் முக்கிய இடம் வகித்த பிரித்தானியப் பகுதியான தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஹீலி பண்டா சுலோற்றர் தலைமையின் திரிபுவாத சீரழிவுக்கு எதிரான போராட்டத்தில் கீர்த்தி பாலசூரிய ஆற்றிய பங்களிப்பேயாகும். தோழர்.கீர்த்தியின் மறைவின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி கனடிய ட்ரொட்ஸ்கிஸ்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவு தின விரிவுரையில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது: "1987 டிசம்பர் 23ல் நடைபெற்ற தோழர். கீர்த்தியின் மரணச் சடங்கில் நான் புரட்சிகரத் தொழிலாளர்தும் இளைஞரதும் அடுத்த தலைமுறை தமது உத்வேகத்தினை மா ஓ சேதுங்கிடமிருந்தோ அல்லது பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்தோ அல்லது ஹொசிமிங்கிடம் இருந்தோ அல்லது மார்க்சிஸ்டுகளாக வேஷம் போடும் முதலாளித்துவ தேசியவாதத்தினதும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தினதும் எந்த ஒரு பிரதிநிதியிடம் இருந்தோ பெறப் போவதில்லை ...மாறாக எதிர்காலப் புரட்சிகரப் போராளிகள் கீர்த்தி பாலசூரியவின் அரசியல் முன்மாதிரியில் இருந்தே கற்றுக் கொள்ளப் போகின்றார்கள். கடந்த ஐந்து ஆண்டுகால நிகழ்வுகள் அந்தப் புகழுரையில் எந்தவிதமான மிகைப்படுத்தலும் கிடையாது என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளின் நிகழ்வுகளும் அரசியல் மோசடியையும் கோட்பாட்டுப் போலிகளையும் அடிப்படையாகக் கொண்ட ஸ்டாலினிச தேவதைகளின் மாபெரும் மனிதர்கள் எனப்பட்டவர்களின் புகழுரைக்கு ஈவிரக்கமற்ற அடி கொடுத்துள்ளது. ஆனால் இந்நிகழ்வுகள் மார்க்சிசத்தின் வரலாற்று முன்நோக்கினதும் அடிப்படையாகக் கொண்டுள்ள விஞ்ஞான விதிமுறையினதும் சக்தியை நிரூபிக்கின்றது."

### ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி

தோழர். கீர்த்தியின் நினைவுத் தூபிக்கு இந்த பத்தாவது நினைவு தினத்தன்று மலர்வளையம் சார்த்தும் போதும் சரி கொழும்பு பொதுஜன நூல்நிலைய மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடாத்தும் போதும் சரி ஐந்தாவது ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் டேவிட் நோர்த் குறிப்பிட்ட "மார்க்சிசத்தின் வரலாற்று முன்நோக்கினதும்" "விஞ்ஞான விதிமுறையினதும் சக்தியும்" இன்னும் பலமடங்கு நிரூபிக்கப்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்டாலினிச அரசுகள் வீழ்ச்சிகண்டுள்ள ஒரு நிலையிலும் சீனா அடிமை உழைப்பின் மையமாக ஏகாதிபத்திய முதலீட்டாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டுள்ள ஒரு நிலையிலுமே இதை காண்கிறோம்.

கீர்த்தி தமது அரசியல் வாழ்க்கையை தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் வாழ்க்கை மிகவும் "கேவலமான வடிவங்களின் ஆளுமைக்குள்ளான" நிலைமையில் நடாத்த வேண்டி இருந்தது. இதனால் கீர்த்தியின் அரசியல் நடவடிக்கை ஒவ்வொன்றும் இந்த கேவலமான அரசியல் நடவடிக்கைகளின் பிடியில் இருந்து தொழிலாளர் இயக்கத்தினை விடுதலை செய்வதாக விளங்கியது.

கீர்த்தியின் வாழ்க்கையின் சிறப்பு முக்கியத்துவத்தையும் இன்றைய காலப்பகுதியில் அவர் போராடிய கொள்கைகளதும் முன்நோக்கினதும் முக்கியத்துவத்தையும் மதிப்பீடு செய்ய அவரின் சொந்த அரசியல் அபிவிருத்தி வேரூன்றியுள்ள இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் அரசியல் போராட்டங்களை மீளாய்வு செய்தல் அவசியம். ஆனால் எமக்குள்ள இந்த குறுகிய இடத்துக்குள் நாம் அத்தகைய ஒரு பரந்த ஆய்வில் இறங்குவது சாத்தியம் அல்ல. உதாரணத்துக்கு ஓரிரு சம்பவங்களை மட்டும் இங்கு குறித்து வைப்போம்.

சிறீலங்கா சமசமாஜ கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டதில் இருந்து இலங்கையில் தொழிலாளர் வர்க்க அரசியல் போராட்டங்களுக்கு மரண அடி கொடுப்பதிலும் ஏகாதிபத்திய சுரண்டல்களுக்கு வாய்ப்பான வர்க்க நிலைமைகளை சிருஷ்டிப்பதிலும் இலங்கை ஆளும் வர்க்கத்தினர் ஈடுபட்டிருந்தனர். 1971 ஏப்பிரல் கிளர்ச்சியை தொடர்ந்து கூட்டரசாங்கம் 25000க்கும் அதிகமான கிராமப்புற இளைஞர்களை பலியெடுத்ததோடு தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் சுயாதீனமான அரசியல் நடவடிக்கைகளுக்கும் பெரும் கட்டுப்பாடுகளும் விதித்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தமிழ், சிங்கள பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டன. பு.க.க.போராளிகள் இருவர் பொலிசாரால் கொலை செய்யப்பட்டனர். இந்த நிலைமையில் வரையறுக்கப்பட்ட வளங்களுடனும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் எதிர்ப் புரட்சிக் கூட்டை உடைத்து எறிவதிலும் அந்த எதிர்ப்புரட்சிக் கூட்டின் அரசியல் தாக்கங்களின் படிப்பினைகளை தொழிலாளர்களின் முன்னேற்றமான பகுதியினரிடையே முன்னெடுப்பதிலும் ஈடுபட்டது. சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை கூட்டரசாங்கத்தில் இருந்து விலகும்படியும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கும்படியும் கோரும் பிரச்சாரத்தை பு.க.க.நாடுதழுவிய விதத்தில் முன்னெடுத்தது. இது வெறும் தனி பிரச்சார இயக்கமாக இருக்கவில்லை. வர்க்க சுயாதீனத்தையும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியின் புரட்சிகர மரபுகளை புனருத்தாரணம் செய்வதையும் இது அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்த விதத்தில் சோசலிசப் புரட்சிக்கான சுயாதீனமான தொழிலாளர் வர்க்க புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்தி வந்தது.

கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வந்த துல்கிரிய துணி ஆலை தொழிலாளர்களுக்கு எதிரான வேட்டையில் கூட்டரசாங்கம் ஈடுபட்டது. தொழிற்சங்க தலைவர்களாக விளங்கிய சமசமாஜக் கட்சித் தலைவர்கள் இந்த வேட்டைக்கு துணை போயினர். இந்த ஆலை தொழிலாளர்களின் தொழில் உரிமை காக்கும் போராட்டத்தை வெறும் தொழிற்சங்கவாத எல்லைக்குள் கால்கட்டுப் போட எடுக்கப்பட்ட சகல முயற்சிகளுக்கும் எதிராக அதனை நாடு தழுவிய ரீதியில் தொழில், ஜனநாயக உரிமைகள் காக்கும் போராட்டமாக முன்னெடுக்க பு.க.க.போராடியது. தீவு பூராவும் 22 கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அம்பலாங்கொடை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை இந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கூட்டரசாங்கத்தின் சிங்கள பௌத்த சோவினிசத்தை தூண்டும் கொல்வின் ஆர்.டி.சில்வாவின் அரசியலமைப்புக்கு எதிராக தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே பெரும் கொதிப்பு உருவாகி இருந்த நிலையிலும், பல்கலைக் கழக அனுமதி தொடர்பான கூட்டரசாங்கத்தின் இனவாத தரப்படுத்தல் அட்டூழியங்களால் தமிழ் இளைஞர்கள் தீவிரமடைந்திருந்த நிலையிலும் யாழ். ரிம்மர் மண்டபத்தில் நடாத்தப்பட்ட துல்கிரிய கூட்டத்தில் தோழர்.கீர்த்தி முன்வைத்த சோசலிச முன்நோக்கும் வேலைத்திட்டமும் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்களை பெரிதும் ஈர்த்துக் கொண்டிருந்தது. கூட்டம் முடிந்த நிலையிலும் கூட்டத்துக்கு வருகை தந்த இளைஞர்கள் மண்டபத்தில் இருந்து வெளியேறவில்லை, துரோகத் தலைவர்களின் கூட்டரசாங்க அரசியலினால் ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினருக்கு இழைக்கப்பட்ட துரோகத்தினால் தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் இருந்து அன்னியப்பட்டுப் போன இம்மக்கள் பகுதியினரை மீண்டும் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் கொணரும் வரலாற்றுப் பாத்திரத்தின் அவசியத்தை கீர்த்தி நன்கு புரிந்து கொண்டிருந்தார்.



கீர்த்தி பாலசூரியவின் மார்க்சிசத்துக்கான போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் கண்காட்சியை தரிசிப்போர்

இதைத் தொடர்ந்து கீர்த்தி குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் விசாரணைகளால் சிறைக்குள் தள்ளப்பட்ட 1971 ஜே.வீ.பி.அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடாத்திய போராட்டம் சகல வகையறாக்களையும் சேர்ந்த திரிபுவாதிகள், தாராண்மைவாதிகள், தொழிற் சங்கவாதிகளின் வர்க்க சமரச சீர்திருத்த வேலைத்திட்டத்துக்கு எதிராக விளங்கியது. இந்த சீர்திருத்தவாத வேலைத் திட்டத்தின் முன்னணியில நின்றவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக விளங்கிய எச்.என். பெர்னாந்து. இது முதலாளித்துவ அரச இயந்திரத்தை உடைத்து எறிவது தொடர்பாக தொழிலாளர் வர்க்கப் இட்டுநிரப்ப வேண்டிய புரட்சிகர வரலாற்றுப் பாத்திரத்தை மதிப்பிறக்கம் செய்வதாக விளங்கியது. "அரசியல் கைதிகளை விடுதலை செய்ய எப்படிப் போராடக் கூடாது?" என்ற பு.க.க.பிரசுரத்தில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் போராட்டத்தின் அரசியல் பிரச்சினைகளையும் அதில் தொழிலாளர் வர்க்கம் ஆற்ற வேண்டிய பாத்திரத்தினையும் எந்த விதத்தில் அது கூட்டரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றும் போராட்டத்துடன் பிரிக்க முடியாத விதத்தில் இணைந்துள்ளது என்பதையும் கீர்த்தி விளக்கினார். இந்த பிரச்சார இயக்கம் அன்று தொழிலாளர்களிடையே வர்க்கம் போராட்டம் வளர்ச்சி கண்டு வந்த நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் தாக்கம் காரணமாக 1970பதுகளின் கடைப்பகுதியில் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட ஜே.வீ.பி. தலைவர் றோஹண விஜேவீர கொழும்பு மாநகர சபை

18 ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் அமைப்புச் சட்ட பிரேரணைகள் சிங்களதமிழ் மக்களுக்கு எதிரான சதி

1ம் பக்கத் தொடர்ச்சி

வார்த்தைகளை வாந்தி யெடுத்துவிட்டு கடைசி 25ம் அதிகாரத்தின் 227ம் பக்கம் "அதிகாரக் கையளிப்பு" எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது:

"227(1) ஏதேனும் ஒரு அதிகாரம் கடமை அல்லது பணி வேறு ஏதேனும் ஒரு நபருக்கு கையளிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஏதேனும் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு நிலையில் அத்தகைய கையளிப்பை நோக்காது அந்த அதிகாரத்தை வழங்கிய நபரால் அந்த அதிகாரத்தை கடமையை அல்லது பணியை நடைமுறைக்கிட அல்லது அமுல் செய்தல் எந்த ஒரு தருணத்திலும் அந்தக் கையளிப்பை மீளப் பொறுட் பேற்க உத்தரவிட முடியும்.

2.இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் 1வது சரத்தில் "நபர்"என்பதில் ஏதேனும் ஒரு தனிச் சபையோ அல்லது அதிகார சபையோ அடங்கும்"

சட்ட நிபுணர்கள் எனக் கூறிக் கொள்பவர்களின் வார்த்தையில் இது ஒரு பலமான முடிச்சாகும். இதைத் தெளிவான வார்த்தைகளில் சொன்னால் இது கூறுவதாவது ஒரு சபைக்கு அல்லது அதிகார சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது அந்த அதிகாரம் வழங்கப்பட்ட சபைக்கு அல்லது அதிகார சபைக்கு தம்மால் வழங்கப்பட்ட அதிகாரத்தை தாமே நடைமுறைக்கிட முடியும் என்பதாகும். இங்கு இடம்பெற்றுள்ளது கையளிக்கப்பட்ட அதிகாரத்தை நீக்கிவிடும் அதிகாரத்தைக் கையேற்பதாகும். இதன்படி வாயடித்துக் கொள்ளும் அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு மோசடி இல்லையா? கேட்ட கேள்வியே அதற்குப் பதிலும் வழங்குகின்றது.

அது மட்டும் அல்ல. இந்தப் பிரேரணைக்கு இணங்க அதிகாரப் பரவலாக்கம் செய்வது நாட்டின் ஜனாதிபதியாவார். அவர் அல்லது அவள் வழங்கிய அதிகாரத்தை திரும்பவும் பெற்று நடைமுறைக்கிடுவது ஜனாதிபதியே. அங்கு அந்த அதிகாரத்தை கையேற்பது பாராளுமன்றத்துக்கு ஊடாக இடம்பெற வேண்டியது அவசியம் இல்லை. ஆதலால் இது நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரங்களை கள்ள வழியில் அழைப்பதாகும்.

இன்னுமொரு விடயத்தைக் கவனத்தில் கொள்வது பொருத்தமானது. ஜனாதிபதி திரும்பவும் கையேற்றுக் கொண்டு நடைமுறைக்கிடக் கூடியது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் புதிதாக மாகாணங்களுக்குக் பகிர்ந்தளித்த அதிகாரங்கள் மட்டும் அல்ல. புதிய அரசியல்மைப்புச் சட்டத்துக்கு முன்னர் உள்ளூராட்சிச் சபைகள் போன்றவை வசம் இருந்த அதிகாரங்களும் புதிய அரசியலமைப்பில் உள்ளடங்கி இருப்பதால் அந்த அதிகாரங்களைக் கூட சர்வாதிகார அதிகாரங்களைக் கைக்கொள்ளும் ஒரு ஜனாதிபதி தனது கைக்குள் போட்டுக் கொள்ள முடியும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியலமைப்பு பிரேரணைகள் அடியோடு மோசடியும் சதியும் நிறைந்தவை என சோசலிச சமத்துவக் கட்சி கூறுவதை நிரூபிக்க அந்த உதாரணம் மட்டுமே போதுமானது.

சோ.ச.க.வெளியிடும் இந்த அறிக்கையை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் இன்னும் சில விடயங்களை சுட்டிக்காட்டுதல் அவசியம். நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கவோ அல்லது பாதுகாக்கவோ முடியாது என எமது கட்சி வலியுறுத்தி வந்துள்ளது . இது இன்று நிரூபணமாகி உள்ளது. வர்க்க சமரச, சீர்திருத்தவாத பொய்யர்களான இடதுசாரிகளும் அவ்வாறே குட்டி முதலாளித்துவ தீவிரவாத சகல போக்குக்களும் எமது இந்த நிலைப்பாட்டுக்கு எதிராக கூப்பாடு போட்டது ஒரு தடவை இரு தடவை அல்ல. அது அவர்கள் சகலரும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி கட்டியெழுப்பும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்துக்குக் காட்டும் அச்சத்தினதும் வெறுப்பினதும் வெளிப்பாடாகும். ஆனால் விஞ்ஞானபூர்வமான மார்க்சிசம் கைவரப்பெற்றுள்ள வரலாற்று சட்டங்கள் சமூக யதார்த்தத்தினுள் நிரூபணமாவதை அவர்களின் முதலாளித்துவச் சார்பு கதையளப்புக்களாலும் கூச்சல்களாலும் தவிர்த்துவிட முடியாது. இதை புதிய அரசியலமைப்புச் சட்ட பிரேரணைகள் சுட்டிக்காட்டிக் கொண்டுள்ளன. பொதுஜன இயக்கத்துக்கு விஞ்ஞானபூர்வமான அறிவினால் ஆயுதபாணியாகுவது அத்தியாவசியமாக உள்ளது. வெற்றிக்கான முன்நிபந்தனை அதுவேயாகும்.

## அடியோடு அடக்குமுறைச் சட்டம்

யூ.என்.பி.யினாலும் சிறீலங்கா கூட்டரசாங்கத்தினாலும் கொலைகார அடக்குமுறைக்காக பயன்படுத்தப்பட்ட பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை அடியோடு அரசியலமைப்புச் சட்டத்தினுள் திணிப்பது பொதுஜன முன்னணி பிரேரணையில் அடங்கியுள்ளது.

219வது பிரிவில் (1) சரத்து கூறுவது இதுதான்: "அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவது ஆரம்பமாகும் வரை நடைமுறையில் இருந்த பொதுஜன பாதுகாப்புச் சட்டம் பாரா்ளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஒரு சட்டமாகக் கணிக்கப்படும்.' பொதுமக்கள் விரோத ஆட்சியின் பாதுகாப்புக்கு என்ன குறைச்சல்?

அது மட்டுமன்றி இந்த பிரேரணைகள் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய ஒரு தொகை பொய்கள் சதிகளைக் கொண்ட சரத்துக்கள் "பொதுமக்கள் பாதுகாப்பு" என்ற பெயுரிலான இந்த 23வது சரத்தில் அடங்கி உள்ளன. 221வது சரத்தின் 1ம் 11ம் பிரிவுகள் இத்தகையவை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி அறிக்கை வெளியிட்ட சமயத்தில் "மாகாண முதல் அமைச்சரின் ஆலோசனையின் மீது செயற்பட்டு, ஆளுனரால் ஸ்திரமாக்கப்பட்டுக் காட்டப்படும் இரண்டாவது துணை அறிக்கையின் 1வது பட்டியலின் விடயங்கள், பணிகள் அல்லது பொறுப்புக்கள் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தினால் அல்லது அதன் பிரதிநிதிகளால் அல்லது பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மூலம் அதன் ஆளுமை அதிகாரத்தை நடைமுறைக்கிடுவதை" செய்யமுடியும். இரண்டாவது துணை அறிக்கையின் 11வது பட்டியலில் அடங்குவன மாகாண சபைகளுக்கு கையளிப்பதாகக் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளாகும். ஜனாதிபதி ஒரு அடியில் அந்த நடவடிக்கைகளை மத்திய அரசாங்கத்திடம் கைப்பற்றிக் கொள்ள முடியும்.' இங்கு அதிகாரப் பரவலாக்கம் என்ற பூச்சாண்டியில் மிஞ்சிக் கிடக்கும் அர்த்தம் என்ன? இதனை அதிகாரப் பகிர்வு என முதலாளித்துவ வயிற்றுமாரிகளால் மட்டுமே காட்ட முடியும். அவர்கள் சகலரும்(ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக தமக்கு வழங்கிய எழுத்து மூலமான வாக்குறுதியை நம்பிய ஜே.வீ.பி., சமாதானப் பேச்சுவாத்தை வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்த விடுதலைப் புலிகள் உட்பட) 1994 தேர்தல் சமயத்தில் பொதுஜன முன்னணி வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து நாடு பூராவும் வலம் வந்தது இந்த மோசடியில்லையா?இதில் மாற்றம் என்னவென்றால் தேர்தல் மோசடியில் பொதுமக்களை மூழ்கடிப்பதற்காக எருமைகளாக வேலை செய்தவர்கள் இன்று அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளின் பளுவைச் சுமக்கும் ஊர்தியின்(தவளம) கழுதைகளாக மாறியிருப்பதுதான்.

இந்த 221 சரத்து இதைக் காட்டிலும் மோசமான நச்சுத்தனமான சதிகார இலக்குகளைக் கொண்டுள்ளது. அதன் 1



சந்திரிகா குமாரதுங்க



ஜீ.எல். பீரிஸ்

(அ) சரத்துக்கள் குறிப்பிடுவது. "பொதுமக்களின் உயிர்வாழ்க்கையை பாதுகாப்பது தொடர்பாக ஏதேனும் ஒரு மாகாணத்தில் அல்லது மாகாணத்தின் பகுதியில் அச்சுறுத்தல் உருவாகுமானால் பொதுஜன பாதுகாப்புடன் தொடர்பான சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைக்கிடும் அறிக்கையை வெளியிடும்படி ஆளுனர் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கலாம்."என்பதாகும். இந்தச் சரத்து தெளிவுபடுத்துவது என்னவெனில் இந்தக் "கோரிக்கையை" அமுல் செய்ய ஜனாதிபதி கட்டுப்பட்டவர் அல்ல என்பதையாகும்.

## கறுப்பு ஜூலை

இந்தச் சரத்தை மனதில் கொண்டு நாட்டில் உருவாகக் கூடிய நிலைமையை நாம் ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் 1983 கறுப்பு ஜூலை சமயத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமா? அன்று ஜே.ஆர்.ஜயவர்தனவும் அவரின் இனவாத குண்டனான சிறில் மத்தியூ முதலான அமைச்சர்களும் முன்நின்று நாடு பூராவும் தமிழர் விரோத மக்கட் படுகொலைகளையும் இரத்தக் களரியையும் கட்டவிழ்த்து விட்டனர் என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. ஜனாதிபதி இந்த பேரழிவினைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுத்தாரா? தமது அமைச்சரவையின் தொண்டமான் உட்பட்ட அமைச்சர்கள் கோரிக்கை விடுத்திருந்தும் கூட ஜனாதிபதியின் நடவடிக்கையானது முடிந்தமட்டும் அழிவையும் கொள்ளைகளையும் கொலைகளையும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்ய தமது காடையர் படையணிகளுக்கு கால அவகாசம் வழங்குவதாகவே இருந்தது. அவற்றை நிறுத்துவதற்கு அவர் அதிக்ாரத்தைப் பயன்படுத்தவில்லை.

பொதுஜன முன்னணிக்குள் இன்று நுழைந்து கொண்டுள்ள அல்லது அதற்கு பந்தம் பிடித்துக் கொண்டு பின்னணியில் நின்று ஒப்புதல் வாக்குமூலம் தமது பழிகளை களைந்து கொள்ள முயற்சிக்கும் அமைப்புக்களோ அல்லது வேறு பிற்போக்கு சக்திகளோ 1983 போன்ற இனவாத இரத்தக் களரி நிலைமை மீண்டும் உருவாகுமானால் முதலாளித்துவ அரசின் ஜனாதிபதி பொதுஜன பாதுகாப்புக்கான கோரிக்கைகளை இட்டுநிரப்புவார் என்பதற்கு தரும் உத்தரவாதம் என்ன? இது முதலாளித்துவ ஆட்சியாளர்களின் நல்நெஞ்சத்தைக் கணக்கில் கொண்டு பணயம் வைக்கக் கூடிய பிரச்சினை அல்ல. அதற்குப் பதிலாக யூ.என்.பி. சிறீலங்கா முதலாளித்துவ அரசாங்கங்கள் கடந்த 50 ஆண்டுகள் பூராவும் நடைமுறைக்கிட்டு. நிரூபித்துள்ள இனவாத, மக்கள் விரோத வேலைத்திட்டங்களின் அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியவையாகும். இந்த அனுபவங்கள் இந்தச் சகாப்தத்தின் முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்கு பாத்திரத்துடன் இணைந்து கொண்டுள்ளன. இது உலகம் பூராவும் உதாரணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கணக்கில் எடுக்கும் போது அத்தகைய தீர்மானத்தை எடுப்பதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. அத்தகைய தீர்மானம் சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் ஜே.ஆர்.ஜயவர்தன பேரழிவு நிறைந்த திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுலுக்கு இடுவதற்கான வழிவகைகளை வகுத்துக் கொள்ளும் பொருட்டு பொதுமக்கள் இயக்கத்தை சிதறடிக்கவும் நசுக்கவும் பயன்படுத்தியது போல் இன்றும் இனவாத இரத்தக் களரி பெரிதும் உக்கிரமான முறையில் தொடுக்க வேண்டும் எனவும் அதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் முழு ஆதரவும் கிடைக்கும் என்பதையும் காட்டுகின்றது. இதன் அடிப்படையில் பொதுஜன பாதுகாப்புக்கு அவசியமான அரசியல் நடவடிக்கையை எடுக்க தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றிணைந்து கொள்ள வேண்டும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியலமைப்பு சீர்திருத்தப் பிரேரணைகளினுள் அடங்கியுள்ள இத்தகைய பொதுஜன எதிர்ப்பு திட்டங்கள் எதனையும் பற்றி இந்தப் பிரேரணைகளை எதிர்ப்பதாக கூச்சல் போடும் ஜே.வீ.பி.யோ அல்லது சிங்கள ஆணைக்குழு போன்ற எந்த ஒரு அமைப்பே சுட்டிக்காட்டவில்லை. அதற்குக் காரணம், தமிழர் விரோத இனவாதம் அவர்களின் எதிர்ப்பின் ஒரு மையமாக விளங்குவதேயாகும். அவர்களின் ஒரே பிரச்சார சுலோகம் "நாட்டை பிரிக்கிறார்கள்" என்பதே. அது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மோசடியினதும் சதியினதும் நிழலின் கீழ் தமது பாசிச சக்திகளை அணிதிரட்டுவதேயாகும். அது பொதுஜன முன்னணி பிரதிநிதித்துவம் செய்யும் ஏகாதிபத்திய அவசியங்களுக்கு வேண்டிய பதிலீட்டு சக்தியாகும். ஜே.வீ.பி.யைப் போலவே சிங்கள ஆணைக்குழுவைச் சேர்ந்த பலரும் 1994ல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி நாற்காலியில் ஏறுவதற்கு ஆதரவு வழங்கியவர்கள் என்பதை நினைவில் கொள்ளும்போது இதைப் புரிந்து கொள்வது சங்கடமானதல்ல.

## அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்

அரசியலமைப்புச் சட்ட பிரேரணையை பேணிக்காப்பவர்களைப் போலவே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முதலாளித்துவக் கையாட்களும் திட்டமிட்டு மூடிமறைக்கும் பல பிற்போக்கு அம்சங்கள் இந்தப் பிரேரணையில் அடங்கி உள்ளன. பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துக் கொண்டு பிரேரணையின் 111வது பிரிவில் எழுதப்பட்டுள்ள நானாவித சுதந்திரங்கள் என்ற பிரிவு இதற்கு நல்ல உதாரணமாகும். இதன் 8வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "இந்த அரசியலமைப்பில் வெளியிடப்பட்டுள்ள உரிமைகள் விடயத்தில் எதுவிதமான கட்டுப்பாடும் விதிக்க முடியாது." என்ற வாய்வீச்சுடன் ஆரம்பமாகும் இந்த அத்தியாயம் அதைத் தொடர்ந்து கூறுவது இதுதான்: "10(16)சுதந்திரம் இல்லாமல் செய்யப்பட்ட சகலரும் மனித நேயத்துடனும் மனிதனின் சுய கௌரவத்தை காக்கும் வகையில் கௌரவத்துடனும் கணிக்கப்பட வேண்டும்." சுதந்திரத்தை பறித்துக் கொள்ளமுடியும் . ஆனால் கிடைக்கும் கணிப்பில் கௌரவத்துக்கோ குறைச்சல்

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. எந்தளவுக்கு இது அர்த்தமற்றது ? இது பொதுஜன முன்னணி அரசாங்கம் திறந்த பொருளாதாரத்துக்கு மனிதக் கோலம் வழங்குவதாக அளித்த வாக்குறுதியை மீண்டும் நினைவுக்கு கொணரும் மற்றொரு பிதற்றலாகும்.

சிறைப்படுத்தப்படும் ஒருவரை மனித நேயத்துடன் கணிக்கும் விதம் அந்த அத்தியாயத்தின் 8வது பிரிவின் (12)வது சரத்தில் குறிப்பிடப்படுகின்றது. அதன்படி தமக்கு எதிராக சாட்சியமளிக்கும்படியோ அல்லது குற்றவாளியாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்படியோ ஒருவரை நிர்ப்பந்திக்கக் கூடாது." பிற்போக்கு ஆட்சி நிறுவனங்களைப் போலவே மாபியா கும்பல்களும் நிர்ப்பந்தம் செய்ததாகவோ அல்லது செய்வதாகவோ என்றுமே ஒப்புக் கொண்டது கிடையாது. அதற்குச் சாட்சியாக அவர்கள் தமது வேட்டைக்கு உள்ளான பேர்வழியிடம் தாம் கேட்ட கேள்விகளில் எந்தவிதமான பலவந்தங்களும் இருந்தது கிடையாது என்பதோடு உயிர்பாதுகாப்புக்கான உத்தரவாதமும் இருந்ததாகக் கூறிக் கொள்கின்றார்கள். பிரச்சினை இத்தகையது என்பது பிரசித்தமானது : "நாம் பலவந்தப் படுத்தாவிடினும் உயிர் பாதுகாப்பு வேண்டின் எமது பிரேர்ணைக்கு இணங்குமாறு நாம் உங்களை வேண்டுகின்றோம்." என்பதாகும். எந்த ஒரு போதனை நூலின் படியும் இது ஒரு வேண்டுகோளே தவிர பலவந்தம் அல்ல. பொதுஜன முன்னணி அரசாங்கம் பொதுமக்களின் கண்களில் இந்த விதத்திலேயே மண்தூவுகின்றது.

அடிப்படை உரிமைகளைப் பற்றிக் குறிப்பிடும் அத்தியாயம் சமூக அநீதி, சமத்துவமின்மையை சட்டரீதியான தாக்குவதாக உள்ளது. அதன் 11வது சரத்தின் 4வது உப பிரிவு கூறுவதாவது : வாய்ப்பற்ற நிலைமைக்கு உள்ளாகி இருப்போர் அல்லது குறைந்த சலுகை கொண்ட பேர்வழிகள் அல்லது குழுக்களை பாதுகாக்கும் அல்லது .அவர்களிற்கு சலுகை வழங்கும் பணிக்கான சட்டத்தினால் உப சட்டத்தின் மூலம் அல்லது நிறைவேற்று நடவடிக்கைகள் மூலம் ஒழுங்குகள் செய்வது இந்த அரசியலமைப்பில் உள்ளடங்கிய எதனாலும் தவிர்க்கப்படலாகாது. "என்கிறது. வாய்ப்பற்ற, குறைந்த சலுகைகள் கொண்ட நிலைமைக்கு மக்கள் ஒதுக்கித் தள்ளப்படுவதை அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரிக்கின்றது. அந்த நிலைமையை ஒழித்துக்கட்ட இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. இதற்கான காரணத்தை தெளிவுபடுத்த வேறு விமர்சனம் வேண்டியதில்லை. இவை இங்ஙனம் வர்க்க சமுதாயம் உரிமையாக்கிக் கொண்டுள்ளதும் இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தினுள் உக்கிரம் அடைந்துள்ளதுமான சமூக அநீதிகளின் காரணமாகவே ஏற்படுகின்றன. இந்த விதத்தில் பார்க்கும் போது எதிர்காலத்தில் முன் எடுக்கப்படப் போவதாகக் காட்டப்பட்டுள்ள "செயல் திட்டங்கள்" முற்று முழுதான மோசடியாகும். பூகோளமயமான முதலாளித்துவ பொருளாதாரத்தின் கீழ் சகல நாடுகளிலும் இடம்பெறுவது விரல்விட்டு எண்ணக்கூடிய செல்வந்தர்களுக்கும் பெரும்பான்மையினரான ஏழைப் பொது மக்களுக்கும் இடையேயான பொருளாதார, சமூக இடைவெளி முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு வேகமாக விரிவடைந்துள்ளது.

இந்தக் காட்டுமிராண்டி சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ அமைப்பின் கீழ் பொதுமக்களின் எந்த ஒரு பகுதியினரதும் அடிப்படை உரிமைகளையும் காக்க முடியாது. அதைப்பற்றி பேச்சுக்கள் இடம்பெறும் சகல இடங்களிலும் வெறும் வம்பளப்பை மட்டுமே காணக்கூடியதாக உள்ளது. உதாரணத்துக்கு வீடுகளைப் பெறுவதற்கான பொதுமக்களின் அடிப்படை உரிமையை எடுத்துக் கொள்ளுங்கள். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தின் 14வது பிரிவில் அதைப்பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அது வருமாறு : "சகலருக்கும் தமது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கும் வீட்டுக்கும் கடிதத் தொடர்புகளுக்கும் தொலைத் தொடர்புகளுக்கும் மதிப்புக் காட்டும் உரிமை உள்ளதோடு அவரின் கௌரவம், பெருமை விடயத்தில் சட்டவிரோத அவமானப்படுத்தல்களுக்கும் அவர் கீழ்ப்படிய வேண்டியதில்லை."



இனவாத யுத்தத்தினால் அகதிகள் முகாம்களில் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள்

வீட்டுக்கு உரிமை கிடையாது. ஆனால் அதை கௌரவிக்கும் உரிமை உண்டு. மரங்களின் அடியிலும் தாழ்வாரங்களிலும் வாழத் தள்ளப்பட முடியும். ஆனால் அதைப் பற்றி அவமானத்துக்கு உள்ளாக்கப்பட முடியாது. எந்தளவுக்கு வெறும் வார்த்தை ஜாலங்கள்? வார்த்தை ஜாலங்களால் போடப்படும் வெறும் கூச்சல்கள் முதலாளித்துவ அமைப்பின் வங்குரோத்தின் எதிரொலிகளாகும். சமத்துவமான அடிப்படை உரிமைகளை சோசலிச சொத்து, ஆட்சி அமைப்பின் கீழ் மட்டுமே உத்தரவாதம் செய்ய முடியும்.அதாவது, சோசலிச சமத்துவக் கட்சி முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே உத்தரவாதம் செய்ய முடியும்.

## இளம் தலைமுறையினர் அடிமைச் சேவைக்கு

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேலைத்திட்டம், முதலாளித்துவ அமைப்பை பேணி, சமூக அநீதியையும் சமத்துவமின்மையையும் உக்கிரமாக்குவதே. அதற்காக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் தற்சமயம் அனுபவிக்கும் உரிமைகளை மேலும் மேலும் வெட்டித்தள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தக் கடைகெட்ட இலக்குக்கு இளம் தலைமுறையினரையும் பலிகடாக்கள் ஆக்குகின்றது. இலவசக் கல்வி வெட்டு அதன் முக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

அரசியலமைப்புச் சட்ட பிரேரணையின் மூலம் இலவசக் கல்வி உரிமையில் பிரமாண்டமான வெட்டுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு 22வது சரத்தின் (6)வது பிரிவு கூறுவதாவது : "5வயதுக்கும் 14வயதுக்கும் இடையிலான சகல பிள்ளைகளுக்கும் அரசினால் வழங்கப்படும் இலவசக் கல்வியைப் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு." ஏனையோருக்கு ? பணம் செலுத்தி பெறும் கல்வி !

எதிர்காலத் தலைமுறையினருக்கு மிகவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை தயார் செய்வதைச் சகல முற்போக்கு சமூக சக்தியும் தமது முக்கிய இலக்காக்கிக் கொண்டன. அதனாலேயே இலங்கையின் தொழிலாளர் வர்க்கமும் அதன் முக்கிய அரசியல் கட்சி என்ற வகையில் லங்கா சமசமாஜக் கட்சியும் 1940பதுகளின் முற்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கத்துக்கும் அதன் கையாட்களான முதலாளித்துவ தேசிய காங்கிரஸ் தலைமைக்கும் எதிராக இலவசக் கல்வி உரிமைக்காகப் போராடியது. இன்று சமசமாஜக் கட்சியும் கூட்டுச் சேர்ந்துள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் அந்த உரிமையை அடியோடு கிள்ளி எறிய நடவடிக்கை எடுக்கின்றது. ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சி, இளைஞர்கள் இனவாத யுத்தத்தின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு பலியாகி நாசமாகிப் போவதையே உரிமையாக்கிக் கொடுத்துள்ளது.

அவர்களும் மேலதிகப் படிப்பு அவசியம் இல்லை என்பதை இராணுவத்துக்கு ஆட்திரட்டும் தகுதிப் பட்டியலே காட்டுகின்றது. மேலதிகப் படிப்பை சொத்துப் பத்துக்களைக் கொண்ட குடும்பங்களின் பிள்ளைகள் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். இது முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்தின் சட்டமாகும். இதற்கு முரணான விதத்தில் சோசலிச சமத்துவத்தின் சட்டம், 5வயதுக்கு மேல் இளவயதில் இருந்தே எதிர்காலத் தலைமுறையினரைப் பொறுப்பேற்று அவர்களுக்கு முழு வாழ்க்கையையும் நடாத்துவதற்கு அவசியமான கல்வியையும் பயிற்சியையும் அரசே இலவசமாக வழங்குவதாகும்.

சிறுவர்களை அடிமைச் சேவையில் ஈடுபடுத்துவது முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியின் உக்கிரத்துக்கு ஏற்ப உலகளாவிய ரீதியில் பரந்துபட்டு வருகின்றது. அந்த நச்சுத்தனமான வேலைத் திட்டத்தை அரசியலமைப்பு சட்டமாக்குவதே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரேரணைகளாகும். 22வது சரத்தின் 7வது பிரிவுக்கு இணங்க எந்த ஒரு பிள்ளையோ இம்சைக்குரிய எந்த ஒரு நடவடிக்கையிலோ சேவையிலோ ஈடுபடுத்தப்படக் கூடாது. " இம்சை இல்லாத நடவடிக்கைகளில் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட முடியும். இத்தகைய ஓட்டைகள் திட்டமிட்டுச் சிருஷ்டிக்கப்படுவது முதலாளிகளின் இலாப நோக்கங்களுக்கு இளம் தலைமுறையினரை பலிகடாக்கள் ஆக்குவதற்கேயாகும்.

இனவாத யுத்தத்தினை நிறுத்தி, அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் மக்களின் மீதான அடக்குமுறைகளை நிறுத்துவதை இலக்காகக் கொண்டு அரசியலமைப்புச் சட்டப் பிரேரணைகள் முன்வைக்கப்படுவதாக பொதுஜன முன்னணி அரசாங்கம் கூறுவது பொய்யாகும் இந்த நோக்கம் உண்மையாக இருக்குமானால் இராணுவ சேவையை கட்டாயமாக்கத் தள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டச் சரத்து எதற்கு ?

அரசியலமைப்பு பிரேரணைகளின் 23வது சரத்து வருமாறு : "1.எந்த ஒரு நபரையும் பலாத்காரமாக வேலை செய்யுமாறு கட்டளையிடக் கூடாது."

2. இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் பணிகளுக்காக கட்டாயமாக வேலை வாங்கு என்பது,

(இ). இராணுவ தன்மை வாய்ந்த எந்த ஒரு சேவைக்கோ ஆயுதப் படைகளின் அங்கத்தவராக இருந்து கொண்டு சேவை செய்ய நனவாக எதிர்ப்புக் காட்டும் ஒருவர் தொடர்பாக அந்தச் சேவையின் பேரில் ஆற்றுவதற்கு அவருக்கு சட்டத்தால் கட்டளையிடப்படும் ஏதேனும் ஒரு வேலை உள்ளடங்க மாட்டாது. " நேரடியாக கட்டாய இராணுவ சேவை ஊர்ஜிதம் செய்யப்படாது போனாலும் இந்தச் சரத்துக்களின் அர்த்தம் தெளிவானது. அதையும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க பலவந்தப்படுத்த முடியாது." என்பதற்குச் சமமானது. கட்டாய இராணுவ சேவைக்கு பலவந்தப் படுத்தப்படும் முறை இங்கு நுழைக்கப்பட்டுள்ளதே வேறுபட்டுள்ளது. கட்டாய இராணுவ சேவையை எதிர்ப்போரிடம் அதைக் காட்டிலும் கீழ்த்தரமானதும் கேவலமானதுமான கடமையைக் கையளிப்பதன் மூலம் இது நெருக்கப்படுகின்றது. இந்தக் காட்டுமிராண்டி தேவை அரசியலமைப்புத் திட்ட தயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் தலைக்குள் எந்தளவுக்கு பிரதிபலிக்கின்றது என்பதை மேலே மேற்கோளாகக் காட்டிய 23ம் பிரிவின் (2) இ உப பிரிவு 2(இ) உப பிரிவுகளில் இரண்டு தடவைகள் திரும்பத் திரும்ப கூறி வைக்கப்பட்டுள்ளது. இது அச்சுப் பிழையினால் ஏற்பட்டதல்ல. யுத்தவெறி கொலைகார மூளைக் கோளாறுகளின் வெளிப்பாடாகக் கொள்வதே பொருத்தமானது. சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. மற்றும் தீவிரவாதிகள் தொழிற்சங்கவாதிகளும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் இந்த இரத்தம் தோய்ந்த அரசியலமைப்பு சரத்தினை கட்டியணைத்துக் கொண்டுள்ளன. இங்ஙனம் கட்டியணைத்தபடியே அவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் யுத்தத்தினை நிறுத்தும் அவசியத்தினால் இந்த அரசியலமைப்பைப் பிரேரித்துள்ளதாக கூறிக் கொண்டுள்ளார்கள். இது எவ்வளவு துரோகமானது?

இந்த துரோகப் பேர்வழிகளை மக்கள் இயக்கத்தில் இருந்து துடைத்துக் கட்டி தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதன் மூலம் இனவாத யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் சகல வகையறாக்களைச் சேர்ந்த ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் ஒழித்துக் கட்டவும் போராடும் சோசலிச சமத்துவக் கட்சியை சிங்கள தமிழ் பொதுமக்களின் கட்சியாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

"அடிப்படை உரிமைகளும் நானாவித சுதந்திரங்களும்" பற்றிக் குறிப்பிடும் மூன்றாம் அத்தியாயம் அதற்கு முன்னர் வரும் இரண்டு அத்தியாயங்களைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு நீளமானது. அது 8ம் பக்கம் தொடக்கம் 24ம் பக்கம் வரை நீண்டு செல்கின்றது. அதற்குள் அடங்கும் அத்தியாயங்கள் மூன்று மடங்காகும். 8ம் அத்தியாயத்தில் இருந்து 31ம் அத்தியாயம் வரை அதற்குள் அடங்கும். இந்தப் பச்சைப் பொய்கள் எந்தளவுக்கு நீண்டதோ அந்தளவுக்கு அதற்குள் நிறைந்து வழியும் மோசடிகளும் பிற்போக்கு நஞ்சும் பல்வகை தினுசானவை.

இதற்கு உதாரணமாக சகல அடிப்படை உரிமைகளும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒழிக்கப்பட முடியும் என்பதைக் குறிப்பிட முடியும். இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக இலங்கையின் கூட்டரசாங்கங்களின் கீழும்

6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் அமைப்புச் சட்ட பிரேரணைகள் சிங்கள-தமிழ் மக்களுக்கு எதிரான சதி

5ம் பக்கம் பார்க்க

யூ.என்.பி.யின் கீழும் இந்நாடு அவசரகாலச் சட்டங்களின் கீழேயே ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. இதைக் கணக்கில் கொள்ளும் போது பொய் குழிக்குள் தள்ளப்பட்டுள்ள உரிமைகளைக் கூட மக்கள் அனுபவிப்பது கரடி பிறைக் கண்டதைக் காட்டிலும் அருமையாக ஆகும் என்பதில் சந்தேகம் கிடையாது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் நசுக்கப்படும் போது தேசிய. இனக் குழுக்கள், மதம், பால் ஆதியன சம்பந்தமாக வேறுபாடு காட்டக்கூடாது என 27வது அத்தியாயத்தின் (1) பிரிவு குறிப்பிட்டாலும் அதே பிரிவில் அரசியல் கருத்துக்களை கொண்டிருப்பதும் செயற்படுவதும் உள்ளடங்காததும் தற்செயலானது அல்ல. அது திட்டமிட்டு அரசியல் வேட்டைகளுக்கென கதவைத் திறப்பதாகும். இந்தப் பிரேரணைகளுக்கு பந்தம் படிக்கும் சகலரும் பிற்போக்கு ஆளும் வர்க்கத்துடன் சேர்ந்து புரட்சிகர அரசியல் போக்கினை வெறுத்து ஒதுக்குவதனாலேயே அரசியலமைப்பை அங்கீகரிக்கின்றனர். புதிய அரசியலமைப்பு பிரேரணைகள் இலக்காகக் கொண்டுள்ள தாக்குதல்கள் புரட்சிக் கட்சிக்கும் அதன் போராளிகளுக்கும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது என நாம் கூறுவோம்.

அந்த 27வது பிரிவின் 2வது சரத்தின் கீழ் அவசரகாலச் சட்டம் விதிக்கப்பட்ட வேளையில் கைது செய்யப்படும் நபர்கள் காலவரையறையற்ற காலத்துக்கு மஜிஸ்திரேட் எதிரில் நிறுத்தப்படாது தடுத்து வைக்கப்பட முடியும். இத்தகைய தடுத்து வைப்புக்களின் கீழேயே யூ.என்.பி.ஆட்சிக் காலத்தில் பிணக் குவியல்கள் வளர்ந்தன. பொதுமக்களின் சடலங்கள் குழிகளில் தள்ளிப் புதைக்கப்பட்டன. அந்தக் குழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட எலும்புகளையும் ஓடுகளையும் காட்சிக்கு வைத்து ஆட்சியைக் கைப்பற்றிய இந்த பொதுஜன முன்னணி அரசாங்கம், இந்த அரசியலமைப்பு சட்டத்தையும் அந்த அலுகோசு வேலையில் இறக்க உள்ளது.27வது அத்தியாயத்தின் (2)வது பிரிவின் உப.பிரிவு கூறுவதாவது :

"சிறைப் பிடிக்கப்படும் நபர் சந்தர்ப்பத்துக்குரிய அல்லது அனைத்து நிலைமைகளின் கீழும் நியாயமான காலத்துக்குள் ஒரு மஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தப்பட வேண்டும்." கொலைகார முதலாளித்துவ ஆட்சி நீதியைக் கௌரவிக்கும் விதத்தை அறிந்த எவரும் இந்த "நியாயமான கால எல்லை" சம்பந்தமாக எதிர்பார்ப்பு வைக்க முடியாது. அதற்குக் காரணம் அத்தகைய எதிர்பார்ப்புக்கள் மரணக் குழிகளைத் தோண்டுவதை நிச்சயமாக்கிக் கொண்டுள்ளதேயாகும்."

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அலுகோசு வேலைத்திட்டங்களின் கீழ் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது. "இருந்துவரும் எழுத்து மூலமான சட்டங்கள் எழுத்தில் இல்லாத சட்டங்களிடையே ஏதேனும் ஒரு எழுத்து மூலமான சட்டமோ அல்லது எழுத்து வடிவில் இல்லாத சட்டமோ இந்த அத்தியாயத்தின் (அடிப்படை உரிமைகளும் நானாவித சுதந்திரங்களும்)விதிமுறைகளுக்கு இணங்காது போயினும் வன்முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது." இது உரிய முறையில் வெறி கொண்ட சர்வாதிகார கட்டளைகளைச் சட்டமாக்குவது அன்றி வேறு என்ன? ஒருவர் சட்டத்தை அதை அறிந்திருக்கும் வரை மட்டுமே கௌரவிக்க முடியும் என்பதைத் தவிர வேறு என்ன? எழுத்தில் இல்லாத சட்டத்தை பற்றி ஒருவர் அறிந்து கொள்வது எப்படி? அவை மனம்போன போக்கில் கட்டளை பிறப்பிக்கப்படுவதற்கு இடம் இல்லையா? இங்குள்ள வினோதம் என்னவென்றால் இந்த மனம் போன போக்கிலான சர்வாதிகார சட்டதிட்டங்களை கட்டாயமாக்குவது "அடிப்படை உரிமைகளும் நானாவித சுதந்திரங்களும்" எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயத்தில் அடங்கி இருப்பதேயாகும்.

இந்த அரசியலமைப்புச் சட்ட பிரேரணைகள் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட்டு விடும் என்ற மற்றொரு பொய்யையும் பொதுஜன முன்னணி அரசாங்க வால்பிடிகள் பரப்பி வருகின்றார்கள். ஜனாதிபதி பாராளுமன்றத்தின் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்பட வேண்டும் எனப் பிரேரணையின் பல இடங்களிலும் குறிப்பிடப்படுவது உண்மையே. ஆனால் அந்த அசிங்கமான வாக்கியத்தை பின்வரும் வாக்கியத்துடன் சேர்த்து வாசிக்கும் போது ஒருவருக்கு விளங்குவது என்ன? 63வது பிரிவின் (2)வது சரத்து இதுவேயாகும். ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாத ஒரு நடவடிக்கை தொடர்பாக இந்த அரசியலமைப்பின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததன் காரணத்தினால் ஏதேனும் ஒரு விசாரணைக்கு அது சம்பந்தமாகத் கருத்துத் தெரிவிப்பதற்கு அல்லது ஏதேனும் ஒரு விதத்தில் அதைப் பற்றி கேள்வி எழுப்ப எந்த ஒரு நீதிமன்றத்திற்கு அல்லது நீதி அதிகாரத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு அதிகாரம் அல்லது சட்ட அதிகாரம் கிடையாது." எப்படி இருக்கிறது ? அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதது சம்பந்தமாக மட்டும் அல்லாது அவருக்கு வழங்கப்பட்ட வேலையை செய்யாது இருப்பதைப் பற்றியோ அல்லது செய்த வேலையைப் பற்றி கேள்வி எழுப்பவோ கருத்துத் தெரிவிக்கவோ இடம் இல்லை. இது சர்வாதிகாரிக்குரிய பெருமை அல்லாது வேறு என்ன?

இன்று புகழ் பெற்றுள்ளது போல் யூ.என்.பி.யின் நெருக்குவாரத்தின் கீழ் பொதுஜன முன்னணி அரசாங்கம் தமது பிரேரணைக்குள் 1978 அரசியலமைப்பு சட்டத்தின் தேர்தல் விதிமுறைகளை மட்டுமன்றி ஜே.ஆர்.ஜயவர்தனவின் புகழ்பெற்ற கருத்துக் கணிப்பின் மூலம் பாராளுமன்றத்தின் காலத்தை நீடிக்கும் முறையையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. 1978ன் பின்னர் யூ.என்.பி.அரசாங்கத்தின் கீழ் பொதுஜனங்கள் ஒடுக்கப்பட்டதோடு மட்டுமன்றி, இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாச நிறுத்திய இடத்தில் இருந்து அந்த ஒடுக்குமுறையை மேலும் உக்கிரமாக்கி முன்னெடுத்துச் செல்ல செய்த தயாரிப்பாகும். புதிய அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் முதலாளித்துவ அமைப்பினைப் பராமரிப்பதோடு அதன் ஜனாதிபதி, பிரதமர்களின் முகமூடியை மாற்றி, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய முடியாது என்பதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேண்டுமா? ஆனால் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமமாஜ, இ.தொ.கா., தொழிற்சங்க அதிகாரிகளோ தவறு அமைப்பில் அல்ல அதன் தலைவர்களின் முகமூடிகளில்தான் இருந்து கொண்டுள்ளது என்கிறார்கள். இந்த மோசடிகளினால் ஏமாந்து போகும் பொதுமக்கள் இனவாத யுத்தத்தில் இருந்தோ அல்லது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு உள்பட்ட மிலேச்ச சுரண்டலில் இருந்தோ தப்பித்துக் கொள்ள முடியாது. சோசலிச சமத்துவக் கட்சி அனைத்துலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் முதலாளித்துவ ஆட்சியை ஒழித்துக்கட்டி ஸ்தாபிதம் செய்யும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்துக்கான வேலைத்திட்டத்தினால் தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் ஆயுதபாணியாக்கப் போராடுவதன் காரணம் அதுவே.

பொதுஜன முன்னணி அரசாங்கம் அதிகாரத்தை பரவலாக்கும் பேரில் முன்வைத்துள்ள அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளின் நச்சுத்தனமான அர்த்தத்தை இராணுவ பாசிச சர்வாதிகாரத்தை திணிப்பதாகும் என சோசலிச சமத்துவக் கட்சி கூறுவது ஏன் என்பதை நாம் மேலே விளக்கினோம். இந்தப் பிரேரணைகள் மூலம் சர்வாதிகாரத்துக்கு அவசியமான விதிமுறைகள் வரையப்பட்டுள்ளதோடு அவற்றைப் பயன்படுத்தி இராணுவத்துக்கு வாய்ப்பான வேலைகளை செய்யக் கூடிய பாசிச படையணிகளை கட்டியெழுப்பு வதற்கான அவகாசமும் பிற்போக்காளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



டில்வின் சில்வா

## சிங்கள ஆணைக் குழுவும் ஜே.வீ.பி.யும்

இந்தப் பிரேரணையைத் துரும்பாகக் கொண்டு இனவாதிகளால் தூண்டிவிடப்பட்ட பாசிச கும்பல்களை கட்டியெழுப்ப தற்சமயம் இரண்டு போக்குக்கள் முன்னணியில் நின்று கொண்டுள்ளன. அவை சிங்கள ஆணைக்குழுவும் ஜே.வீ.பி.யும். ஜாதிக சிந்தனை கும்பல் மக்கள் ஐக்கிய முன்னணி (MEP ) யுடன் போட்டியிட்டுக் கொண்டு பிக்குகளை முன்னணியில் கொண்ட சிங்கள ஆணைக் குழுவையும் ஜே.வீ.பி.யையும் அணிதிரட்ட முயற்சிக்கின்றன. இவர்களுக்கு முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் இருந்து கிடைக்கும் அளப்பரிய பிரச்சாரமும் அவற்றின் பிற்போக்குத் தன்மைக்கு நல்ல சாட்சியாகும்."ஒருவரை அடையாளம் காண்பதற்கு அவரின் நண்பர்கள் யார் என்று தேடிப் பாருங்கள்" என்று ஒரு பழமொழி உள்ளது. அத்தகைய பழமொழி பெரும் அர்த்தம் நிறைந்தது. அங்ஙனம் தேடிப்பார்க்கும் போது சிங்கள ஆணைக் குழுவினதும் ஜே.வீ.பி.யினதும் தன்மையைக் கண்டறிய வெளிச்சம் கிடைக்கின்றது.

சிங்கள ஆணைக்குழு பொதுஜன முன்னணியின் அரசியலமைப்பு திருத்தங்களை எதிர்க்கும் தோரணையில் இராணுவ சர்வாதிகாரத்துக்கு கைவீசும் விதத்தை சோசலிச சமத்துவக் கட்சி வெளியிட்ட "சிங்கள ஆணைக்குழு இராணுவ பாசிச சக்திகளை அணிதிரட்டுவதற்கு எதிராக கிளர்ந்து எழுவோம்" என்ற வெளியீடு விரிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

சிங்கள ஆணைக்குழு பற்றி இதற்கு முன்னர் அத்தகைய ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதால் அதைப் பற்றி மீண்டும் இங்கும் மறுதலிக்காது சுருக்கமாக கூறுகின்றோம். ஆனால் சிங்கள ஆணைக்குழு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ பேர்வழிகளின் இராணுவ சர்வாதிகார வெறியாட்டத்தை சுட்டிக் காட்டுவதற்காக அதன் இடைக்கால அறிக்கையில் வரும் சில வசனங்களை மட்டும் இங்கு மேற்கோளாகக் காட்டுவோம். "சாட்சியம் அளித்த ஒரு வழக்கறிஞர் நைஜீரியா, உகண்டா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் சிவில் அரசாங்கங்களை ஆட்சியில் இருந்து நீக்கி, இராணுவம் அவற்றிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டதைத் தொடர்ந்து ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு "அவசியக் கோட்பாட்டின்" அடிப்படையில் உரிய நாடுகளில் நீதிமன்றங்களிடம் இருந்து அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதாகும். அங்ஙனம் இடம் பெறாது போயிருந்தால் அந்த நாடுகள் அராஜக நிலைமைக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது போயிருக்கும்." இந்த இராணுவ சர்வாதிகாரம் திணிக்கப்பட்ட நாடுகளில் இராணுவ அலுகோசுகளின் ஆயுதங்களின் துப்பாக்கி வேட்டுக்குள்ளான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களதும் "அவசியக் கோட்பாடு" சர்வாதிகாரியின் கீழ் நசுங்குண்டு இறந்து போதலாகும் எனக் காட்டும் இந்த அறிக்கையின் நிர்வாணக் கோலத்தையிட்டு புதிதாக ஏதும் கூறவும் வேண்டுமா? இது காவி உடை போர்த்த இனவாத பாசிச கூத்தாடிகள் ஆடுவதற்கென தயார் செய்யப்படும் இரத்தம் சிந்தும் பிசாசு நடனம் என்பது இதன் மூலம் புரிகின்றதல்லவா?

இந்தப் பிசாசு நடனத்தில் மிகவும் பயங்கரமானது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நூற்றுக்கணக்கில் கொன்று தள்ள யூ.என்.பி.அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்ட ஜே.வீ.பி.இன்று மீண்டும் ஆடிவரும் பாசிச ஆட்டமாகும். தமது குட்டி முதலாளித்துவ வாய்வீச்சுக்களுக்கு இடையே மார்க்சிசம் சோசலிசம் பற்றிய வார்த்தைகளையும் மோசடியான முறையில் சேர்த்துப் பிசைந்து கொண்டுள்ள இந்த இயக்கத்துக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வாய்ப்பை உருவாக்கியோர் சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே. 1964ல் தொழிலாளர் வர்க்கத்தை முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் கட்டிப் போட்ட படுகொலையான காட்டிக் கொடுப்பின் மூலம் இதைச் செய்தனர். தொழிலாளர் வர்க்கத்தின் கடைகெட்ட தலைவர்கள் இன்று பொதுஜன முன்னணியை சூழ்ந்து அரசியல். பொருளாதாரம், சமூகம் என்ற அனைத்து துறைகளிலும் பொதுமக்களுக்கு தொடுத்துவரும் தாக்குதல்களைப் பயன்படுத்தி, ஜே.வீ.பி.மீண்டும் தலையுயர்த்த முயற்சிக்கின்றது. இன்று அவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதியை இதற்கான முக்கிய சாதனமாக்கிக் கொண்டுள்ளனர்.

ஆதலால் அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பிரேரணைகளுக்கும் ஜே.வீ.பி.க்கும் இடையே இருந்து கொண்டுள்ள உறவை ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

அரசாங்கத்தின் அரசியலமைப்பு சீர்திருத்த பிரேரணைகளை தயார் செய்யும் வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புக்களில் ஜே.வீ.பி.யும் ஒன்று.அதன் இன்றைய தலைவரான ரில்வின் சில்வா 1996 ஜூன் 1ம் திகதி "நியமுவா" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அதைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

"இற்றைக்கு ஒரு ஆண்டுக்கு முன்னர் தான் நாம் எமது யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அனுப்பினோம். ஆனால் அவர்களின் ஒரு தொகை பிரேரணைகளை தயார் செய்கையில் எமது பிரேரணை கவனத்துக்கு எடுக்கப்படவில்லை. மீண்டும் கடந்த மார்ச் மாதத்தில் இவர்க்ள் எமது பிரேரணைகளை கோரினார்கள். நாம் மார்ச் 30ம் திகதி எமது அடிப்படைப் பிரேரணைகளை மீண்டும் தெரிவுக் குழுவுக்கு அனுப்பினோம். அடுத்து மே 8ம் திகதி நாம் வாய்மூலம் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டோம். இதற்கு முன்னரும் ஒரு தடவை நாம் வாய்மூலம் சாட்சியமளித்தோம். அன்று நாம் சென்ற வேளையில் கோரத்தை சிருஷ்டிக்க நான்கு எம்.பீ.க்களை சேர்க்க திரு.ஜீ.எல்.பீரிஸ் அங்கும் இங்குமாக 15, 20 நிமிடங்கள் தகவல் அனுப்பி, அனுப்பி களைக்க் நேரிட்டது. ஆதலால் உரிய நேரத்துக்கு முன்னரே அங்கு சென்றிருந்த எமக்கு உரிய காலத்துக்கு பின்னரும் 10,15 நிமிடங்கள் அலைய நேரிட்டது."

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிற்போக்கு பிரேரணைகளுக்கு பந்தம் பிடிப்பதில் ஜே.வீ.பி.க்கு இருந்து வந்த ஆர்வமும் அவர்களைச் சேர்த்துக் கொள்ள

படிப்பகம்

www.padippakam.com



அரசாங்கத்துக்கு இருந்து வந்த அக்கறையும் என்ற இந்த இரண்டினையும் ரில்வின் சில்வா எடுத்துக் காட்டுகின்றார்.இப்போது அவர்கள்"நாட்டை பிளவுபடுத்துகின்றார்கள்" எனக் கூச்சலிட்டுக் கொண்டு நாட்டை வலம் வந்து கொண்டுள்ளார்கள். தமது ஆசீர்வாதங்களுடன் தயாரிக்கப்பட்ட அந்தப் பிரேரணையை எதிர்ப்பதாக கூறிக் கொண்டே வலம் வருகின்றார்கள்.

அரசாங்கம் நியமித்த தெரிவுக் குழுவுக்கு ஜே.வீ.பி.அந்தரங்கமாகச் சமர்ப்பித்த அதனது பிரேரணைகள் என்ன என்பதும் இதுவரை நாட்டுக்கு அறிவிக்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொண்டாக வேண்டும்.அதுவும் அரசாங்கம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கும் சதிகார வேலைத்திட்டங்களில் இவர்களும் பங்காளிகளாகி உள்ளனர் என்பதற்கு இது சாட்சியாகும்.

ஜே.வீ.பி.யின் தமிழர் எதிர்ப்பு இனவாதத் தன்மையும் ரில்வின் சில்வாவின் அந்த பேட்டியில் அம்பலமாகின்றது. அவர் பின்வருமாறு கூறுகின்றார்: "எமது பிரேரணைகளின் தமிழ் மொழிபெயர்ப்பை தமிழ் எம்.பீ.க்களுக்கு வழங்க தெரிவுக் குழுவுக்கு அவசியம் இருக்கவில்லை." இனவாத யுத்தத்தை முன்னெடுக்கும் அரசாங்கத்திடம் அவர்கள் அந்தப் பணியை ஒப்படைத்தது ஏன்?அவர்கள் தாமே தமது பிரேரணைகளின் தமிழ் மொழிபெயர்ப்பை தயாரிக்காதது ஏன்? அத்தகைய இனவாத பாகுபாடு காட்டுவது ஜே.வீ.பி. விதிமுறையாக இருந்து வருவதாலா அல்லது வேறு ஏதேனும் காரணங்களாலா?

அரசாங்கத்தின் அரசியலமைப்பு திட்டத்தை தயார் செய்ய பங்களிப்புச் செய்து தொழிற்பட்ட ஜே.வீ.பி.இப்போது பிசாசுடன் சேர்ந்து என்றாலும் அதைத் தோற்கடிக்க வேண்டும் என்கின்றது. இதே ரில்வின் சில்வா 'சிதிஜய' சஞ்சிகையின் 1997 அக்டோபர் இதழுக்கு வழங்கிய பேட்டியில் கூறுவது இதுதான்:

அரசியலமைப்பு மரணப்பொறியை திணிப்பதை திட்டவட்டமான முறையில் முன்னெடுக்க அரசாங்கம் தயாராகுமானால் பிசாசுடன் என்றாலும் சேர்ந்து அந்தப் பேரழிவில் இருந்து நாட்டை விடுவிப்பது அவசியம் . இந்த மரணப் பொறியைத் திணிக்கப்பாடுபடுபவர்கள் தமக்கிடையேயான வேறுபாடுகளை ஒரு தடையாகக் கொள்ளாது அதற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவார்களாயின் அது சரியானால் அதற்கு எதிரான சக்திகள் தத்தமக்கிடையேயான பாகுபாடுகளை தடையாகக் கொள்ளாது ஒன்றுபட்டு அதைத் தோற்கடிக்க செயற்பட வேண்டும்."

என்றுமே படிப்பினையை பெற்றுக் கொள்ளாத நவ சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாதிகள் ஜே.வீ.பி.யில் இனவாதம் அல்லாத ஒரு முற்போக்கு கோஷ்டியும். உள்ளது எனக் கூறி அதனுடன் கூட்டுச்சேர முயன்றாலும் ஜே.வீ.பி.இந்தக் கந்தைகளைக் களைந்து எறிந்துவிட்டு வேறு வலதுசாரி பாசிச சக்திகளுடன் அணிதிரளவே திரும்பியுள்ளது. இப்போது அவர்கள் கூறுவது பிரேமதாச சகாப்தத்தில் போல் மீண்டும் யூ.என்.பி.யுடன் கூட்டுச் சேரத் தயார் என்றுள்ளனர். இவர்களின் 'சித்திஜய'. சஞ்சிகையின் முகப்பு அட்டையைத் தயார் செய்கையில் யூ.என்.பி.யின் ஆசீர்வாதங்களுடன் சிங்கள ஆணைக்குழு திரட்டிக் கொண்டுள்ள இனவாதக் கும்பல்களின் புகைப்படங்கள் பொருத்தப்பட்டுள்ளது தற்செயலானது அல்ல. ஜே.வீ.பி.முயற்சிப்பது சமுதாயத்தின் உள்ளே திரண்டு போயுள்ள அனைத்து மனித குப்பை கூழங்களையும் தூண்டிவிட்டு,தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பாசிச சக்திகளை திரட்டிக் கொண்டு, முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் சர்வாதிகாரத் திட்டங்களை பலப்படுத்துவதற்கேயாகும். இல்லையேல் அவர்கள் ஏனைய நாடுகளில் இராணுவ சர்வாதிகாரம் திணிக்கப்படுவதை "அவசிய கோட்பாட்டின் "அடிப்படையில் நியாயப்படுத்திய சிங்கள ஆணைக்குழு என்ற பிசாசுடன் சேர்வதைப் பற்றி பேசுவார்களா?

## இனவாத வாதம்

"இந்த மரணப் பொறிக்கு எதிராக சிங்கள இனவாத நிலைப்பாட்டில் நின்று அதை எதிர்க்கும் பகுதியினரும் உள்ளனர்.ஒன்றுபட்ட வேலைத் திட்டத்துக்கு செல்கையில் முக்கிய தடையாக தோன்றுவது அந்த நிலைமையே" எனக் கூறி ரில்வின் சில்வா அனைத்துலக வேஷம் போடவும் முயற்சித்துள்ளார். ஆனால் ஜே.வீ.பி.யின் பாத்திரமே அந்த வேஷத்துக்கு காதாவடி அறை கொடுக்கின்றது. உதாரணமாக இனங்களின் அடிப்படையில் மாகாணங்களை பிரிப்பதை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்த அமைப்பு , வடக்கு -கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு எதிராக முன்வைக்கும் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள்.

இது ஜே.வீ.பி.யின் சீனுவ(மணி) பத்திரிகையின் 1997 அக்டோபர் இதழில் "இனவாதங்களைக் கிளறும் அரசியலமைப்பை இனவாதம் அல்லாத விதத்தில் எதிர்த்தல் " என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது.

"கிழக்கு மாகாண ஜனத்தொகையின் பெரும்பான்மையினர் தமிழர்கள் அல்லாதவர்கள் என்பது தெளிவு. அவ்வாறே மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் இரண்டையும் வெவ்வேறாக எடுத்தால் அங்கும் தமிழ் சனத்தொகையினர் பெரும்பான்மையினர் அல்ல.இதன்படி ஏதேனும் ஒரு விதத்தில் மட்டக்களப்பும் திருகோணமலையும் வடக்குடன் இணைக்கப்படுமானால் அதனுள் வாழும் சிங்கள, முஸ்லீம் மக்கள் புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பர். அப்போது அவர்களும் அப்பிராந்தியத்தினுள் தமக்கு வேறான நிர்வாக அலகை கோரினால் நிலைமை மோசமடையாதா?அல்லது இந்தப் பகுதிகளில் சிங்கள, முஸ்லீம் மக்கள் அந்தப் பகுதிகளை கைவிட்டு வேறு பகுதிகளுக்கு செல்ல நேரிடும். இல்லையேல் ஈழம்வாதிகள் அந்த மக்களைக் கலைத்து விடுவார்கள்."

இது சகல வகையறாக்களைச் சேர்ந்த இனவாதக் கும்பல்களதும் வாதங்களுடனும் ஒத்துப் போகின்றது. அது சகலரும் செய்வது போல் முதலாவதாக இப்பகுதியில் வசிக்கும் முஸ்லீம் மக்களைத் தனியான தேசிய இனமாக கணித்துக் கொண்டுள்ளது.அது யூ.என்.பி.-சிறீலங்கா முதலாளித்துவக் கட்சிகளும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற இந்து வெறி இனவாதிகளும் கொண்டுள்ள நிலைப்பாடாகும். முதலாளித்துவ அமைப்பைக் காக்கும் இந்தச் சகலரும் அங்ஙனம் செய்வது பொதுமக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டு தமது இலாப பொதிகளை கட்டிக் காப்பதற்காகவேயாகும். முஸ்லீம் மக்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியினர். அப்படி இல்லை என வாதிடுவோர் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர்களையும் தனிப்பட்ட தேசிய இனமாகக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர்களைப் போலவே இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவோர் சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்தவர்களிடையே உள்ளனர். முஸ்லீம் மக்களை தனிப்பட்ட தேசிய இனமாக்கிக் கொள்ளும் அர்த்தமற்ற வாதம் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத ஒடுக்குமுறைக்காக நீண்டகாலமாக கையளப்பட்டு வந்ததாகும். ஜே.வீ.பி.இனவாதிகளும் அதை தோளில் சுமந்து கொண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினர் அல்ல என வாதிடுகின்றனர்.

மறுபுறத்தில் இவர்கள் சகல சிங்கள இனவாதிகளும் கூறுவது போல் தமிழ் மக்கள் தம்மிடையே சிறுபான்மை தேசிய இனங்களுக்கு வாழ்க்கைக்கு இடமளிக்காத ஒரு காட்டுமிராண்டிக் கூட்டம் எனவும் வாதிடுகின்றார்கள்.அதன்படி கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைத்தால் அங்கு தமிழ் தேசிய இனம் பெரும்பான்மை ஆகுவதால் கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்களவர்களுக்கு (இவர்கள் தமிழ் தேசிய இனத்தைச் சேராதவர்களாகக் காட்டிவரும் இஸ்லாம் மதத்தவர்களுக்கும் )அந்த மாகாணத்தில் இருந்து வெளியேற நேரிடும் அல்லது வெளியேற்றப்பட நேரிடும். இந்த வாதம் பயணம் செய்திருப்பது இனக்குழுக்களுக்கு இணங்க மாகாணங்களை பிரித்தாலே அன்றி மாகாணத்தில் வசிக்க இடம் சிறுபான்மையினரான இனக் குழுக்களுக்கு மாகாணத்தில் வசிக்க இடம் கிடையாது என்பதை மூடி மறைப்பதாகும். ஜே.வீ.பி.யின் இனவாத நிலைப்பாடு அந்தளவுக்கு தடிப்பானது.

1983ல் அந்த அமைப்பின் இனவாதத்தினால் தூண்டிவிடப்பட்ட குண்டர்கள் யூ.என்.பி.யின் சிரில் மத்தியூவின் கொலைகார புள்ளிகளுடன் சேர்ந்து தென்மாகாணங்களில் தமிழ் மக்களின் படுகொலைகளிலும் இரத்தக் களரிகளிலும் ஈடுபட்டதை நினைவில் கொண்டு மேற்கண்ட பந்தி மேற்கோளாகக் காட்டப்பட்ட கட்டுரை இந்த பாசிச ஆபத்தை குறித்துநிற்கின்றது. "வட மாகாணத்தைச் சேராத ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களும் இத்தகைய ஆபத்துக்கு முகம் கொடுப்பதை மறந்து விடக் கூடாது." இதன்படி ஒவ்வொரு மாகாணத்தின் பெரும் பான்மையினர் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றாக வாழ முடியாது; எதுவிதத்திலும் முடியாது. இது முன்னைய யூகோசலாவியாவினுள் இனவாதிகளால் சமீபத்தில் நடைமுறைக்கிடப்பட்ட இனக்குழு சுத்திகரிப்பின் காட்டுமிராண்டித்தன்மையும் பாசிச முன்நோக்கும் வேலைத்திட்டமுமாகும். இந்தக் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக சோசலிஸ்டுகள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டும் அல்ல வடக்கில் சிங்கள மக்களுக்கும் தெற்கில் எந்த ஒரு மகாணத்திலும் தமிழ் மக்களுக்கும் அவர்கள் அந்த மாகாணங்களின் ஜனத்தொகையில் எவ்வளவு குறைந்த அளவிலான சிறுபான்மையினராக இருந்தாலும் சமத்துவமான ஜனநாயக உரிமைகளோடு வாழும் உரிமைக்காகப் போராடுகின்றனர். அது சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களில் காட்டுமிராண்டித்தனம் கோலோச்சும் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசி, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்புவதன் மூலம் ஸ்தாபிதம் செய்ய வேண்டிய விதிமுறையாகும்.சோசலிச சமத்துவக் கட்சி அந்த வேலைத்திட்டத்தை வென்றெடுக்கும் வெகுஜனங்களை அணிதிரட்ட போராடுகின்றது.

"நாட்டைப் பிளவுபடுத்துவோர்" என ஜே.வீ.பி.எழுப்பும் இனவாத கோஷத்தை நியாயப்படுத்த அது முன்வைக்கும் அரசியல் ஆய்வுகளின் அசிங்கங்களையும் இங்கு ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமானது. 1997 செப்டம்பர் "நியமுவா" பத்திரிகை "பிரிவினைவாதத்தை முன்னிட்டு சமுதாயத்தின் மூளைச் சலவை" என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள கட்டுரை கூறுவதாவது: "தமது இலக்கை இட்டு நிரப்பும் பயணத்தில் இலங்கை முதலாளித்துவ அரசுக்கும் (ஆட்சியாளர்) சிங்கள பௌத்த சிந்தனாவாதத்துக்கும் இடையே தவிர்க்க முடியாத விதத்தில் மோதுதல் ஏற்படும். தமிழ் இனவாதத்துக்கும் முதலாளித்துவ அரசுக்கும் இடையே மிகவும் இயற்கையான விதத்தில் குளிர்ந்த ஐக்கியம் ஏற்படும் " என்ற வகையிலாகும்.

ஜே.வீ.பி.இந்த பொய்யை அளப்பது பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியலமைப்பு சட்டச் சீர்திருத்த யோசனைகளின் இரண்டாம் அத்தியாயமாக வேறொரு பகுதியை எழுதி, வேறு எந்த ஒரு மதத்தைப் பற்றியும் குறிப்பிடாது "பௌத்த சாசனத்தை பேணிக்காப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் "எனக் குறித்துக் கொண்டுள்ள நிலையிலாகும். அவ்வாறே அந்தப் பந்தி மேலும் கூறுவதாவது : "பௌத்த சாசனத்தைப் பேணிக்காக்க எடுக்கும் நடவடிக்கைகளில் பௌத்த சாசனத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் சபையின் கருத்துக்களை ஆராய வேண்டும் " எனவும் எழுதி உள்ளது. இந்த உயர் சாசனத்தினைப் பேணுவதற்கு உயர் சபையின் கருத்துக்களைக் கேட்டு, நடைமுறைப்படுத்த அரசாங்கம் அரசியலமைப்பினால் கட்டுப்பட்டுள்ளதை ஜே.வீ.பி.காட்டுவது சிங்கள பௌத்த சிந்தனாவாதத்துடன் மோதிக் கொள்வதாக ஆகும். மல்வத்த, அஸ்கிரிய பீடங்களைப் போலவே ஏனைய பீடங்களின் சாதிக்கும்பல்களின் மகாநாயக்க தோர்களும்.

அது வேறு நோக்கம் இல்லாமல் இல்லை. சிங்கள பௌத்த வெறியினால் தூண்டிவிடப்பட்ட இனவாதக் குண்டர்களை தமது பாசிச இயக்கத்தில் திரட்டிக் கொள்ளவேயாகும்.ஜே.வீ.பி.யின் இலக்கும் அதுவேயாகும்.

மேலே மேற்கோளாகக் காட்டிய ஜே.வீ.பி.யின் கட்டுரை மேலும் குறிப்பிடுவதாவது : "இப்போது முதலாளித்துவ அரசுக்குள்ள இந்த நோக்கத்துக்கு தேசிய இனப் பிரச்சினையினுள் செயற்படும் இரு சாராரின் உள்ளும்(சிங்கள பௌத்தர்கள், தமிழர்கள்) பெரிதும் நெருக்கமாக உள்ளோர் எந்த சாரார்? அது வேறு யாரும் அல்ல. தமிழ் இனவாதமே."தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது உண்மை. அது அந்தக் கட்சிகளின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ தன்மைக்கு பொதுஜன முன்னணியின் ஏகாதிபத்தியச் சார்புக்கும் இடையேயான சமத்துவத்தின் வெளிப்பாடாகும். இப்படிக் கூறும்போது நாம் உறுதியாக கூறுவது அது பாராளுமன்றம் எனப்படுவதனுள் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள பொதுஜன முன்னணிக்கு உள்ள அவசியத்தை விட அதற்கும் அப்பால் செல்லும் கூட்டாகும். இந்தப் பிற்போக்கு வர்க்கக் கூட்டை யூ.என்.பி.வரையும் விஸ்தரிக்க அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் உட்பட்ட பிற்போக்காளர்கள் நெருக்குகின்றார்கள். அதற்காக பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் எதிர்க்கட்சித் தலைவரையும் ஏற்கனவே ஒரு உடன்படிக்கையில் கையொப்பம் இடவும் தள்ளியுள்ளனர் என்பதை முழு நாடும் அறியும். இது சிங்கள சிந்தனா வாதத்தில் இருந்து அந்நியப்பட்டு தமிழ் இனவாதத்துடன் நெருக்கமான கூட்டுக்காக செய்யும் முயற்சி அல்ல. சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெறும் பிற்போக்கு அணிதிரள்வாகும்.

தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு உள்ளமையானது அரசாங்கம் எதிர்பார்க்கும் உதவியை வழங்குவதோடு தமிழ் மக்களிடையே செல்வாக்கு இழந்து போயுள்ள இத்தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் தமது உயிரைப்பிடிநது வைக்கும் பொருட்டு எடுக்கும் முயற்சியினதும் ஒரு வெளிப்பாடாகும். முதலாளித்துவ அரசின் இராணுவ பாதுகாப்பின் கீழ் கொழும்பில் அலையும் இந்த தமிழ் முதலாளித்துவ தலைவர்கள் இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் காலடி வைக்க முயற்சிப்பது யாழ்ப்பாணத்தை இராணுவ ஆட்சிக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ள நிலைமையின் கீழாகும். தமிழ் மக்களிடையே அவர்களுக்குள்ள இடத்தை இதன் மூலம் கணித்துக் கொள்ள முடியும். ஆனால் ஜே.வீ.பி., சிங்கள ஆணைக்குழு உட்பட்ட இனவாதக் கும்பல்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் இனவாதத்துடன் நேசக் கூட்டுக்கு செல்வதன் மூலம் நாட்டை பிளக்க முயற்சிக்கின்றது என்ற கூச்சலில் ஈடுபட்டுள்ளன.

## ஏகாதிபத்தியவாதிகளின் பாத்திரம்

இலங்கையை பிளவுபடுத்துவது ஏகாதிபத்தியவாதிகளின் அவசியமாகும் எனவும் ஜே.வீ.பி.யை முன்னணியில் கொண்ட இனவாதிகள் முழுங்குகின்றார்கள். இன்று பகிரங்கமான இனவாதிகளாக அரங்கில் குதித்துள்ள இந்தச் சகலரும் 1994ல் ஏகாதிபத்தியச் சார்பு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சிம்மாசனத்தில் ஏற்றுவதற்கு முழு மூச்சாக பாடுபட்டவர்கள் என்ற பாவத்தை கழுவுவதற்கு பொதுமக்களின் எதிரில் செய்யும் முயற்சி கொஞ்சநஞ்சமல்ல. சந்திரிகா குமாரதுங்கவும் பொதுஜன முன்னணியும் 1994 பொதுத் தேர்தல் அறிக்கை பொய்கள் மூலம் தாம் யூ.என்.பி.யின் ஏகாதிபத்திய சார்பு வேலைத்திட்டத்துக்கு எதிரானவர்கள் எனக் கூறிக் கொண்டது. தொழிலாளர்,

7ம் பக்கத் தொடர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் அமைப்புச் சட்ட பிரேரணைகள் சிங்கள-தமிழ் மக்களுக்கு எதிரான சதி

7ம் பக்கம் பார்க்க

ஒடுக்கப்படும் மக்களிடையே தொழிற்பட்டு வந்ததும் செயற்படுகின்றதுமான ஒரே ஒரு கட்சியைத் தவிர ஏனைய இடதுசாரி தொழிலாளர் அமைப்புக்கள் எனக் கூறிக்கொள்ளும் சகலதும் அந்தக் கயிற்றை அடிவயிறுவரை விழுங்கிக் கொண்டது. ஜே.வீ.பி. தனது ஜனாதிபதி வேட்பாளரையும் தேர்தலில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டு சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு வழங்கியது. இதை எதிர்த்த ஒரே தொழிலாளர் வர்க்க அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் சிபார்சுகளை அடியோடு பின்பற்றி சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு பேரழிவை திணிக்கும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல அமைப்புக்களதும் வங்குரோத்தும் பிற்போக்குத் தன்மையும் அம்பலமாகின்றது. ஜே.வீ.பி.திக்குமுக்காடுவது தமக்கும் அந்த அரசியல் பழிக்கும் எந்தவிதமான உறவும் கிடையாது எனக் காட்டிக் கொள்ளவேயாகும். அரசாங்கத்தினால் கைவிடப்படும் சிங்கள பௌத்த மதவாதத்தின் காவலர்களான தாம் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமான நாட்டை பிரிப்பதற்கு எதிரானவர்கள் என்பதை பயன்படுத்துவதே அவர்கள் திட்டம். இதை அவர்கள் அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்துள் நுழைந்து தூதுவரின் ஆசீர்வாதங்களை பெற்றபடியேயே கூறிக் கொள்கின்றார்கள்.

நாம் இந்த அறிக்கையின் முதற் பாகத்தில் விரிவாகத் தெளிவுபடுத்தி உள்ளது போல் ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணி அரசாங்கம் பொருளாதார, சமூக, அரசியல் என்ற சகல துறைகளிலும் பொதுமக்களை நசுக்கித் தள்ளவும் இராணுவ பாசிச சர்வாதிகாரத்தை திணிக்கச் செயற்படும் நிலைமையின் கீழ் ஏகாதிபத்தியவாதிகள் நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பது ஏன்? பிரிக்கப்படும் நாட்டின் வடக்கு அல்லது வடக்கு கிழக்கில் பொதுஜன முன்னணி அரசாங்கதத்தைக் காட்டிலும் ஆதரவான ஒரு ஆட்சி ஸ்தாபிதம் செய்யப்படும் என்பதையிட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு உள்ள உத்தரவாதம் என்ன? விடுதலைப் புலிகள் அமைப்பின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஒடுக்குமுறை தன்மையை கணக்கில் எடுக்காது பார்க்குமிடத்து கூட ஏகாதிபத்தியவாதிகள் கொப்பில் உள்ள குருவியைக் காட்டிலும் கூட்டில் உள்ளவரைக் காட்டிலும் பெரிதும் நம்பிக்கையானவராக உள்ளடக்கிக் கொள்ள முடியாதா? ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு கைத்தொழில்களை மட்டுமன்றி பொதுமக்களின் உயிரைப்பிடித்து வைத்திருந்து விவசாயத்தையும் கையளிக்கச் செயற்பட்டு வரும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சர்வாதிகார திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு பதிலாக அதிகாரத்தை பரவலாக்கும் புதிய பந்தயம் பிடிப்புக்களில் ஏகாதிபத்தியவாதிகள் ஏன் ஈடுபட்டாக வேண்டும்?

பொதுஜன முன்னணியைக் கொண்டு இந்நாட்டில் ஒரு பகுதியின் அதிகாரத்தை வேறு அரசியல் அமைப்பிடம் கையளிக்க ஏகாதிபத்தியவாதிகள் செயற்படுகின்றார்கள் எனக் கூறுமிடத்து, ஜே.வீ.பி.உட்பட்ட ஏனைய பாசிச அமைப்புக்களும் ஏகாதிபத்தியச் சார்பு இந்த அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் ஆதரவின் அடிப்படையில் தாம் பொதுமக்களுக்கு எதிரான ஒடு'க்குமுறை காடைத்தனங்களுக்கு தயாராகுவதை காட்டிக் கொண்டுள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இராணுவ-பாசிச சர்வாதிகாரத் திட்டங்களை அம்பலப்படுத்துவதற்கு பதிலாக அதிகாரப்



ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இனவாத படைகள்

பரவலாக்கம் ஊடாக நாட்டை பிரிக்க அது ஏகாதிபத்தியவாதிகளின் அவசியங்களின் அடிப்படையில் செயற்படுகின்றது எனக் கூறும் போது ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்த அரசாங்கம் தொடர்பாக பூரண நம்பிக்கை இல்லை என்பது நனவாகவோ அல்லது நனவற்ற முறையிலோ சொல்லப்படுகின்றது. அரசாங்கமும் நிதி அமைச்சரும் பிரதி அமைச்சரும் திரும்பத் திரும்ப கூறுவது தாம் ஏகாதிபத்தியவாதிகளின் ஆணைக்கு அடிபணிய மாட்டோம் என்பது இல்லையா? ஆனால் உண்மை நிலைமையோ ஏகாதிபத்தியவாதிகளின் அவசியத்தின் பேரில் அவர்களின் களத்தில் ஆடும் கைப்பொம்மையான பொதுஜன முன்னணி அரசாங்கம் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு இந்நாட்டு சிங்கள, தமிழ் பொதுஜனங்கள் அனைவரையும் பலியிட்டது. ஆதலால் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாட்டை பிளவுபடுத்த உள்ள அவசியம் என்ன? இந்த அரசாங்கத்தை ஆட்சியில் வைத்துக் கொண்டு சகல முதலாளித்துவ பகுதியினரதும் ஆதரவை அதைச் சூழ திரட்டி, இனவாத யுத்தத்தை நடாத்துவதன் மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி ஒடுக்க நடவடிக்கை எடுப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலகுவானது இல்லையா?

## அதிகாரப் பகிர்வு மோசடி

இந்த நாடு அதிகாரப் பகிர்வை கண்ட முதலும் ஒரே சந்தர்ப்பமும் இது அல்ல. ஆதலால் முதலாளித்துவ அமைப்பின் கீழ் அதிகாரப் பகிர்வு எனப்படுவதன் மோசடியை மக்கள் கண்ட முதல் சந்தர்ப்பமும் இது அல்ல.

1948ல் இடம்பெற்றதும் அதிகாரப் பகிர்வுதான். ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு காலனியாக விளங்கிய மன்னரின் அல்லது இராணியின் பிரதிநிதியாக விளங்கிய ஆளுனரின் கீழ் ஆளப்பட்டுவந்த இலங்கைக்கு அன்று அதிகாரம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இப்போது 50 ஆண்டுகள் கழிந்து செல்ல உள்ளது. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு கிடைத்த அதிகாரம் என்ன? என்பதை ஆராய்வதற்கு இது நல்ல ஒரு திருப்புமுனையாகின்றது. 1948ல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் அதிகாரத்தை பகிர்ந்ததுதான் தாமதம் இந்நாட்டில் அதிகாரத்தை பெற்றவர்கள் செய்தது ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலை மேலும் இலகுபடுத்தும் பொருட்டு தொழிற்சங்கங்கள் சம்மேளனங்கள் ஆகுவதை தடைசெய்தன. பொதுஜன பாதுகாப்பு சட்டத்தை கொணர்ந்தனர். இந்நாட்டின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை இரத்துச் செய்தனர். இந்த ஒடுக்குமுறை வேலைகளில் இறங்கினர்.

அன்றும் கூட பிரித்தானியாவினுள் "முடியரசை பங்கிடுவோம்" எனக் கூச்சல் போட்ட வலதுசாரி வெறியர்களும் இருந்தனர். ஆனால் அதிகாரத்தை பகிர்ந்து காலனித்துவ சுரண்டலை முன்னெடுத்தல் பெரிதும் இலகுவானது என கருதியோர் வென்றனர். பிந்திய காலத்தில் இந்நாட்டின் வளங்களையும் உழைப்பு கொள்ளையையும் தேசிய முதலாளித்துவம் சேனநாயக்க பண்டாரநாயக்க பொன்னம்பலம் கட்சியூடாக செய்து கொண்டு சென்று அவர்கள் தமது புத்தியையும் இதுவரை நிரூபித்துள்ளனர். இந்நாட்டில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரும் பிரித்தானிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சும் யூ.என்.பி. பொதுஜன முன்னணி சமரசத்துக்கான திட்டத்தை தீட்டும் போது அவர்களின் ஏகாதிபத்திய ஆளுமை செயற்படும் விதத்தை இன்றும் கண்டு கொள்ள முடியும். அன்றைக்கும் இன்றைக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நாட்டு மக்கள் ஏதும் வென்றடுததார்களாயின் அது 1948 அதிகாரப் பகிர்வின் மகிமையால் ஏற்பட்டதல்ல. அதிகாரத்தை உரித்தாக்கிக் கொண்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக உயிரைப் பணயம் வைத்து, தொழிலாளர் வர்க்கம் நடாத்திய போராட்டத்தினால் கிடைத்தது என்பதை நாம் நினைவில் கொண்டாக வேண்டும்.

இந்நாட்டு தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் நடாத்தும் அதிகாரப் பகிர்வு மோசடியின் பரிமாணத்தை 1987ல் 13வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தை திணிக்க வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கும் ஏனைய மாகாண சபைகளுக்கும் ஏற்பட்டுள்ள தலைவிதி மூலம் தெளிவாகின்றது. அதையிட்டு நீட்டி எழுத வேண்டியதில்லை.

அதிகாரப் பகிர்வு தொடர்பான இந்த மோசடி அனுபவங்கள் இருந்து கொண்டிருக்கையில் சிங்கள ஆணைக்குழு, ஜே.வீ.பி.போன்ற இனவாத கும்பல்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் அதிகாரத்தை பரவலாக்கி நாட்டை பிரிக்கப் போகின்றது என ஊழையிடுகின்றன. இது பொது மக்களின் கண்களில் மண்போடுவதன் மூலம் இனவாதத்தை தூண்டி, பாசிச ஆயுதத்தை தூக்குவது அன்றி வேறொன்றும் அல்ல. யூ.என்.பி.அரசாங்கத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் யூ.என்.பி.யின் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டங்களை பெரிதும் துரிதப்படுத்தி உள்ளது. தொழில், மற்றும் விவசாயி, மீனவர் மக்கட் பகுதியினரது வாழ்க்கைத் தரம் வெட்டும், நலன்புரி சேவைகள் துண்டிப்பும் இடம்பெறுகையில் பொதுமக்களிடம் இருந்து தோன்றும் எதிர்ப்பை நசுக்கும் பொருட்டு சர்வாதிகார அதிகாரங்களைக் கைக்குள் போட்டுக் கொள்ளும் திசையில் ஆட்சியாளர்கள் திரும்புவதை அனைத்து நாடுகளிலும் காண முடியும். அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் இந்நாட்டிலும் திரும்பியிருப்பது அதிகாரத்தை பரவலாக்கி நாட்டைப் பிரிப்பதற்கு அல்ல. தமது இலாப மூட்டைகளைக் கட்டிக் கொள்ள அதிகாரத்தை முடிந்த மட்டும் தனியாட்களின் கரங்களில் இறுக்கிக் கொண்டு பொதுமக்களை நசுக்கித் தள்ளுவதற்கேயாகும். "அதிகாரத்தை பரவலாக்கி நாட்டை பிரிக்கிறார்கள" என்ற கூச்சல் சிங்கள மக்களை இனவாதத்தில் மூழ்கடிக்கச் செய்யும் முயற்சியாகும். அவ்வாறே தமிழ் மக்களை படுகேவலமான மோசடிக்குள் மூழ்கடிப்பதுமாகும். ஆதலால் தமிழ் மக்கள் தமிழ் முதலாளித்துவ தலைவர்களும் கூட்டுச் சேர்ந்து அதிகாரத்தை பரவலாக்கும் தோரணையில் செய்யும் மோசடி சதியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## தீர்வு வேலைத் திட்டம்

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அர்சியலமைப்பு சீர்திருத்த பிரேரணையினதும் அதற்கு எதிரானவர்கள் எழுப்பும் "நாட்டைப் பிரிக்கின்றார்கள்" கூச்சலதும் பிற்போக்கு சதிகாரத் தன்மையை புரிந்து கொண்ட நாம் இப்போது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும்

www.padippakam.com

அவசியமான அரசியல் வேலைத்திட்டம் என்ன என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள திரும்ப வேண்டும்.

முதலில் மக்களின் வாழ்க்கை, ஜனநாயக உரிமைகளை நாசமாக்குது முதலாளித்துவ அமைப்பு முகம் கொடுத்துள்ள மூர்க்கமான நெருக்கடியின் காரணமாகவே இடம் பெறுகின்றது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அது உற்பத்தி சக்திகளின் திறன் குறைவதால் அன்றிக் கூடுவதன் பெறுபேறாகும். விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் அபிவிருத்தியினால் மனித உழைப்பின் உற்பத்தித் திறன் முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் உயர்ந்துள்ளது. பூகோளமயமாக்கப்பட்ட சந்தையினுள் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கிடையே இதனால் தமது இலாபப் பங்கினை காத்துக் கொள்ள கழுத்தறுப்பு போட்டி நிலவுகின்றது. உற்பத்திச் செலவுகளை முடிந்தமட்டும் வெட்டி அதற்காக உழைப்பாளிகளை விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு குறைத்தும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள் உலகின் சகல மூலை முடுக்கிலும் ஆக்கிரமித்தும் கொண்டுள்ளன. இந்த வேலைத்திட்டத்தை இந்நாட்டு யூ.என்.பி.அரசாங்கமும் பின்னர் ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசாங்கமும் துரிதப்படுத்தி வருகின்றன. இதற்கு ஏற்றவிதத்தில் ஒடுக்குமுறையும் உக்கிரமாக்கப்பட்டு வருகின்றது.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை, ஜனநாயக உரிமைகளை காக்க முடியாது. ஆதலால் அப்பணிக்கு பொதுமக்கள் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரும் அரசியல் வேலைத் திட்டத்தினால் ஆயுதபாணியாக வேண்டும். இதற்கு முன்அவசியம், தொழிலாளர் வர்க்கம் தமது அரசியல் சுயாதீனத்தை ஸ்தாபிதம் செய்து கொள்வதாகும். கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் தம்மைச் சூழ புரட்சிகரமான முறையில் அணிதிரட்டிக் கொள்ள வேண்டும். அதற்கு தொழிலாளர் வர்க்கம் அத்தகைய சுயாதீன வேலைத்திட்டத்தில் காலூன்றி நின்று அந்த மக்கள் பகுதியினரின் அவசியங்களை இட்டுநிரப்ப சோசலிச வேலைத் திட்டத்திற்குப் போராட வேண்டும்.

தொழிலாளர் வர்க்கம் அத்தகைய போராட்டத்தில் ஈடுபடாததன் தீய விளைவுகள் இனவாத யுத்தத்தின் ஊடாக பொதுமக்களை ஏற்கனவே எதிர்கொண்டுள்ளது. சமசமாஜ கம்யூனிஸ்ட் நவசமசமாஜ இ.தொ.கா.போன்ற துரோக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை ஒழித்துக்கட்டி, அந்த வர்க்கத்தை சிறீலங்கா யூ.என்.பி.முதலாளித்துவக் கட்சிகளுக்கு கட்டிப் போட்டுள்ளனர். இதன் மூலம் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை காப்பதில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தை தள்ளி **வைத்துள்ளனர். இதன் பெறுபேறாக இனவாத பிரிவினைவாதம் தமிழ் மக்கள் இடையே தலைநீட்டியது. இதற்குப் பதிலாக துரோகத் தலைவர்களினது உதவியோடு யூ.என்.பி. சிறீலங்கா அரசாங்கங்கள் இனவாத யுத்தத்தை தொடுத்தன.**

தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை தொலைத்துக் கட்டுவதற்காகவே முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தமது கையை பலப்படுத்திக் கொண்டு தென் மாகாணங்களிலும் தொழிலாளர்களுக்கு எதிராக அரச ஒடுக்குமுறையையும் குண்டர் படைகளையும் ஜே.வீ.பி.போன்ற பாசிச கும்பல்களையும் கட்டவிழ்த்துவிட்டது. இவை 1964ன் பின்னைய காலத்தில் சிறப்பாகக் கழிந்து சென்றுள்ள இரண்டு தசாப்தங்களினுள் பெற்றுக் கொண்ட முக்கிய படிப்பினைகளாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 1998 வரவு செலவுத் திட்டம் பற்றிய ஆய்வில் சுட்டிக்காட்டியவாறு இப்போது ஆளும் வர்க்கம் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுடன் சேர்ந்து நாடு பூராவும் பல இலட்சோப லட்சம் ஏழை விவசாயிகளையும் மீனவர்களையும் சிறிய கைத்தொழில் துறை, தோட்டத் துறை தொழிலாளர்களையும் குந்த இடம் இல்லாமல் செய்வதில் இறங்கியுள்ளது. இந்த நிலைமையிலேயே பொதுஜன முன்னணி அரசாங்கம் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை அடியோடு ஒழித்துக்கட்டும் பாசிச சக்திகளை தூண்டிவிடும் அரசியலமைப்பு சட்ட சீர்திருத்த சதியில் இறங்கியது.

இந்த நிலைமை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் மிகவும் பாரதூரமான ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது. இந்த ஆபத்து சமீபத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசாங்கம் விடுதலை புலிகள் அமைப்பை "பயங்கரவாத அமைப்பு" எனப் பெயர் சூட்டியதுடன் பெரிதும் உக்கிரமாகியது. இதை பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனும் இனவாத யுத்தத்துடனும் இணைந்து கொண்ட அனைத்து முதலாளித்துவக் கட்சிகளும் தமக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக கணித்துக் கொண்டுள்ளன. இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. அது உரிய விதத்தில் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கத்தின் தன்மை. இதன் மூலம் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் ஆதரவு கிடைக்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கான கதவுகள் திறந்துள்ளது. பெயர் குறிப்பிடப்பட்ட பயங்கரவாத அமைப்பை நசுக்கும் அல்லது அதற்குத் தண்டனை வழங்கும் அவசியத்தை முன்வைத்து ஏகாதிபத்திய இராணுவம் ஊடுருவுவதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இனவாத அரசின் இராணுவத்தை பயிற்றும் பொருட்டும் 'கிறீன் பெரேட்ஸ்' படைப் பிரிவுகளை ஈடுபடுத்துவது ஏற்கனவே இடம்பெறும் வேலைகளின் ஒரு சிறிய தூரமாகும். சோசலிச சமத்துவக் கட்சி வலியுறுத்துவது போல் தொழிலாளர் வர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் கொண்டுள்ள சகல உறவுகளையும் தகர்த்து எறிந்து அக்கட்சிகளுக்கு எதிராக அரசியல் ரீதியில் போராட வேண்டும். சிங்கள தமிழ் ஏழைமக்களையும இளைஞர்களையும் அணிதிரட்டி அதற்கான துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யும் அந்த அரசாங்கம் இலங்கை ஈழம் சோசலிசக் குடியரசேயாகும்.

தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் தமது அரசியல் அமைப்பினுள் அணிதிரண்டாக வேண்டும். சோசலிச சமத்துவக் கட்சி அதற்காக தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை வேலைத்தலங்கள், தொழில் நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் தோறும் நடவடிக்கை குழுக்களுக்குள் அணிதிரள வேண்டும். தொழில்களையும் விளைச்சல்களையும் பிடுங்கிக் கொள்ளவும் கல்வி, ஆஸ்பத்திரி சேவைகள் உட்பட்ட நலன் புரி சேவைகளையும் உதவிமானியங்களையும் ஒழிப்பதற்கு எதிராக தொழிலாளர் விவசாயிகள் **அரசாங்கத்தின் முன்நோக்கின் கீழ் பரந்த பிரச்சாரத்தை தொடுப்பதன் மூலம் பொதுமக்களை நனவூட்டவும் அணிதிரட்டவும் நடவடிக்கை குழுக்கள் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறே முதலாளித்துவ அரசும்** இனவாத பாசிச குண்டர் கும்பல்களும் பொதுமக்களுக்கு எதிராக தொடுக்கும் தாக்குதல்களை தோற்கடிக்க அவசியமான பாதுகாப்பு படை அணிகளையும் நடவடிக்கை குழுக்கள் மூலம் ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைகள் முதலாளித்துவ எஜமானர்களுடன் பேரம்பேசும் நச்சு வளையத்தில் மாட்டிக் கொண்டுள்ள தொழிற்சங்கங்கள் செய்யக் கூடியதோ அல்லது செய்யப் போவதோ இல்லை. முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசும் போராட்டத்துக்கு முதலாளித்துவ எல்லைகளைத் தாண்டிச் செல்லும் முன்நோக்கும் அமைப்பு முறையும் வேண்டும். நடவடிக்கை குழுக்கள் அத்தகைய வழியில் இறங்குவதற்கான சாத்தியம் இருந்து கொண்டுள்ளது. அந்தச் சாத்தியத்தை முடிமறைக்கும் பொருட்டு முதலாளித்துவ அமைப்பை காக்கச் சபதம் பூண்டவர்கள் அல்லது வர்க்க சமரசக்காரர்கள் எவரும் நடவடிக்கைக் குழுக்களுக்குள் ஊடுருவிக் கொள்ளாதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய ஊடுருவல், நடவடிக்கை குழுவின் அங்கத்தவப் போராளிகளை அரச ஒடுக்குமுறையினதும் பாசிசத் தாக்குதல்களதும் பலிகடாக்கள் ஆக்கும் ஆபத்துக்கு அழைப்பு விடுப்பதாகும். அதைப் புரிந்து கொள்வது கஷ்டமானது அல்ல.

## அரசியலமைப்பு நிர்ணய சபை

நடவடிக்கை குழுக்களுக்குள் அணிதிரளும் தொழிலாளர்களாலும் ஒடுக்கப்படும் மக்களாலும் அமைக்கப்படும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் கீழ் அந்த குழுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணயசபை மூலம் புதிய அரசியலமைப்பை இயற்றிக் கொள்ள முடியும். முதலாளித்துவ பாராளுமன்ற மோசடியின் கீழ் போல் அல்லாது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் திட்டவட்டமான ஒத்துழைப்பைக் கொண்ட நடவடிக்கை குழுக்களின் பிரதிநிதிகளுக்கு மட்டுமே சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் மக்களின் பேரில் சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஸ்தாபிதம் செய்யும் அரசியலமைப்பு சட்டத்தை இயற்ற முடியும். ஏனைய சகல அரசியலமைப்புக்களும் சீர்திருத்த, மோசடி; பிற்போக்கு சதிகளாகும்.

ஒடுக்கப்படும் இனக்குழுக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதை நிறுத்தி, சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஊர்ஜிதம் செய்யும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பது என்பது முதலாளித்துவ சொத்து முறையை ஒழித்துக் கட்டி சோசலிச பொருளாதாரத்தை அமைப்பதாகும். சமூக சமத்துவத்தின் அடித்தளம் சொத்துடமை செல்வந்தர்களின் மடிகளை நிரப்பும் இலாபம் கறப்பதை நியாயப்படுத்தி, பாதுகாக்கும் முதலாளித்துவ அமைப்பாகும். பரந்த அளவிலான கைத்தொழில்களையும் நிறுவனங்களையும் தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச அமைப்பின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நலன்களுக்காக இன்றைய விஞ்ஞான, கைத்தொழில் அபிவிருத்திகள் மூலம் மனித இனத்தின் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இது காலவரையறையற்ற ஒரு காலத்துக்கு நீண்டு செல்லும் எதிர்காலம் பற்றிய கற்பனைச் சிருஷ்டி அல்ல. தற்போது உலகின் செல்வந்த முதலாளிகள் 477 பேரின் சொத்துக்கள் இந்த உலகின் ஜனத்தொகையில் நூற்றுக்கு 50வீதமான ஏழை மக்களுக்கு கிடைக்கும் வருமானத்துக்கு சமமாக உள்ளது. இது சோசலிச சொத்து முறையின் கீழ் பொது மக்களின் நலன்களுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகின்றது. உலக நிலைமையுடன் இணைந்த முறையில் இலங்கையினுள்ளும் முதலாளித்துவ அமைப்பின் கீழ் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையே இதற்குச் சமமான பரந்த துருவப்படுத்தல் இருந்து கொண்டுள்ளது. இதனை சோசலிச சொத்து முறையின் கீழ் பொருளாதார, சமூக சமத்துவத்துக்கான நடவடிக்கை எடுப்பதன் மூலமே நிறுத்த முடியும்.

சோசலிச சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்யும் பொருட்டு தனிநாட்டினுள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டவை. இதன் அர்த்தம் முதலாளித்துவ அமைப்பைப் பூகோள ரீதியில் தூக்கி வீசுவதற்கான நாள் குறிப்பிடப்படும் வரை அந்தந்த நாடுகளின் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் காத்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பதல்ல. அது லியொன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கு எதிராக முக்கியமாக ஸ்டாலினிஸ்டுகளும் சீர்திருத்தவாதிகளும் ஆதாரம் அற்ற விதத்தில் பரப்பிய குற்றச்சாட்டாகும். 1917 அக்டோபர் புரட்சி நிரூபித்தவாறு லெனின், ட்ரொட்ஸ்கியும் தலைமை தாங்கிய போல்ஷிவிக் கட்சி அத்தகைய காலம் கடத்தலில் ஈடுபடவில்லை. அது சரியா? நிச்சயம் சரியானது. அது நிரந்தரப் புரட்சி கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவர்கள் 1917ல் கொண்டிருந்ததைப் போல் இன்றும் கொண்டுள்ள நிலைப்பாடாகும். அது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கு இணங்கவே உலகின் பல்வேறு நாடுகளில் பொருளாதார, அரசியல் அபிவிருத்தியின் அசமத்துவ, இணைந்த தன்மையினால் தீர்மானிக்கப்படுவதாகும்.

இன்றைய பூகோள ரீதியான முதலாளித்துவ பொருளாதார நிலைமையின் கீழ் ஒவ்வொரு நாடுகளிலும் பொருளாதாரங்களின் இணைப்புக்களும் பொதுமக்கள் முகம் கொடுக்கும் சமூக நிலைமைகளின் ஓரினத்தன்மையும் முன்னரைக் காட்டிலும் சுட்டிக் காட்டப்படுவது சரியானது. ஆனால் அதே உலகமே புரட்சிக்கு தயாராகும் வரை அந்தந்த நாடுகளில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களும் காத்திருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யும் முயற்சியாக இருக்கக் கூடாது. அத்தகைய பிற்போக்கு கருத்துக்கள் தலைநீட்டுவது "புரட்சி காலம் எடுக்கும் வேலை", "கஷ்டம் வந்தால் தற்சமயம் செய்யக் கூடியதை செய்ய நாம் செயற்படுவோம்" என்பன போன்ற முதலாளித்துவ சார்பு கருத்தியல்வாத விதிமுறைகளுடனாகும். அது எந்த விதத்திலும் மார்க்சிஸ்டுகளின் நிலைப்பாடு அல்ல.

அனைத்துலகவாத முன்நோக்குடன் ஆயுதபாணியாகுவதும் உலக தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டங்களுடனும் பிணைப்பு இல்லாமல் ஒரு நாட்டில் சோசலிசத்தை ஸ்தாபிக்க முடியாது. ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கு எதிராக தனிநாட்டில் சோசலிசத்தை கட்டியெழுப்பும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கருத்தியல்வாத வேலைத்திட்டம் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் வங்குரோத் தடைந்து நொறுங்கி வீழ்ந்தது. இதன் மூலம் இந்த விடயம் போதுமான அளவுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆதலால் முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் கீழ் சோசலிச வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிட செயற்படும் மக்கள் இயக்கம் ஆரம்பத்தில் இருந்தே அனைத்துலகவாத வர்க்க ஐக்கியத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இலங்கையை எடுத்துக் கொண்டால் சிங்கள தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் சமத்துவத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும். அவ்வாறே இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றிய முன்நோக்கின் கீழ் போராடி கோடானுகோடி இந்திய துணைக்கண்ட தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் அரசியல், நடைமுறை ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் இயற்கை வளங்களை உரியமுறையில் பயன்படுத்தி உற்பத்தி விளைநிறன் கொண்ட உழைப்பு பகுப்புக்கு இணங்க உற்பத்தியையும் பங்கீட்டையும் திட்டமிட்டு தொழிற்படும் பொதுமக்களதும் எதிர்காலச் சந்ததியினதும் அடிப்படைத் தேவைகளை இட்டுநிரப்ப முடியும்.

இந்த முன்நோக்கினதும் வேலைத் திட்டத்தினதும் அடிப்படையில் இலங்கையிலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட போராடுவது, சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் தோழமை அமைப்பான இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகமுமே. சோசலிச சமத்துவக் கட்சி உலக சோசலிசப் புரட்சியின் முன்னணிப் படை அணியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியாகும்.

இங்கு விளக்கப்பட்டுள்ள அரசியல் ஆய்வுகளை வாசித்து விளங்கிக் கொள்வதன் மூலமும் அதில் இருந்து பெறும் நடைமுறை பணிக்கு சோசலிச சமத்துவக் கட்சியுடன் சேர்ந்து பங்கு கொள்வதன் மூலமும் பேரழிவு மிக்க முதலாளித்துவ அமைப்பில் இருந்து விடுபடும் போராட்டத்துக்கு இணையும்படி நாம் அனைத்து, சிங்கள, தமிழ் போராளி தொழிலாளர்களையும் ஏழைகளையும் இளைஞர்களையும் வேண்டுகின்றோம். சோசலிச எதிர்காலத்துக்கான ஒரே வழி அதுவே.

படிப்பகம்

www.padippakam.com

# அக்டோபர் புரட்சியின்



# மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை அக்டோபர் புரட்சி ஊர்ஜிதம் செய்கின்றது

## -சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ்



சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டு நிறைவையொட்டி கடந்த அக்டோபர் 12ம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் நிகழ்த்திய உரையின் இறுதி பாகம்.

கடந்த இதழின் தொடர்ச்சி

### உலகப் புரட்சிக்கான நடவடிக்கை

அனைத்துலகவாதிகள் ரூஷ்ய அக்டோபர் புரட்சியினை உலக சோசலிசப் புரட்சிக்கான ஒரு நடவடிக்கையாகவே கணித்தனர். அதை அந்த விதத்தில் மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டி இருந்தது. சிறப்பாக பின்தங்கிய ரூஷ்யாவினுள் தனிமைப்பட்ட ஒரு சோசலிச விடுதலையைப் பற்றி அவர்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அதனுடன் இணைந்த உலக முதலாளித்துவ சங்கிலித் தொடுவையில் பலவீனமான தொடுவை அறுந்து போனதால் பிறந்தது. ஏழைமக்களின் ஆதரவைப் பெற்ற தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் உலகப் புரட்சியின் வெற்றிக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொண்டு தமது நாட்டினுள் பொதுமக்கள் முகம் கொடுத்திருந்த தரித்திரம் பிடித்த வாழ்க்கை நிலைமைகளை இலகுபடுத்த தீவிர நடவடிக்கைகள் எடுப்பது அவசியப்பட்டது. முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்தின் கீழ் இருந்துவந்த சமூகம் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர வெற்றிகளின் சக்தியின் மூலம் சோசலிசத்துக்கு ஊடாக செல்வதற்கு முன்னர் பல தடவைகள் தோலை மாற்றிக் கொண்டாக வேண்டும் என்பதை மார்க்சிஸ்டுகள் புரிந்து கொண்டிருந்தனர். அனைத்துலகவாத புரட்சிகர முன்னோக்குக்கு எதிரான முதலாளித்துவச் சார்பு வாய்வீச்சுக்கள் குறிப்பிடுவது போல் அந்தந்த நாடுகளின் புரட்சியாளர்கள் உலகப் புரட்சி வரும் வரை வாயைப் பிளந்து கொண்டு இருப்பது மார்க்சிஸ்டுகளுக்கு உரியது அல்ல. உலகப் புரட்சியின் நடவடிக்கையாக தாம் வாழும் நாடுகளில் பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசுவதற்கே அனைத்துலகவாதிகள் போராடுகின்றார்கள். "உலக யுத்தத்தை சிவில் யுத்தமாகத் திருப்பு" என்ற லெனினின் சுலோகத்தின் அர்த்தம் அதுதான்.

கிராமப்புற ஏழை மக்களின் ஆதரவைப் பெற்ற தொழிலாளர் வர்க்கம் 1917 அக்டோபரில் ரூஷ்யாவில் அரச அதிகாரத்தை கைப்பற்றியது. அக்காலத்தில் ரூஷ்யா சோசலிசத்துக்கு பக்குவம் அடைந்து இருந்ததனால் அல்ல. இருந்துவந்த பொருளாதார, சமூக நிலைமைகளை தொழிலாளர், ஏழை மக்கள் சகிக்க முடியாது போனதேயாகும். அத்தகைய ஒரு காட்டுமிராண்டி நிலைமையே புரட்சிகர சமூக மாற்றத்தை வேண்டி நின்றது.

மனித இனத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும் போது பொருளாதார, சமூக நிலைமைகளின் மாற்றங்களுக்கு இணங்கவும் அமையவும் முறைமுறையான மாற்றங்களை சமூகம் கைவரப் பெறுவதில்லை என்பது தெரியும். சமூகத்தினுள் வழக்காற்றுவாதம் செல்வாக்குச் செலுத்துகின்றது. பொருளாதாரத்தில் மாற்றங்கள் இடம்பெற்றாலும் அவை சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தினாலும் அவற்றை முடிந்த மட்டும் சகித்துக் கொண்டு, தமது வாழ்க்கை ஓட்டத்தை குழப்பிக் கொள்ளாது, வாழ்க்கையை ஓட்டிச் செல்ல சமூகம் முயற்சிக்கின்றது. இந்த வழக்காற்றுத் தன்மை காரணமாகவே சமுதாயத்தினுள் புரட்சிகரப் பாய்ச்சல் அவசியப்படுகின்றது. நீண்டகாலமாக சகித்துக் கொண்டு கஷ்டமான தொடர்ச்சியாக பழைய வாழ்க்கைமுறையை தொடர முயற்சிக்கும் சமூகத்துக்கு மாற்றம் கண்டுள்ள பொருளாதார, சமூக நிலைமைகளை இனியும் சகித்துக் கொள்ள முடியாத நிலைமைக்கு முகம் கொடுக்கின்றது. சமூகத்தினுள் புரட்சி வெடிப்பது அப்போதுதான். 1917 ரூஷ்ய சமூகம் முகம் கொடுத்தது அத்தகைய ஒரு நிலைமைக்கேயாகும். அந்நிலைமையின் கீழ் மார்க்சிஸ்டுகள் முன்னர் கண்டுள்ளது போல் சமூகத்தின் புரட்சிகர மாற்றத்துக்கான முன்னணியை எடுக்கக் கூடிய சமூகச் சக்தியான தொழிலாளர் வர்க்கத்துக்கு ஏழை மக்களின் தலைவனாக புரட்சிகரமான முறையில் கிளர்ந்து எழ நேரிட்டது. அதில் இருந்து தான் முன்கூட்டியே தயார் செய்த புரட்சிக் கட்சியின் தீர்க்கமான தன்மை பெருக்கெடுக்கின்றது. வழக்காறான வழக்காற்றுவாத முறைகளைக் கைவிட்டு புரட்சிகரமான முறையில் கிளர்ந்து எழும் வெகுஜன இயக்கத்துக்கு இந்தக் குழப்ப நிலைமையின் கீழ் அவசியமான முன்நோக்கும் தலைமைக்குமான பதாகையை கைவரப் பெறுவதற்கான ஓய்வு கிடைக்காது. தமக்கு வேண்டிய அந்தப் புரட்சிகர ஆயுதங்கள் தூரதிருஷ்டி மிக்க பார்வையுடன் தொழிற்பட்ட ஒரு புரட்சிக் கட்சியினால் வழங்கப்பட வேண்டும். தமது போராட்ட சுலோகங்கள் தமது போராட்ட இலக்குகளைபொதுமக்கள் கைப்பற்றிக் கொள்வது புரட்சிக் கட்சியினால் வழங்கப்படும் காரியாளர் ஆயுதக் களஞ்சியத்தின் மூலமாகும்.

சமூக இயக்கம் இடைவிடாமல் இடம்பெறும் அசைக்க முடியாத வழக்காறான சமூகச் சுற்றாடலை அங்கீகரித்தும் அதற்கு இணங்க விஸ்தரிப்புவாதத்தை தலைமேல் வைத்தும் செயற்படும சந்தர்ப்பவாதிகள் ஆபத்தான சமூகப் போக்காகுவது இதன் காரணத்தினாலேயேயாகும். சமூக வெடிப்புககள் இடம்பெறும் தருணத்தில் புரட்சிகர சமூக சக்தியை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்குவது அவர்களின் வேலையூடாக விளங்குவது அதற்குக் காரணமாகும். புரட்சிக்கு முன்நோடி சகாப்தத்தில் புரட்சிக் கட்சி தூரதிருஷ்டியுடன் ஆற்றும் நடவடிக்கைகள் குறுங்குழுவாதம் எனவும் உதவாக்கரையானவை எனவும் தொடுக்கப்படும் சந்தர்ப்பவாதிகளின் குற்றச்சாட்டுக்களின் மத்தியில் புரட்சிகர காரியாளர்கள் உயிர்த் தியாகத்துடன் கட்டியெழுப்பும் கட்சியின் அவசியத்தையும் தொடர்பையும் பரந்த மக்கள் புரட்சிகர சமூக வெடிப்புக்களின் மத்தியில் புரிந்து கொள்கின்றார்கள். அது இருந்து கொண்டுள்ள சமூகத்துக்கு ஆலவட்டம் பிடிக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு மரணப் பேரிகை ஒலிக்கும் ஒரு நிலைமையாகும். 1917 அக்டோபரில் தரிசித்த நிலைமை அதுவே.

லெனினாலும் ட்ரொட்ஸ்கியினாலும் தலைமை வழங்கப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் வழிகாட்டலின் கீழ் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட தொழிலாளர் வர்க்கம், ஜனநாயகப் புரட்சியின் பாத்திரத்தினை இட்டுநிரப்புவதுடன் திருப்திப்பட்டுக் கொள்ள முடியாது போயிற்று. நிலமானித்துவ ஸார் ஆட்சியின் கீழும் 1917 பெப்பிரவரி புரட்சியின் பின்னர் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் கீழும் இடம்பெற்றுவந்த தேசிய அடக்குமுறையில் இருந்தும் விடுதலை பெற ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகள் பற்றிய கடதாசி அறிக்கைகளுக்கு மேலாக எதிர்பார்த்தனர். நிலமானித்துவ நில உரிமைகளின் கீழ் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களுக்கு உடனடியாக நில உரிமைகளை கையளிப்பதன் மூலம் மட்டும் திருப்தி செய்துவிட முடியாத அவசியங்கள் இருந்து வந்தன. இந்த எதிர்பார்ப்புக்களையும் அவசியங்களையும் நிறைவேற்றி வைப்பதற்கு கூட முதலாளித்துவ சொத்துடமை முறையில் மாற்றம் அவசியப்பட்டது. தொழிலாளர் ஆட்சியின் கீழ் முதலாளித்துவ பக்டரிகளையும் நிறுவனங்களையும் தேசியமயமாக்காமல் தொழிலாளர்களின்அவசியங்களை போன்றே ஒடுக்கப்படும் தேசியஇனங்களின் கலாச்சார அவசியங்களையோ அல்லது பயிரிடுவதற்கு நிலம் போன்ற விவசாயிகளின் அவசியங்களையோ இட்டுநிரப்ப முடியாது இருந்தது. இதனால் புரட்சியின் வாதத்துக்கு அமைய தொழிலாளர் வர்க்க அரசுக்கு சோசலிச நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமாகியது.

### அக்டோபர் மூலம் கிடைத்த விடுதலை

இதனை பழைய ரூஷ்ய சமூதாயத்தின் சகல உறுப்புக்களும் தோல்களைக் களைந்து கொண்டதாக அழைக்க முடியும். பழைய சமுதாய ஒடுக்குமுறையின் ஓட்டை உடைத்து எறிய நேரிட்டது. மூச்சு அடைக்கும் அளவுக்கு சிறை வைக்கப்பட்டு காட்டுமிராண்டித் தனத்தினுள் தள்ளப்பட்டுக் கிடந்த சமூதாயத்துக்கு அக்டோபர் புரட்சியினால் கிடைத்த விடுதலையை வெளிக்காட்டும் விதத்தில் ஒரு சில விடயங்களை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த விடயங்களை மட்டும் கணக்கில் எடுங்கள். 1917 அக்டோபர் புரட்சியின் பின்னர் 80 மொழிகளில் கல்வி புகட்டுவது ஆரம்பமாகியது. அதே அளவுக்கு அம்மொழிகளில் புதினப் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன. நிலமானித்துவ ஸார் மன்னனின் கீழ் வாழ்ந்து வந்த சில மக்கட் குழுக்கள் இன்னமும் வேடுவர் யுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் பேசிய மொழிகளுக்கு எழுத்து வடிவம் இருக்கவில்லை. அவர்களிடையேயும் கூட படிப்பறிவை அபிவிருத்தி செய்வதற்காக அவர்கள் பேசிய மொழிகளுக்கு புதிய எழுத்து வடிவங்களை லத்தீன் அரிச்சுவடிகளுக்கு ஏற்ப தயாரித்து வழங்கவும் கூட தொழிலாளர் அரசு நடவடிக்கை எடுத்தது. இரண்டு மொழிகளை மட்டும் பேசும் இந்நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியாது படுகொலை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை முதலாளித்துவ ஆட்சியின் வங்குரோத்துக்கு எதிராக எவ்வளவு முற்போக்கானது என்பது 1917ல் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் தொழிலாளர் அரசினை அமைத்ததன் மூலம் நிரூபிக்கப்படவில்லையா!?

அக்டோபர் புரட்சியின் பின்னர் மகளிரின் விடுதலைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மிகவும் முக்கியம். வாய்ந்தவை. ஆண் தொழிலாளர்கள் வேலை செய்த பக்டரிகளில் அவர்களின் முழுக் குடும்பத்துக்கும் சலுகை உணவு வழங்குவது ஆரம்பமாகியது. அவ்வாறே தொழிலாளர் வசிப்பிடங்களில் சமூக உணவகங்கள் திறந்து வைக்கப்பட்டது. கண்ணினால் நீர்வடிய. வாயினால் இரத்தம் கசிய விறகு அடுப்பில் தீமூட்டிக் கஷ்டப்பட்ட பெண்களுக்கு இது எவ்வளவு நிவாரணம்? உயர் மத்தியதர வர்க்க மகளிரின் ஓய்வுக் காலத்தைக் கழிப்பதற்கான ஒரு முறையாக நடாத்தப்பட்டு வரும் மகளிர் இயக்கம் எனப்படுபவைக்கு எதிராக விஞ்ஞானபூர்வமான மார்க்சிச தீர்வ எந்தளவுக்கு பயன்மிக்கது என்பதை அத நடைமுறை ரீதியில் நிரூபித்துக் காட்டியது குசினியில் ஊழியம் செய்யும் நிலையில் இருந்த பெண்களை விடுதலை செய்வதற்கு மேலா கைத்தோல் உரியும் வரை துணி துவைக்கு நிலையில் இருந்து விடுதலை செய்யவு பொது அமைப்புக்களும் குழந்தைகளை பராமரிக்க சிறுவர் பராமரிப்பு நிலையங்களு சிறுவர் பாடசாலைகளும் அமைக்கவும் 1917 பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அக்டோபர் புரட்சியின் பின்ன இளைஞர்களுக்கும் பிரமாண்டமான விடுதலை கிடைத்தது. சகல பிற்போக்கு ஆளு வர்க்கங்களும் இளைஞர்கள் தொடர்பா கொடூரமான மனப்பான்மையை வேட்ை மனப்பான்மையைக் கடைப்பிடித்தன இந்நாட்டில் வாழும் நாம் அதை எ கண்மூன்னால் காண்கின்றோம். அக்டோ புரட்சி இளைஞர் தலைமுறைக்கு வழங்கி விடுதலையினால் உயிரைத் தியாகம் செய் தொழிலாளர் அரசைக் காக்கவும் இலட்சோ இலட்சம் இளைஞர்கள் உள்நாட்டு யுத் காலத்தில் உயிரை அர்ப்பணம் செய்தன பேரின ரூஷ்ய சோவினிசத்தை ஒழித்துக்கட் பல்வேறு தேசிய இனங்களையும் சேர் இளைஞர்கள் ஒன்றுபட்டு நின்றன காணக்கூடியதாக இருந்தது. தடைக கலாச்சார வெட்டுக் கொத்துக்களினா முற்றுகையிடப்பட்ட இளைஞர்கள் பிற்போ அரசு சம்பந்தமாகக் காட்டும் வெறுப் அரசை கரைக்க வைக்கும் நடவடிக்கை பிரமாண்டமான பாத்திரத்தினை இட்டுநிரப் என எங்கேல்ஸ் குறிப்பிடுகின்றா தொழிலாளர் அரசு அரச அமைப்பின் தே உரிக்கும் தொடரில் ஆரம்ப நடவடிக்கையா

1917 அக்டோபர் புரட்சி தொடர்பாக ந இதுகாறும் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்

படிப்பகம்

www.padippakam.com



# 80 வது ஆண்டு நிறைவு



சோ.ச.க. அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டு நிறைவு விழாவுக்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினர்.

கோட்பாட்டின் அடிப்படை அம்சங்கள் மூன்றினை இட்டுநிரப்பும் மாதிரியை விளக்கினோம். முதலாவது, ஏழை மக்களின் ஆதரவைப் பெற்ற தொழிலாளர் வர்க்கம் அரச அதிகாரத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியினை இட்டுநிரப்புவதுடன் நின்றுவிடாது, சோசலிச நடவடிக்கைகளுக்கான பணியில் இறங்குதல். இரண்டாவது, ஒரு நாட்டில் வெற்றி பெறும் தொழிலாளர் வர்க்கப் புரட்சி, உலக சோசலிசப் புரட்சியின் நடவடிக்கையாக விளங்குதல். ஒரு நாட்டில் தோன்றும் புரட்சி அனைத்துலக அரங்கில் பரந்து , உலக அரங்கில் மலர்தல். மூன்றாவது, தொழிலாளர் வர்க்க அரசின் கீழ் அனைத்துலக ஒத்துழைப்பின் அடிப்படையில் பழைய சமூதாயம் ஒரு தொகை தோல் உரிப்புக்களுக்கு இலக்காகி, சோசலிச சமுதாயத்தை நோக்கி இடைமருவுதல். அக்டோபர் புரட்சியினுள் இந்த விஞ்ஞானபூர்வமான தூரதிருஷ்டி முதலில் நிரூபிக்கப்பட்டது. ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு ஏகாதிபத்திய யுகத்தின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் விடுதலை சம்பந்தமாக எவ்வளவுக்கு பொருத்தமானது என்பதை அது வெளிப்படுத்தியது. முதலாளித்துவச் சார்பு சீர்திருத்தவாதிகளும் வர்க்க சமரசவாதிகளும் ட்ரொட்ஸ்கிக்கும் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கும் அந்தளவுக்கு வன்மம் சாதிப்பது அக்டோபர் புரட்சிக்கு காட்டும் வன்மத்தின் ஒரு பாகமாக அமைந்திருப்பது தற்செயலானது அல்ல. அவர்கள் அன்புடன் கட்டியணைப்பது சோவியத் யூனியனுள் வளர்ச்சி கண்டுவந்த வசதிவாய்ப்புக்கள் நிறைந்த அதிகாரத்துவத்தின் தேசியவாத நாற்றமெடுப்பை வெளிக்காட்டிக் கொண்ட ஜோசப் ஸ்டாலினையேயாகும்.

## ஸ்டாலினிச சீரழிவு

1917 அக்டோபர் புரட்சியின் இலக்குகளையும் முற்போக்கு வேலைத்திட்டங்களையும் காட்டிக் கொடுத்ததன் மூலம் முதலாவது தொழிலாளர் வர்க்க அரசின் வீழ்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்த ஸ்டாலினிசம் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் முக்கிய மூன்று அம்சங்களையும் மீறிச் செயற்பட்ட விதத்தை நாம் சுருக்கமாவேனும் ஆராய்ந்து பார்ப்போம்.

புரட்சியின் பின்னர் சமுதாயத்தின் தோல் களட்டுவதை நிறுத்தி, சமுதாயத்தின் சரீரத்தின் மீது பழைய பிற்போக்கு ஓட்டை மீண்டும் திணிப்பது வசதி வாய்ப்புக்கள் நிறைந்த அதிகாரத்துவத்தின் வேலைத்திட்டம் ஆகியது. உள்நாட்டு யுத்த நிலைமையின் கீழ் கசக்கிப் பிழியப் பட்ட பொருளாதாரம் முதுகெலும்பை நிமிர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் எதிர்பார்ப்புக்களுடன் எடுக்கப்பட்ட தற்காலிக நடவடிக்கையாக போல்ஷிவிக் கட்சி கருதிய புதிய பொருளாதாரக் கொள்கை மூலம் தோன்றும் புதிய முதலாளித்துவ வர்த்தகர்களையும் முதலாளித்துவ குலாக்குகளையும் கொண்ட சமூகத் தட்டு, தேசியமயமாக்கப்பட்ட சொத்து முறையின் கீழ் பலம் பெற்று வரும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நின்று கொண்டது. அக்டோபரின் வெற்றி, உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலையின் முதலாவது கட்டமாகக் கணிப்பதற்கு மாறாக அவை தமது வசதிவாய்ப்பு நிலைமைகளுக்கான ஏணியாக்கிக் கொண்ட புதிய அதிகாரத்துவத்தின் மனோபாவம் இந்தப் புதிய வர்க்கங்களின் அவசியங்களுடன் இணைந்து கொண்டது. இந்தப் பிற்போக்கு அவசியங்களால் சிறைப்பிடிக்கப்படுவதை நிராகரித்த ட்ரொட்ஸ்கி முதலான. மார்க்சிசக் குழுவுக்கு எதிராக அதிகாரத்துவமும் புதிய முதலாளித்துவத் தட்டும் தமது பிரதிநிதியாக ஜோசப் ஸ்டாலினை தெரிந்தெடுத்தன.

இன்றைய தருணத்தில் வீழ்ச்சி கண்டு கலைக்கப்பட்டுள்ள சோவியத் யூனியனுக்கு சொந்தமாக இருந்த பிராந்தியங்களில் தேசியவாத ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவப் போக்குகள் தலையெடுப்பதற்கான பின்னணியை ஸ்டாலினின் கீழ் செயற்பட்ட பேரின ரூஷ்ய சோவினிச விதிமுறையே முதலில் வழங்கியது. தேசிய இனங்களுக்கு இடையே ஒத்துழைப்பையும் சமரசத்தையும் சமத்துவத்தின் அடிப்படையில் உருவாக்க அக்டோபரின் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஸ்டாலினிசத்தின் கீழ் அடிதலையாக்கப்பட்டது. ஜோர்ஜிய மக்களின் தேசிய அபிலாசைகளைப் பலாத்காரமான முறையில் நசுக்கித் தள்ள ஸ்டாலின் எடுத்த நடவடிக்கைகள் நோய்ப் படுக்கையில் இருந்த லெனினைக் கூட வைத்திய ஆலோசனையையும் கூடப் பொருட்படுத்தாது 1923ல் ஆத்திரமடையச் செய்தது என்பதை இங்கு நாம் நினைவில் கொண்டாக வேண்டும்.

தொழிலாளர் அரசின் கீழ் பல்வேறு தேசிய கலாச்சாரங்களும் சுதந்திரமாக அபிவிருத்தியடைய இடமளிப்பதற்குப் பதிலாக மாஸ்கோ நகரில் வெளியிடப்படும் கட்டளைத் தரத்துக்கு இணங்கவே அவை வெளியிடப்பட வேண்டும் எனக் கால்கட்டுப் போடப்பட்டிருந்தது. இது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கீழ் இடம்பெற்றது.

மகளிருக்கும் இளைஞர்களுக்கும் எதிரான ஒடுக்குமுறைகளை மீண்டும் புகுத்துவது ஸ்டாலினிசத்தின் கீழ் இடம் பெற்றது. எலும்பு உடைக்கும் வேலை முறையை அறிமுகம் செய்து வைத்த ஸ்டக்கநோவ் இயக்கத்தின் கீழ் அதற்கு அமையாத மகளிர் மட்டுமன்றி தொழிலாளர்களும் கூட கண்டனம் செய்யப்பட்டனர். அதிகாரத்தின் மூலம் பெரும் மூளை வல்லமை கொண்டிராத ஸ்டாலினிச அதிகாரத்துவம் சரீர பலத்தையே மதித்தது.

கெடுபிடி சிறை வைப்புக்களுக்கு மோசமான முறையில் இலக்கானவர்கள் இளைஞர்களே. பழைய ஸார் ஆட்சியின் கீழ் இளைஞர்களின் முயற்சிகள் கற்பனா மனக் கோட்டைகள் எனச் சேறடிக்கப்பட்டது. ஸ்டாலினிச அதிகாரத்துவம் விடுத்த ஒரு கட்டளை "இளைஞர்கள் பரஸ்பரம் செய்து கொள்ளும் பேச்சு வார்த்தைகளை நிறுத்து" என்பதாக இருந்தது. இது இளைஞர்கள் ஒன்று கூடி கருத்துப் பரிமாறிக் கொள்வது சம்பந்தமாக சகல பிற்போக்கு ஆட்சியாளர்களும் காட்டும் வெறிபிடித்த எதிர்ப்பு ஸ்டாலினிச ஆட்சியாளர்களையும் விட்டுவிடவில்லை. லியொன் ட்ரொட்ஸ்கி இளைஞர் பலம் சம்பந்தமாக நம்பிக்கை கொண்டு அவர்களை பயிற்றி எடுக்க செயற்பட்டமை கட்சித் தலைமைக்கு எதிராக இளைஞர்களைத் தூண்டிவிடுவதாக அதிகாரத்துவத்தினால் குற்றம் சாட்டப்பட்டது.

இன்று உலகம் பூராவும் இளைஞர் தலைமுறையினர் ட்ரொட்ஸ்கி பக்கம் ஈர்க்கப்பட்டு உள்ளார்களே தவிர ஸ்டாலினிசம் பக்கம் அல்ல என்பதை நாம் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம். விஞ்ஞானபூர்வமான மார்க்சிச சிந்தனையினதும் சமூக பயணத்தின் போக்கினதும் உள்ளடக்கம் அத்தகையதாகும். அதன்பலம் உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினை பிரதிபலிக்கின்றது. பழைய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் நாற்றம் கண்ட அதிகாரத்துவங்கள் புதிய கோலம் பூண்டு, பல்வேறு பெயர்களில் கட்சிகளை அமைத்துக் கொண்டு பொதுமக்களை ஏமாற்ற முன்வந்துள்ளனர். இதனை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் அவசியங்களைப் பற்றி அக்கறையே கிடையாத வயிற்றுமாரிகள் மட்டுமே தூக்கிப்பிடித்து தலையில் வைத்துக் கொண்டாட முடியும். இதனை யுத்தத்தின் பின்னைய ஸ்டாலினிச கட்சிகள் சந்திரிகா குமாரதுங்க போன்ற ஏகாதிபத்தியச் சார்பு அழிவுமிக்க முதலாளித்துவ வேலைத் திட்டத்தில் இருந்து வேறுபட்ட எதுவும் பொது மக்களுக்கு கிடைக்காது என்பதை அறிந்தறிந்தும் சந்தர்ப்பவாதிகள் அந்த புதிய பாணிகளை வருணிப்பது எமக்குத் தெரிகின்றது.

## அனைத்துலக புரட்சி காட்டிக்கொடுக்கப்பட்டது

இனி நாம் நிரந்தரப் புரட்சியின் இரண்டாவது அங்கத்துக்கு திரும்புவோம்: 1917 அக்டோபர் புரட்சி அனைத்துலகப் புரட்சியினுள் வேரூன்றாதது ஏன்?அது தனிமைப்பட்டுப் போனது ஏன்?

ஏகாதிபத்திய யுகத்தை லெனின் யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தமாக பண்பாக்கம் செய்தார். 1914ல் வெடித்த முதலாம் உலக யுத்தத்தைப் போலவே யுத்தத்தின் மையத்தில் வெடித்த ஒரு தொகை வர்க்கப் புரட்சியின் மூலமும் இந்தப் பண்பாக்கம் சரியான முறையில் நிரூபிக்கப்பட்டது. தொழிலாளர் வர்க்கம் அரச அதிகாரத்தை தனது கரங்களுக்குள் கொண்டு வெற்றி பெற்றது ரூஷ்யாவில் மட்டுமே. இதன் மூலம் முன்கூட்டியே தயார் செய்து கொண்டு இருக்க வேண்டி இருந்த புரட்சிக் கட்சியின் தீர்க்கமான தன்மையே தவிர ஏனைய நாடுகளில் புரட்சிகரக் கிளர்ச்சிகள் இல்லாது போனது அல்ல என்பது ஊர்ஜிதமாகின்றது. இவற்றிடையே 1918ன் கடைப்பகுதியில் கிளர்ந்த ஜேர்மன் புரட்சி உலக வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியினால் அந்த ஜேர்மன் புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டது. கெயிஸர் ஆட்சிக்குப் பதிலாக முதலாளித்துவ குடியரசு அரசாங்கம் ஆட்சி செய்தது. இதன் மூலம் அக் கட்சி சரியாக ரூஷ்யாவினுள் மென்ஷிவிக்குகளும் சமூகப் புரட்சியாளர்களும் ஆற்றிய துரோக கைங்கரியங்களில் ஈடுபட்டனர்.அது மட்டும் அல்ல. அத்துரோகம் றோஷா லக்சம்பேர்க், கார்ள் லீப்நேக்ட் போன்ற தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத தலைவர்களின் பிணங்களுக்கு மேலாகவும் அமுல் செய்யப்பட்டது. லெனின்-ட்ரொட்ஸ்கி தலைமையை 1917ல் ரூஷ்ய தொழிலாளர் வர்க்கத்துக்கு இல்லாமல் செய்துவிட மென்ஷிவிக்குகளும் சமூகப் புரட்சியாளர்களும் செய்த முயற்சிகள் தவிர்க்கப்பட்டதற்கு பொதுமக்கள் இயக்கத்தினுள் வேரூன்றியதும் அரச அதிகாரத்தை கைப்பற்றும் மூலோபாயத்தினால் ஆயுதபாணியாகி, துணை உபாயங்களைத் திறமையாகக் கையாண்டதுமான போல்ஷிவிக் கட்சி இருந்ததே காரணம்.

1921லும் 1923லும் மேலும் இரண்டு தடவைகள் ஜேர்மன் தொழிலாளர் வர்க்கம் புரட்சிகர முயற்சிகளில் ஈடுபட்டது. 1919ல் போல்ஷிவிக் கட்சியின் தலைமையின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட மூன்றாம் அனைத்துலக அகிலத்தின் ஒரு கிளை ஜேர்மனியில் அமைக்கப்பட்டு இருந்த போதிலும் 1921 அளவில் அது இன்னமும் ஒரு பக்குவம் அடைந்த கட்சியாகிவிடவில்லை.முக்கியமாக இளைஞர்களைக் கொண்டிருந்த இக்கட்சி புரட்சிகர உத்வேகத்தில் அக்கறையை காட்டிக் கொண்டாலும் பொதுமக்கள் இயக்கத்தைத் தம்பக்கம் வென்றெடுக்க அவசியமான உபாயங்கள் தொடர்பாக முதிர்ச்சியற்ற மனப்பாங்கையே கொண்டிருந்தது.மூன்றாம் அகிலத்தினுள் கலந்துரையாடலுக்கு இலக்கான 'இடதுசாரி கம்யூனிசத்தின் சிறுபிள்ளை வலிப்பு' என்ற நூல் முக்கியமாக ஜேர்மன் கிளையின் எண்ணற்ற அரசியல் போக்குக்களுக்கு எதிராகவே வரையப்பட்டது. 1923ல் தோன்றிய புரட்சிகர வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட்டதற்கு ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமீடுகள் உரிய முறையில் இடம்பெறாததே காரணமாகியது. இதன்படி அச்சமயத்தில் ரூஷ்யாவுக்கு வெளியே பிரதிபலித்தது புரட்சிகர பொதுஜன கிளர்ச்சி சங்கிலியின் பலவீனமான தொடுவை இருந்தது. புரட்சி கட்சி என்ற விடயத்தில் ஆகும். அதற்கான முக்கிய பொறுப்பு, சமூக ஜனநாயகக் கட்சிகளின் துரோகிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

இந்த ஆரம்பகால அனைத்துலக புரட்சிகளின் தோல்வி சோவியத் யூனியனினுள் வசதி வாய்ப்புக்கள் படைத்த அதிகாரத்துவத்தினதும் புதிதாக எழுச்சி கண்டுவந்த முதலாளித்துவப் பகுதியினர்தும் கைகளைப் பலப்படுத்தியது. போல்ஷிவிக் கட்சியினுள் ஸ்டாலின், புகாரினைச் சூழத் திரண்ட பழைய தலைமையின் பரந்த பகுதியினர் இந்தச் சமூகத் தட்டுக்களைச் சூழவே இழுபட்டுப் போயினர். ஸ்டாலின் சினோவியேவ், கமனேவ் மூவர் குழு ட்ரொட்ஸ்கி சமர்ப்பித்த அனைத்துலக தொழிலாளர் வர்க்க

12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை...

11ம் பக்கத் தொடர்ச்சி

முன்னோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் லெனினுக்கு எதிரான "ட்ரொட்ஸ்கிசம்" எனச் சேறடித்தனர். அதை நசுக்குவதற்கு அதிகாரத்துவத்தை சூழ்ந்த ஒரு இயக்கத்தைத் தொடுத்தனர். ரூஷ்யப் புரட்சி உலக சோசலிசத்திற்காக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும் என்ற நிலைப்பாட்டைக் கைகழுவி விட்டுவிட்டு அதற்குப் பதிலாக ரூஷ்யப் புரட்சி கட்சியினதும் அரச அதிகாரத்துவத்தினதும் வசதி வாய்ப்புக்களுக்கானது என்ற நிலைப்பாடு படிப்படியாக மாதிரியாகக் கொள்ளப்பட்டது. "தனிநாட்டில் சோசலிசம்" என்ற கோட்பாடு அந்தப் பிற்போக்கு தேசியவாதத்தினை தழுவி முன்வைக்கப்பட்டதாகும்.

தனிநாட்டில் சோசலிசம் என்ற கோட்பாடு சோவியத் யூனியனினுள் தொழிலாளர் வர்க்கத்தையும் இளைஞர்களையும் நசுக்குவதன் மூலம் அனைத்துலக மக்கள் கிளர்ச்சியை மக்கள் முன்னணிகள் மூலம் காட்டிக் கொடுக்கும் ஒரு விதிமுறையாகியது. 1926 பிரித்தானிய பொது வேலை நிறுத்தம் அந்நாட்டு தொழிற்சங்க சம்மேளனங்களாலும் சமூக ஏகாதிபத்திய "இடதுசாரிகளுடன்" சேர்ந்து காட்டிக் கொடுக்கப்பட்டது. இது போல்ஷிவிக் கட்சியினதும் மூன்றாம் அகிலத்தினதும் உலகப் புரட்சிகர முன்நோக்கினை ரூஷ்யாவின் வசதி வாய்ப்புக்கள் படைத்த அதிகாரத்துவத்தின் அவசியங்களுக்கு ஏற்கத் தலைகீழாக்குவதாக விளங்கியது. இது 1933ல் ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வர வழிவகுத்ததோடு மட்டுமன்றி பிரான்சு, ஸ்பெயின் புரட்சிகளைக் காட்டிக் கொடுத்ததன் மூலம் இரண்டாம் உலக யுத்தத்துக்கும் வழி அமைத்தது.

1936 37 அவமானம் நிறைந்த மாஸ்கோ பொய் வழக்கு தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பணியினை அடியோடு தொலைத்துக் கட்டும் சதியை சுட்டிக்காட்டியது. இதன்மூலம் 1917 தொழிலாளர் வர்க்கப் புரட்சியுடன் ஏதேனும் ஒரு தொடர்பு வைத்தவர் பழைய போல்ஷிவிக் தலைவர்கள் உட்பட சகலரும் அடியோடு கொலை செய்யப்பட்டனர். தொழிலாளர் வர்க்க அரசின் காவலரணாக விளங்கிய சோவியத் சபைகளின் அதிகாரம் அதிகாரத்துவத்தின் மூலம் நசுக்கப்பட்டது.

"தனிநாட்டில் சோசலிசம்" கோட்பாட்டுக்கு இணங்க வெளியாகிய "பாட்டாளிவர்க்க கலாச்சார" கருத்தின் கீழ் சகல துறைகளிலும் விஞ்ஞானம், கலை, தொழில்நுட்பம் அனைத்து சிருஷ்டித் திறனினதும் குரல்வளை நசுக்கப்பட்டது. பிற்போக்கு ஆளும் அதிகாரத்துவம் கலாச்சாரத்தினதும் சுதந்திர கருத்து வெளிப்பாட்டினதும் யனாகியது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் இணைந்து உலகம் பூராவும் விரிவுரைகள் நடாத்திய வடிம் றொகோவின் என்ற ரூஷ்ய தேசிய கல்வியாளர் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கீழ் அரசியல், கலாச்சாரத் துறையில் இழைக்கப்பட்ட பேரழிவினை ஏழு நூற் தொகுதிகளாக எழுதி வெளியிட்டுள்ளார்.

## மார்க்சிசத்தின் யதார்த்தம்

வடிம் றொகோவினின் சுயாதீனமான வரலாற்று ஆய்வுகள் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினால் பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் சில வேளைகளில் கடுமையான தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து கொண்டும் கூட கட்டிக் காத்த விஞ்ஞானபூர்வமான, மார்க்சிச முன்நோக்கின் காலதேச வர்த்தமானத்தையும் யதார்த்தத்தையும் நிரூபித்துள்ளது. இதன்மூலம் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் மூலம் மார்க்சிசத்தின் செல்லுபடியற்ற தன்மை வெளிப்பாடாகி உள்ளதாக கூறும் பிற்போக்குப் புலம்பல் சிதறுண்டு போயுள்ளது.

மார்க்சிசத்தின் தேசியவாதத் திரிபான ஸ்டாலினிசத்துக்கு எதிராகப் போராடிய மார்க்சிசப் போக்கு தொடர்ந்து இருந்து வந்தமை அதன்மூலம் ஊர்ஜிதமாகின்றது. அது ட்ரொட்ஸ்கியின் தலைமையில் சோவியத் யூனியனின் உள்ளும் மூன்றாம் அகிலத்தின் உள்ளும் 1923 தொடக்கம் கட்டியெழுப்பப்பட்ட இடதுசாரி எதிர்க் கட்சியும் நான்காம அகிலமும் ஆகும். 1917 அக்டோபர் புரட்சியினுள் வெற்றிகரமான வெளிப்பாடு ஈட்டிக்கொண்ட நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்து தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அவசியமும் செய்ய முடியாத தொடர்பும் அன்றையைவிட தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்களிற்கு புலனாகுவது இன்றுதான். ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஆட்சி செய்த சோவியத் யூனியனின் திறைசேரியினதும் சரி தொடர்புச் சாதனங்களதும் சரி வசதி வாய்ப்புக்கள் இல்லாதிருந்த போதிலும் ட்ரொட்ஸ்கி முன்வைத்த உலக முன்னோக்கின் பலம் இன்றும் கூட உயிர்வாழ்கின்றது. ட்ரொட்ஸ்கி நம்பிக்கை வைத்திருந்த புதிய தலைமுறையினர் அவருக்கு துரோகம் செய்யவில்லை. அதற்கு அனைத்துலகக் குழுவின் இன்றைய காரியாளர்கள் சாட்சி பகர்கின்றனர்.

உலக முதலாளித்துவ அமைப்பு இன்று காலடி வைத்துள்ள வீழ்ச்சி காலக் கட்டத்தினுள் அக்டோபர் புரட்சி தோற்றுவித்த சகல வரலாற்று பிரச்சினைகளும் பன்மடங்கு உக்கிரத்துடன் பொதுமக்கள் எதிரில் தலைதூக்கும். அந்தப் பிரச்சினைகளுக்கு அவசியமான பதில்களால் மக்களை ஆயுதபாணியாக்குவதற்கு வெற்றி கண்ட புரட்சிக் கட்சி இல்லாததனால் அக்டோபருக்குப் பின்னர் உலகத் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் செலுத்தியுள்ள மனித நஷ்டஈடு பிரமாண்டமானது. அனைத்துலகக் குழுவும் அதன் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியும் சபதம் செய்து போராடுவது அனைத்து தேசிய சீர்திருத்தவாத நப்பாசைகளுக்கும எதிராக அனைத்துலக சோசலிச முன்நோக்கினாலும் வேலைத் திட்டத்தினாலும் பொதுமக்களை ஆயுதபாணிகள் ஆக்குவதற்கேயாகும். பிற்போக்கு முதலாளித்துவ அமைப்பை உலகில் இருந்து துடைத்துக் கட்டுவதற்கேயாகும். அபிவிருத்தி கண்டுள்ள உலகளாவிய சக்தி வாய்ந்த புதிய தொழில் நுட்பத்தின் உச்சப் பயனை மனித இனத்தின் நலனுக்காக உலக சோசலிசத்தின் கீழ் மட்டுமே முற்போக்கான முறையில் கட்டவிழ்த்துவிட முடியும்.

நாற்றம் கண்ட முதலாளித்துவ அமைப்பினால் உலகம் பூராவும் உள்ள மக்கள் தரித்திரத்தின் உள்ளும் அழிவின் உள்ளும் தள்ளப்பட்டுள்ளனர். இந்தியத் துணைக்கண்டம் இந்த காட்டுமிராண்டித்தனத்தை வெளிக்காட்டும் ஒரு பிராந்தியமாக இருந்து கொண்டுள்ளது. இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கடந்த 14 வருடகால நீண்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் முன்னெடுக்கும் இனவாத யுத்தம் மட்டுமே அதற்கு நல்ல உதாரணம். பரந்த மக்களின் அன்றன்றாடைய கவனத்துக்கு உள்ளாகாத வேறு தற்கொலை வீதங்களின் அதிகரிப்பு இந்த முதலாளித்துவ சமுதாயம் நாற்றம் கண்டுள்ள முறையை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோர் எண்ணிக்கை ஆண்டுக்கு 10 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக சொல்லப்படுகின்றது. இதற்கு இணங்க தினமும் சுமார் 27 பேர் அதாவது ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் ஒருவருக்கு கூடியோர் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். இந்தியாவில் தற்கொலை ஒவ்வொரு 6 நிமிடங்களுக்கும் ஒருவர். மக்கள் எதுவிதத்திலும் சகித்துக் கொள்ள முடியாத பொருளாதார, சமூக நிலைமைகள் இல்லையேல் இந்தச் சுய அழிவு இங்ஙனம் இடம் பெறலாம் என நினைக்க முடியுமா? இந்த உலகின் 477மாபெரும் முதலாளிகள் உலக ஜனத்தொகையில் சரி அரைவாசிக்கும் உரிய வருமானத்தை தமது மடிகளில் கட்டிக் கொள்ளும் நிலையில் அதைவிட்டு



செஞ்சேனை அணிவகுப்பை பார்வையிடும் ட்ரொட்ஸ்கி

சந்தேகம் கொள்ள முடியுமா?

இந்த நிலைமையே சமுதாயத்தினதும் பொருளாதாரத்தினதும் புரட்சிகர மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பின்தங்கிய பொருளாதாரங்களில் சிருஷ்டிக்கப்பட்ட தேசிய முதலாளித்துவ வேலைத் திட்டங்களின் மூலம் எதிர் நடவடிக்கையில் இறங்க முடியும் என சந்தேகம் ஏற்பட்டு இருக்குமானால் இன்றைய பூகோளமயமான உலகப் பொருளாதார நிலைமையின் கீழ் அத்தகைய சந்தேகம் ஏற்படக் கூட எந்தவிதமான இடமும் எஞ்சவில்லை. சமீபத்தில் புலிப் பாய்ச்சலில் அபிவிருத்தி கண்டவையாக புகழப்பட்ட மலேசியா, தாய்வான், இந்தோனேஷியா, தென்கொரியா போன்ற நாடுகள் முகம் கொடுத்த பிரமாண்டமான பொருளாதார நெருக்கடி நிலைமைகள், அதன் தாக்கத்தை உலகம் பூராவும் உள்ள பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியாக வெளிக்காட்டியது.

இதனாலேயே முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களும் அவற்றின் சுயநிர்ணய கோரிக்கைகளும் ஏகாதிபத்தியவாதிகளின் கைகளில் ஆட்டம் போடுபவையாக அடியோடு மாற்றம் கண்டுள்ளன. ஏகாதிபத்திய மூலதனத்துடன் இணையாமல் தேசிய முதலாளித்துவ பொருளாதாரத்தை கொண்டிருக்க முடியாததைப் போலவே ஏகாதிபத்திய மூலதனத்தின் பூகோளரீதியில் பொருளாதாரத் திட்டங்களை வரைந்து கொள்ளும்படி நெருக்கி உள்ளதனாலும் முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களும் தாம் விடுதலை செய்வதாக மோசடியாகக் கூறிக் கொள்ளும் மக்களை ஏகாதிபத்திய அடிமை ஏலத்துக்கு இட்டுச் செல்லுகின்றன. தொழிலாளர் வர்க்கத்தினை பிளவு படுத்துவதன் மூலம் பொதுமக்களை மோதுதல்களுக்கு இட்டுச் செல்லுவதன் மூலம் பிற்போக்கு தொழிற்பாட்டுக்கு பெரிதும் வாய்ப்பான நிலைமையை இந்த விடுதலை இயக்கங்கள் எனப்படுபவை இலங்கையின் வடக்கு கிழக்கிலும் இந்தியத் துணைக்கண்டத்தில் போலவே உலகின் ஏனைய இடங்களிலும் காட்டிக் கொண்டுள்ளன. இந்த மோசடியானதும் பிற்போக்கானதுமான வேலைத் திட்டத்துக்கு எதிராக தேசிய, இனவாத செல்வாக்குகளை தோற்கடிக்க வேண்டும் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்தின் அடிப்படையில் ஏழை மக்களை அணிதிரட்டி, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர வேண்டும். இதை மோசடி தீவிரவாதிகள் எதிர்க்கின்றார்கள். இது அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தை எதிர்த்து முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் பிணைந்து கொண்டுள்ளார்கள் என்பதற்கு சரியான அடையாளம் ஆகும்.

## தொழிற்சங்கம்

பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்களின் மத்தியில் தேசியவாத, வர்க்க சமரச பழைய அமைப்புக்கள் "ஒரு கல்லின் மீது மற்றையது தங்காது" என ட்ரொட்ஸ்கி கூறிய விதத்தில் சோவியத் யூனியனதும் கிழக்கு ஐரோப்பாவினதும் ஸ்டாலினிச ஆட்சிகள் சிதறுண்டு போனதைப் போலவே மக்கள் முன்னணிவாத சகல அமைப்புக்களும் அனைத்து நாடுகளிலும் நாற்றம் கண்டு போனமையும் நிரூபித்துள்ளது. தேசியவாத முதலாளித்துவ சார்பு வேலைத்திட்டங்களினுள் சிறையுண்டுபோன முக்கிய அமைப்பு தொழிற்சங்கங்களாகும். கடந்த யூ.என்.பி. ஆட்சிக் காலத்தில் ஏகாதிபத்திய மூலதனத்தின் ஆக்கிரமிப்பு தொடங்கியதுடன் சகல தொழிலாளர் பகுதியினரதும் சம்பளம், சேவை நிலைமைகள், தொழில், வாழ்க்கை நிலைமைகள் துடைத்துக் கட்டப்பட்டபோது தொழிற்சங்கங்களும் அந்த பேரழிவுக்கு தோள் கொடுத்துக் கொண்டு கைகளைக் கட்டிக்கொண்டு இருந்த பாணி இன்று பிரசுரிக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு பத்திரத்தில் புள்ளி விபரங்களுடன் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இது சகல நாடுகளிலும் காணக் கூடியதாக உள்ள ஒரு இலட்சணமாகும். மூலதனத்தின் பூகோளமயமான வெறிபிடித்த அலைச்சலோடு தொழிற் சங்கங்களின் பணி, உழைப்புச் சுரண்டலுக்கு பெரிதும் வாய்ப்பானதும் இலகுவானதுமான நிலைமைகளை வழங்குவதன் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் முதலாளித்துவ ஏஜன்டுகளுடன் ஒன்றிணைந்து தொழிற்படுவதாகியது.

முதலாளித்துவ சொத்து முறையை அங்கீகரித்துக் கொண்டு அதன் கீழ் பேரம் பேசுவதைத் தமது கடமையாக்கிக் கொண்ட தொழிற்சங்க வாதம், முதலாளித்துவ அமைப்பைத் தூக்கிவீசும் சோசலிசப் போராட்டத்துக்கு எதிர்ப்புக் காட்டுகின்றது. நாம் இதற்கு முன்னர் சுட்டிக்காட்டிய ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சி சோசலிச புரட்சியின் மூலோபாயத்துக்குப் போராடு பவர்களின் இரத்தக் களரியின் ஊடாக ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் காவலனாக மாறியது தொழிற் சங்கவாதத்துக்கு அடிபணிந்து போனதன் பெறுபேறாகவாகும். அவ்வாறே அக்டோபர் புரட்சியில் இருந்து கற்க வேண்டிய முக்கிய படிப்பினைக்கு நாம் மீண்டும் திரும்பினால் தொழிற்சங்க வாதத்துக்கு ஆட்பட்ட பொருளாதாரவாதத்துக்கு எதிராக சோசலிச நனவினால் தொழிலாளர் வர்க்கத்தை ஆயுத பாணியாக்க உறுதியான போராட்டம் 1903 என்ன செய்ய வேண்டும் நூலில் தொடங்கி லெனினின் போல்ஷிவிக் கட்சி புரட்சியை வெற்றியீட்ட நடாத்தியது என்பதைக் காண முடியும்.

புரட்சியின் தீச்சுவாலை காணப்பட்ட

www.padippakam.com

1917 அக்டோபரில் கூட தொழிற் சங்கங்களின் முதலாளித்துவத் தன்மை அதைத் தணிக்க குளிர்நீர் வார்ப்பதாக விளங்கியது. பீட்ரோகிராட்டில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரும் பல நாட்கள் செல்லும் வரை தாம் மாஸ்கோ தொழிலாளர்களுக்கு உரை நிகழ்த்துவது அகில ரூஷ்ய புகையிரத தொழிலாளர் சம்மேளனத்தின் தலைமையினால் வைக்கால் தவிர்க்கப்பட்டதாக ட்ரொட்ஸ்கி கூறுகின்றார். இந்தத் தடைகள் சோவியத் சபைகளின் தலையீடுகள் மூலமே தவிடுபொடியாக்கப் பட்டன. தொழிற்சங்கவாதத்தின் வரையறைகளுக்குள் இருந்து தொழிலாளர்களை விடுவித்துக் கொண்டு, ஏழை மக்களதும் இளைஞர்களதும் தலைவனாக அதன் அரசியல் செயற்பாட்டை கட்டவிழ்த்து விடுவதற்காக சோசலிச சமத்துவக் கட்சி கட்டியெழுப்பும் நடவடிக்கைக் குழு சோவியத் சபைகளின் அவசியத்தை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

ஏழை விவசாயிகளதும் அதன் இளைஞர் தலைமுறையினரதும் பொருளாதார, சமூக அவசியங்களை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்ததைக் காட்டிலும் பெரும் அளவுக்கு இன்று சோசலிச வேலைத் திட்டத்துடன் இணைத்துக் கொண்டுள்ளது. வெண்காய விவசாயிகளும் கிழங்கு விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டது அவர்களுக்கு விளைச்சல் நிலம் இல்லாததனால் அல்ல. தமக்கு விளைச்சல் நிலத்தில் இருந்து கணிசமான வருமானம் பெற்றுக் கொள்ள முடியாது, கடன்சுமைக்குள் தலை மூழ்கிப் போனதாலேயேயாகும். தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கப்படும் உரம், இரசாயன திரவியங்கள், ட்ராக்டர் கம்பனிகளை போலவே அதே அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள வங்கிகளதும் மொத்த வியாபார அமைப்புக்களதும் ஆதரவு இல்லாமல் அவர்கள் அந்த தரித்திரம் பிடித்த நிலையில் இருந்து மீட்சி பெறுவது எப்படி?

## ஆண்டு நிறைவு விழாவின் அர்த்தம்

அவ்வாறே கிராமப்புற இளைஞர்களிடையே வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினை ஆகியுள்ளது. அவர்கள் கேட்பது விளைச்சலுக்கு நிலம் அல்ல. முதலாளித்துவ அமைப்பின் கீழ் நெல் உற்பத்தி செய்து வாய் உழையும் வரை பாண்துண்டு கடிக்க நேரிட்டுள்ள விவசாயி வாழ்க்கையின் தரித்திர நிலைமைக்கு பலியாக யார் தான் விரும்புவார்? இந்த இளைஞர்களின் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றத் தொழிலாளர் ஆட்சியின் கீழ் இடம்பெறும் கைத்தொழில், பாரிய நிறுவன அமைப்பு முறையின் கீழ் மட்டுமே சம்பள வெட்டு இல்லாமல் வேலை நேரத்தை வேலை இல்லாதவர்களுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ளும் சோசலிச அமைப்பின் கீழ் மட்டுமே: அவ்வாறே, இப்போது முதலாளிகளின் மடிகளை நிரப்பும் இலாபங்களை பயன்படுத்தி பரந்த அளவில் ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், வீதிகள், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பொதுச் சேவை திட்டங்களை அமைக்கும் இடத்து மட்டுமே. இவற்றை மனித அவசியங்களுக்கு அன்றி முதலாளித்துவ இலாபங்களுக்காக இயங்கும் இந்தக் காட்டுமிராண்டி அமைப்பின் கீழ் சாதிக்க முடியாது. ஏழை மக்களதும் இளைஞர்களதும் ஆதரவுடன் அமைக்கப்படும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் கீழ் அவற்றை நிறைவேற்றி வைக்க முடியும் என்பதை அக்டோபர் புரட்சி நிரூபித்துத்துக் காட்டியது. நிச்சயம் நாம் பின்பற்ற வேண்டிய வழியை அந்த விதத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதன் அர்த்தம் அதுவே.

அக்டோபர் புரட்சிக் காலத்தில் இருந்ததை விட தொழிலாளர் வர்க்கம் உலக சோசலிச இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு இன்றுள்ள நிலைமைகள் பெரிதும் சக்தி வாய்ந்தவை. முதலாளித்துவ அமைப்பினுள் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் உலக உழைப்பு சந்தை உருவாகி உள்ளது. அவ்வாறே பிரமாண்டமான அளவில் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்க சமூகத் தட்டின் எண்ணிக்கையின் பெருக்கமும் அன்றையைவிட பல மடங்கு இடம்பெற்றுள்ளதைக் காணமுடியும்.

அது மட்டுமல்ல. முதலாளித்துவ வர்த்தகர்களாலும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களாலும் வழிநடாத்தப்படுபவர்கள் நவீன தொழில்நுட்பத்தால் அனைத்துலக நனவினை இந்நாடு போன்ற பின்தங்கிய நாடுகளின் மக்களின் காலடிக்கும் நெருக்கமாக்கி உள்ளனர். உண்மையில் எமது இளைஞர் பருவத்தில் இருந்ததை விட இன்றைய இளைஞர்கள் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி கண்களைத் திறந்து பார்க்க வாய்ப்பு உள்ளது.ஸ்டாலினிச சீர்திருத்தவாத இயக்கங்களாலும் அவ்வாறே பல்வேறு குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களின் மூலமும் அரசியல் கலாச்சாரத்தில் தடைகளும் பிரமாண்டமான சீரழிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதை நாம் காணாமல் இல்லை. ஆனால் மார்க்சிச இயக்கம் எடுக்கும் ஆரம்பிப்புக்களின் அடிப்படையில் அரசியல் குழப்பங்களில் இருந்தும் வழக்காறுகளில் இருந்தும் தலையெடுப்பதற்கு இன்றைய தலைமுறையாளருக்கு புதிய தொழில்நுட்பம் மூலம் கிடைத்துள்ள வாய்ப்பு அளப்பரியது.

இந்த விடயம் தொடர்பாக நான் ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். செவ்வாய் கிரகத்தில் இறங்கி அங்கு செய்திகளை திரட்டுவதில் ஈடுபட்ட பாத்பைன்டர் பற்றிய செய்திகளை 'இன்டர்நெட்' மூலம் இத்தருணத்தில் ஆய்வு செய்த மக்களின் எண்ணிக்கை 5660 இலட்சம் எனச் சொல்லப்படுகின்றது. கணனித் தொழில்நுட்பத்துக்கு இன்னமும் பழக்கப்பட்டிராத மேலும் எத்தனை இலட்சோபலட்சம் மக்கள் அவர்களிடம் இருந்து தகவல்களை சேகரிக்க அக்கறை காட்டி இருப்பார்கள்? இதனை 1960பதுகளின் தொடக்கத்தில் யூரி ககாரின் முதற்தடவையாக செய்மதியில் சந்திர மண்டலத்தில் காலடிவைத்த புகழ்பெற்ற சம்பவத்துக்கு உலக மக்களிடம் இருந்து கிடைத்த ஆர்வத்துடன் ஒப்பிடுமிடத்து எவ்வளவு ஆச்சரியமான அனுபவம்? இப்போது இத்தகைய நிகழ்வுகள் திட்டவட்டமான விதத்தில் உலக நிகழ்வுகளாகிவிட்டன.

தொழில்நுட்ப வசதிகள் கொண்ட அனைத்துலக குழுவின் அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மன், அவுஸ்திரேலிய பகுதிகள் தமது வெளியீடுகளை 'இன்டர்நெட்' மூலம் பிரச்சாரம் செய்ய ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளன. இந்த தொழில்நுட்ப புரட்சியின் சக்தியை உலக சோசலிசப் புரட்சியின் சேவைக்கு பயன்படுத்த அவை நடவடிக்கை எடுத்துள்ளன.அவற்றுக்கு உலகின் பல நாடுகளில் இருந்தும் அனைத்துலகக் குழுவின் பகுதிகள் இல்லாத நாடுகளில் இருந்தும் கூட செல்வாக்கு கிடைப்பது தெரிய வந்துள்ளது. அனைத்துலகக் குழுவின் இன்டர் நெட், வெப் (WEB) அல்லது தொகுதியை நடாத்துவதற்கென ஏற்கனவே தயாரிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் படி நாம் இணைந்து கொண்டுள்ள இயக்கத்தை கூட்டாகவும் திட்டவட்டமாகவும் அனைத்துலக சோசலிச இயக்கமாக கட்டியெழுப்புதற்கான வாய்ப்புக்களை இது எடுத்துக்காட்டுகின்றது. உலக சோசலிசத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இந்நாட்டினதும் இந்தியத் துணைக்கண்டத்தினதும் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டி அந்த புரட்சிகர வர்க்கத்தைச் சூழ ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர் தலைமுறையையும் அணிதிரட்டுவது, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதற்கான சோசலிச சமத்துவக் கட்சி தொடுத்துள்ள போராட்டத்தின் நடவடிக்கையின் பாகமாகும் என வர்க்க நனவுள்ள சகலருக்கும் அழைப்பு விடுத்துக் கொண்டு நான் எனது பேச்சினை நிறைவுசெய்கின்றேன்.நன்றி.

### ஆசிய பிராந்திய நெருக்கடியின் அர்த்தம்:

# உலக முதலாளித்துவம் பணச்சுருக்கத்துக்கும் பொருளாதார மந்தத்துக்கும் முகம் கொடுக்கின்றது

முதலில் தென் ஆசியாவில் வெடித்த நிதி நெருக்கடி இப்போது தென் கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் பரந்து பட்டுள்ளது. இது அந்நாடுகளின் அரசாங்கங்களையும் வங்கிகளையும் பங்குமுதல் சந்தைகளையும் ஆட்டிப்படைத்துள்ளதோடு, இலட்சோப லட்சம் தொழிலாளர்களின் தொழில் வெட்டுக்கும் சம்பள வெட்டுக்கும் சேமிப்புக்களின் இழப்புக்கும் சமூக நல சேவைகளில் பிரமாண்டமான வெட்டுக்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது.

இந்த நெருக்கடி எந்தளவுக்கு பிரமாண்டமானது ? ஒரு பூகோள ரீதியான பதட்ட நிலையைத் தவிர்க்க திரட்டப்பட்ட நிதி வளங்களின் பரிமாணத்தைக் கொண்டு இதைப் புரிந்து கொள்ள முடியும். தென்கொரியாவைப் பிணையெடுக்க சர்வதேச நாணய நிதியத்துக்கு 55பில்லியன் டாலர்கள் வேண்டியுள்ளது. இது மெக்ஷிக்கோவை நெருக்கடியில் இருந்து மீட்க அமெரிக்காவுக்கு அவசியமாக இருந்த தொகையைக் காட்டிலும் பிரமாண்ட மானதாகும். அத்தோடு இது வரலாற்றில் பாரிய நிதி நெருக்கடி பிணை எடுப்பு நடவடிக்கையாகும்.

யப்பானில் இதைக் காட்டிலும் பெரும் தொகைகள் திரட்டப்பட்டுள்ளது. யப்பான் பிரமாண்டமான அறவிடமுடியாக் கடன்களின் 800பில்லியன் டாலர்கள் சுமை காரணமாக முழு நிதி அமைப்புமே ஈடாட்டம் கண்டுபோயுள்ளது. பத்தாவது பாரிய வங்கியான ஹொக்கைடோ டக்குஷொக்கு வங்கி வங்குரோத்தடைந்ததன் பின்னர் யப்பானிய வங்கி 82 பில்லியன் டாலர்களை அவசர வைப்பாக நாட்டின் வங்கி அமைப்பினுள் பாய்ச்சும்படி தள்ளப்பட்டது. இது வர்த்தகத் துறையின் நம்பிக்கையை புதுப்பிக்கவே செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 239 பில்லியன் டாலர்களை சொத்தாகக் கொண்ட யப்பானின் நான்காவது பெரும் தரகர் நிலையமான யமாய்ச்சி செக்கியூரிட்டீஸ் வீழ்ச்சி கண்டது.

இந்த நிதி நெருக்கடி ஆரம்பத்தில் தென்கிழக்கு ஆசியாவில் தலைதூக்கினாலும் அது அடிப்படையில் ஒரு பிராந்திய தோற்றப்பாடு அல்ல. இது உலகளாவிய ரீதியில் நிதிச் சந்தைகளின் நம்பிக்கையைச் சிதறடிக்கும் ஒரு நெருக்கடியாக உள்ளது. லத்தீன் அமெரிக்கச் சந்தைகள் சிறப்பாக பிரேசில் ஆசியாவிலும் தென் ஆசிய சந்தைகளைக் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் காட்டிலும் கூடுதலான வீதத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன.

இந்த நெருக்கடி தற்சமயம் கிழக்கு ஐரோப்பாவுக்கும் முன்னைய சோவியத் யூனியனுக்கும் பரவிக் கொண்டுள்ளது. கடந்த நவம்பர் 26ம் திகதி ரூஷ்ய மத்திய வங்கியின் அதிகாரிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தவென வாஷிங்டன் சென்றனர். இது ஆசிய காட்டிக்கொடுப்புக்களின் தாக்கங்கள் மாஸ்கோவில் பங்கு , நிதிச் சந்தைகளை பாதிக்கத் தொடங்கி விட்டதை காட்டிக் கொண்டுள்ளது.

## சமூகத் தாக்கங்கள்

நிதி அதிர்ச்சிகள் ஏற்கனவே சமூக, அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கி விட்டன. அமெரிக்க டைம்ஸ் சஞ்சிகை இதனால் "கலகங்கள், அரசாங்கங்களின் வீழ்ச்சிகள், இன கலகங்கள் அத்தோடு புரட்சிகள் கூட "ஏற்படலாம் என வருத்தப்பட்டுக் கொண்டது. ஏற்கனவே நான்கு பிரதமர்கள் நவம்பர் மாத காலத்தில் நியூஸிலாந்திலும் தாய்லாந்திலும் இந்தியாவிலும் செக் குடியரசிலும் இராஜினாமாச் செய்யத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஒவ்வொரு விடயத்திலும் இராஜினாமா வெறும் தேர்தல் தோல்வியாக அல்லாது ஆழமான நிதி நெருக்கடியினால் எண்ணெய் வார்க்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பின் உள்ளேயான அரசியல் மோதுதல்களாக விளங்கின.

கடைசியாக டிசம்பர் 18ம் திகதி ஜனாதிபதி தேர்தலில் தோல்விக்கு முகம் கொடுத்த படி தென்கொரிய ஜனாதிபதி கிம் யங் சாமின் அரசாங்கம் இருந்தது. இந்நிலையில் தென்கொரிய கம்பனிகள் பிரமாண்டமான வேலைநீக்கங்களுக்கு அறிவித்தல் கொடுத்துள்ளன. இராட்சத எலொக்ரொனிக் கம்பனியான 'சம்சுங்' 80000 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது. அல்லது சம்பள வெட்டு இடம்பெறும் என்றுள்ளது. தென்கொரிய அரசாங்க அதிகாரிகள் வேலையில்லாத் திண்டாட்டம் 1998ல் இரட்டிப்பாகும் எனக் கணித்துக் கொண்டுள்ளனர்.

32 ஆண்டுகளாக சர்வாதிகாரி சுஹார்ட்டோவின் இராணுவ ஆட்சி நிலவிய இந்தோனேஷியாவில் வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் பரந்து கொண்டுள்ளன. சுஹார்ட்டோவின் மகனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு வங்கி உட்பட 16 வங்கிகளை இழுத்து மூடிவிடும்படி சர்வதேச நாணய நிதியம் கட்டளையிட்டதைத் தொடர்ந்து சுகார்ட்டோவின் சொந்தக் குடும்பத்திற்குள்ளேயே ஒரு இழுபறி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆசியாவின் இந்த வீழ்ச்சியின் தாக்கத்தை உணரத் தொடங்கி உள்ளனர்.ஆசியா அமெரிக்க இராட்சத ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திகளுக்கான பிரமாண்டமான சந்தையாக விளங்குவதே அதற்கான காரணம். அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன நடவடிக்கைகள் இந்த நெருக்கடியின் தாக்கத்தை மேலும் ஆசியாவில் பரப்புவதாக அமைந்து உள்ளது. இவை ஆசியன் நாடுகளில் இக்கூட்டுத்தாபனங்களின் பொருட்களுக்கான கேள்வியை வெட்டிச் சரிப்பதாக்வும் அமைந்துள்ளது. இது கைத்தொழில்களில் அதிகரித்த பூகோள இயலளபு நிலையை உருவாக்கி உள்ளன. குறிப்பாக கட்டிடப் பொருட்கள், கார், கணனி, எலக்ரொனிக்குகள் ஆகியவற்றின் சந்தையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் 27ல் இருந்து வளர்ச்சி கண்டுள்ள இந்த நெருக்கடி அடிப்படையான பண்பைக் கொண்டுள்ளது. நிதித்துறை சார்ந்த பத்திரிகைகள் பூகோளரீதியில் ஒரு பணச்சுருக்க போக்கு வளர்ச்சி கண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன. இது பரந்த அளவிலான வேலைநீக்கங்களுக்கும் முதலீட்டு வெட்டுக்களுக்கும் இட்டுசெல்வதோடு மறுபுறத்தில் தேவையிலும் பெரும் நச்சு யந்த நிலையைத் தோற்றுவிக்கும் என இந்தப் பத்திரிகைகள் மேலும் குறிப்பிட்டுள்ளன. ஒரு பொருளியல் ஆய்வாளர் இதைப் பற்றிக் குறிப்பிடுகையில் "பூகோள பொருளாதாரம் ஒரு பணச்சுருக்க பதட்ட நிலைக்கு அப்பாற்பட்டதல்ல" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியாவில் ஆழமாகி வரும் நெருக்கடியும் உலகம் பூராவும் அதன் தாக்கமும் பெரும் வர்க்கப் போராட்டங்களை தவிர்க்கமுடியாத விதத்தில் உருவாக்கும். போராட்டங்களை தாய்லாந்து, இந்தோனேஷியா, தென்கொரியாவில் மட்டுமன்றி ஜேர்மனி, அமெரிக்கா ,யப்பான் முதலிய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் தோற்றுவிக்கும். இலாப அமைப்புக்கு எதிராக தொழில், வாழ்க்கைத் தரம், சமூக சேவைகள் அடிப்படை ஜனநாயக உரிமைகள் ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்க அனைத்துலக தொழிலாளர் வர்க்கம் ஒரு அரசியல் போராட்டத்தை தொடுக்கும் அவசியத்துக்கு முகம் கொடுக்கின்றது

www.padippakam.com



# மார்க்சிசமும் உற்பத்தியின் பூகோளமயமாக்கமும்

## இறுதி பாகம்

கடந்த காலங்களைப் போல் மூலதனம் வீழ்ச்சி காணும் இலாபத்தைப் பிரதிபலித்தது. அது செலவுகளைக் குறைத்து உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் ஒரு நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தது. முதலில் உற்பத்தியின் பழைய ஆட்சியினுள் சுரண்டலை உக்கிரமாக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால் இவைகள் வரையறுக்கப்பட்ட தேட்டங்களைக் கொணர்ந்ததோடு தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து மூர்க்கத்தனமான எதிர்ப்பைச் சந்தித்தது.

உற்பத்தியின் புதிய முறைகளின் அபிவிருத்தி தீர்க்கமான மாற்றங்களைக் கொண்டிருந்தன. இது இரண்டு விதத்தில் பரஸ்பரம் வழிகளில் இடம்பெற்றது.

1970பதுகளின் ஆரம்பத்தில் இருந்து துணி, மைக்ரோ எலக்ரொனிக்ஸ் போன்ற கைத்தொழில்கள் உற்பத்தி போக்கின் பகுதிகளை வெளிநாடுகளில் இருந்து தருவிக்கவும் சில சமயங்களில் வெளிநாடுகளில் அவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களை அமைத்துக் கொள்ளவும் தொடங்கின. போக்குவரத்து மலிவுமயமாக்கப்பட்டதும் பெரிதும் நவீனமயமான தொடர்புச் சாதனங்களின் அபிவிருத்தியும் முன்னர் ஒன்றிணைக்கப்பட்டு வந்த உற்பத்திப் போக்குகளை கலைத்துத் துண்டாடுவதன் மூலம் பெரிதும் உழைப்புச் செறிவு மிக்க உற்பத்தியினை லத்தீன் அமெரிக்கா, ஆசியா போன்ற மலிவு உழைப்பு பிராந்தியங்களில் செய்யக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டது.

1980பதுகளில் இன்னும் நீண்ட தூரம் செல்லும் மாற்றங்கள் ஏற்பட்டன. மைக்ரோ போக்கிலான அபிவிருத்திகளும் கணனி துணுக்கு தொழில்நுட்பத்திலான சுருள் முன்னேற்றங்களும் உற்பத்தி போக்கின் இருதயத்தினுள் கணனிமயமாக்கப்பட்ட உற்பத்தி முறைகளை அறிமுகம் செய்வதை சாத்தியம் ஆக்கின. இதன்படி ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் நிர்வாகத்தின் பரந்த துறைகள் கணனி முறையை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறை மூலம் பதிலீடு செய்யப்பட்டது. மேலே குறிப்பிட்ட இரண்டு செயற்பாடுகளும் கடந்த இரண்டு தசாப்தங்கள் இரண்டினுள்ளும் இடம்பெற்றுள்ளன.

செலவுகளை வெட்டும் ஒரு முயற்சியாக ஆரம்பித்த இது இன்று ஒரு முற்றிலும் புதிய உற்பத்தி முறையைத் தோற்றுவித்துள்ளது. உற்பத்தி பூகோளமயமான முறையில் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு துறையிலும் கணனிமயமான விதிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்திப் போக்கில் இருந்து வரைவு, சரக்கிருப்பு, சொத்துக் கட்டுப்பாடு , நிதிமுகாமையியல் வரை எல்லாம் கணனிமயமாக்கப் பட்டுள்ளது.

இப்போது நாம் எல்லாவற்றுள்ளும் மிக முக்கியமான பிரச்சினைக்கு வருகின்றோம். இந்தப்பாரிய மாற்றங்களின் வரலாற்று முக்கியத்துவம் என்ன? . உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்கத்துக்கு இந்தப் பாரிய மாற்றங்கள் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன?

இன்றைய அமைப்பின் குருமாருக்கு அதாவது தொழில்சார் பொருளியலாளர்கள், தொடர்புச்சாதன நிபுணர்கள் இணங்க இன்றைய பரிணாமம் தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களின் முன்னைய அலைகள் கடந்த காலத்தில் செய்தது போல் சிறு அழிவுகளுடன் செல்வத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் புதிய பரம்பலைக் கொணரும். சகலரும் சந்தையின் கட்டளைகளை கடைப்பிடிக்க கவனம் செலுத்தின் மிக்ச் சிறந்த உலகில் அனைத்தும் சிறந்ததாக விளங்கும். அவர்களின் புத்திக் கூர்மையின் நிஜ கூட்டு மொத்தம் அதுதான்.

தொழில்நுட்பத்தின் இரண்டு முரண்பாட்டுப் பெறுபேறுகள் இந்தப் புரட்சிகர மாற்றங்களை புரிந்து கொள்ள நாம் உண்மையானதும் முற்றிலும் கற்பனையானதுமான உத்தரவாதங்களை தாண்டி உபரிப் பெறுமானத் திரட்சியின் மீதான அவற்றின் தாக்கத்தையும் ஆய்வு செய்ய வேண்டும்.

உழைப்பின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் உபரிப் பெறுமானத்தின் திரட்சியினைப் பொறுத்த மட்டில் இரண்டு முரண்பாடான பெறுபேறுகளைக், கொண்டுள்ளது.

ஒரு புறத்தில் உயிர்ப்பு கொண்ட உழைப்பை உற்பத்திப் போக்கில் இருந்து அகற்றுவதன் மூலம் இது மூலதனத்தினால் கறக்கப்பட்ட பெருமளவிலான உபரிப் பெறுமானத்தைக் குறைக்கத் தள்ளப்படுகின்றது.

மறுபுறத்தில் உற்பத்திப் போக்கில் தொடர்ந்து இருந்துவரும் ஒவ்வொரு தனித் தொழிலாளியிடம் இருந்தும் கறக்கப்படும் உபரிப் பெறுமானத்தை அதிகரிப்பதன் மூலம் இது உபரிப் பெறுமானத்தின் அளவினை அதிகரிக்கத் தள்ளப்படுகின்றது.

ஆதலால் பின்வரும் கேள்வி எழுகின்றது: தொழில்நாட்பக் கண்டுபிடிப்புக்களின் விளைவாக உழைப்பின் உற்பத்தித் திறனின் பிரமாண்டமான அதிகரிப்பு மீண்டும் உபரிப் பெறுமான அளவில் உயர்வை ஏற்படுத்தி முதலாளித்துவ விஸ்தரிப்பின் ஒரு புதிய காலப்பகுதியை உத்தரவாதம் செய்து, உலக மக்களுக்கு சுபீட்சத்தை உத்தரவாதம் செய்வதில் வெற்றி பெறுமா ?

கூலி உழைப்பு . முறையில் இருந்து தோன்றிய இதே முதலாளித்துவ சமூக் உறவுகளால் திணிக்கப்பட்ட இயற்கையான வரையறைகள் காரணமாக அதனால் முடியாது என்பதே பதில்.

திட்டவட்டமற்ற முதலாளித்துவ விரிவாக்கத்தினுள் இந்த அடிப்படை தடை இருந்து கொண்டுள்ளது என்பதை அம்பலப்படுத்த நாம் ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம்.

ஒரு தரப்பட்ட கம்பனியில் 100 தொழிலாளர்கள் 8 மணித்தியால வேலை நாளில் வேலை செய்கின்றதாகவும் அதில் 6 மணித்தியாலங்கள் தமது சம்பளத்தை அல்லது தமது உழைப்பு சக்தியின் விலையை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவதாகவும் இரண்டு மணித்தியாலங்கள் முதலாளியினால் பிடுங்கிக் கொள்ளப்பட்ட உபரி உழைப்பு எனவும் கொள்வோம். இச்சந்தர்ப்பத்தில் உபரி உழைப்பு 200 மணித்தியாலங்கள்.

இப்போது உழைப்பின் உற்பத்தித் திறன் இரண்டு மடங்காக்கப்படுகின்றது எனவும் தொழிலாளர்கள் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்படுகின்றது எனவும் வேலை நாள் பின்வரும் விதத்தில் பிரிக்கப்படுகின்றது எனவும் கொள்வோம்:

தொழிலாளர்களுக்கு தமது சம்பளத்தை மீள உற்பத்தி செய்ய 3மணித்தியாலங்களும் (முன்னர் செலவான காலத்தில் அரைப் பங்கு ) அவசியமாக உள்ளது எனவும் 5மணித்தியாலங்களும் உபரி உழைப்பாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் முழு உபரி உழைப்பு 250 மணித்தியாலங்கள்.

இதன்படி தொழிலாளர்களின் எண்ணிக்கை 50ஆல் குறைக்கப்பட்ட போதிலும் மூலதனத்தினால் உறிஞ்சப்பட்ட முழு உபரி உழைப்பு 50ஆல் அதிகரித்துள்ளது. இத்தகைய ஒரு நிலையில் புதிய தொழில்நுட்பம் உபரி பெறுமானத்தின் திரட்சியில் ஒரு பொது விரிவாக்கத்தை கொணர்ந்துள்ளது.



நிக் பீம்ஸ்

இனி இந்தப் போக்கு மீள இடம்பெறுவதாக வைத்துக் கொள்வோம் . இதில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 25க்கு குறைக்கப்பட்டு, வேலைநாள் கீழ்வரும் வீதாசாரத்தில் பகுக்கப்படுவதாகக் கொள்வோம்: சம்பளத்தை மீள உற்பத்தி செய்ய 1.5மணித்தியாலங்கள் தேவைப்படும். 6.5 மணித்தியாலங்கள் உபரி உழைப்பாக விளங்கும். எவ்வாறெனினும் இந்த விடயத்தில் மொத்த உபரி உழைப்பு 162.5 மட்டுமே. அதாவது தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களின் பெறுபேறாக மொத்த உபரி உழைப்பு பெறுமானம் குறைக்கப்படும்.

இந்தச் சிறிய இலகுவான உதாரணம் எது விதத்திலும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஒரு மாதிரியாகக் கொள்வதை நோக்கமாகக் கொண்டது அல்ல. ஆனால் அது சம்பந்தப்பட்டுள்ள போக்கினை கண்டு கொள்ள தொடங்க எமக்கு உதவுகின்றது.

அது கீழ்வரும் விடயத்தை காட்டுகின்றது. உழைப்பின் உற்பத்தித் திறன் ஏற்கனவே உயர்ந்து கொண்டுள்ள அளவுக்கு உபரி பெறுமானத்தின் மொத்தத் தொகையை அதிகரிக்கும் பொருட்டு அவசியமான உழைப்பு உற்பத்தி திறனின்(புதிய) அபிவிருத்தியின் அளவும் வளர்ச்சி அடைகின்றது. அது மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்புக்களின் பெறுபேறாக உழைப்பின் உற்பத்தி விளைதிறனின் மேலதிக அபிவிருத்தி உபரி பெறுமானத்தின் மொத்தத் தொகை வீழ்ச்சி காணச் செய்து. மூலதனத் திரட்சியில் ஒரு நெருக்கடி நிலைமையை உருவாக்கும்.

இன்று தோன்றி உள்ள புள்ளி இதுதான். முதலாளித்துவ அபிவிருத்தியில் கடந்து சென்ற 150 200 வருடங்களுள் உழைப்பின் உற்பத்தித் திறனின் அபிவிருத்தியை நோக்கின் அது உள்ளடக்கிக் கொண்டுள்ள சாராம்சம் நாம் மேலே எடுத்துக் காட்டிய சிறிய இலகுவான உதாரணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதற்கு எதுவிதத்திலும் குறையாத ஒன்றாகும்.அதாவது உழைப்பு சக்தியின் பெறுமானத்தை மீள உற்பத்தி செய்ய அவசியமான வேலை நாளின் அரைவாசியை வளர்ச்சியான முறையில் குறைப்பதாகும்.

கடந்த காலத்தில் தொழிலாளர்கள் தமது சம்பளத்துக்கு சமானமான பெறுமதியை உற்பத்தி செய்யும் பொருட்டு வேலைநாளின் கணிசமான பங்கினை எடுக்க நேரிட்டது. இன்று அது ஒரு சில நிமிடங்களுள் அல்லது அதிலும் குறைவான நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதன் பெறுபேறாக கடந்த காலத்தில் தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களின் காரணமாக ஏற்பட்ட உழைப்பு உற்பத்தி திறனின் அதிகரிப்பினால் உபரி பெறுமானத்தின் மொத்தத் தொகையை அதிகரிக்கத் தள்ளப்பட்டது. இன்று இது சுருங்கிக் கொள்ளத் தள்ளப்பட்டுள்ளது.

முதலாளித்துவ அபிவிருத்தியின் இன்றைய கட்டம், யுத்தத்தின் பின்னைய காலத்தின் செழிப்புக்கு நேர்எதிரானதாக அமைகின்றது. யுத்தத்தின் பின்னைய செழிப்பின் போது முதலாளித்துவ நிறுவனங்கள் இலாபத்தைக் கறந்தது பெரிதும் உற்பத்தி திறன் கொண்ட விதிமுறைகளை அபிவிருத்தி செய்தமை தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து கறந்த மொத்த உபரி உழைப்பு திரட்சியின் அதிகரிப்பை செய்து கொண்ட ஒரு நிலைமையின் உள்ளாகும். மொத்தத்தில் உபரி பெறுமானத் திரட்சி அதிகரிதத நிலையில் ஒவ்வொரு நிறுவனமும் தனது இலாபங்களை அதிகரித்துக் கொண்டது.

இன்று நாம் முற்றிலும் ஒரு வேறுபட்ட நிலைமையைக் கொண்டுள்ளோம். ஒவ்வொரு நிறுவனமும் அது பூகோளரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனமாக இருந்தால் என்ன பிராந்திய அல்லது தேசிய ரீதியிலான கம்பனியாக இருந்தால் என்ன அவை மொத்த உபரிப் பெறமானம் வீழ்ச்சி கண்டு செல்லும் ஒரு நிலைமையில் இலாபத்தை திரட்டிக் கொள்ளத் தள்ளப்பட்டுள்ளன. இதுதான் சந்தைகளை வெறிபிடித்த போராட்டங்களதும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஒரு காலத்தில் நல்ல சம்பளங் கொண்ட பல இலட்சக் கணக்கான தொழில்கள் அழித்துக் கட்டப்படுவதற்கும் உந்து சக்தியாக இருந்து கொண்டுள்ளது.

திரட்டிய உபரிப் பெறுமானத்தின் விரிவாக்கத்தின் பெறுபேறாக யுத்தத்தின் பின்னைய சந்தை விரிவாக்க நிலைமைகளின் கீழ் பெரும் கூட்டுத்தாபனங்கள் புதிய முதலீடுகள் மூலம் புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியும் அதிகரித்த விற்பனைகள் மூலமும் தமது இலாபங்களை அதிகரித்துக் கொண்டன.

மொத்த உபரிப் பெறுமானத்தின் சுருக்கத்தின் பெறுபேறாக இன்று சந்தைகளில் தேக்கம் அல்லது பின்னடைவு

www.padippakam.com

நிலைமை ஏற்பட்டுள்ள நிலைமையில் இலாபம் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதன் மூலமும், தொழில்களை ஒழிக்கும் முறையின் மூலமும் செலவைக் குறைப்பதன் மூலமும் திரட்டப்படுகின்றது.

இந்தப் போக்கினை விளக்கிக் காட்டுவதற்காக ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஜெனரால் மோட்டர்ஸ் கம்பனியின் இலாப புள்ளி விபரங்களை முன்வைக்க எனக்கு அனுமதி தாருங்கள். ஜெனரால் மோட்டார்ஸ் கம்பனி இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுள் 1.8பில்லியன் டாலர்களை இலாபமாகப் பிரகடனம் செய்தது. அதன் வட அமெரிக்கத் தொழிற்பாடுகள்764 மில்லியன் டாலர்களை இலாபமாக ஈட்டியது. இந்த இலாபம், கார், ட்ரக்குகள் விற்பனையை 29000 ஆகக் குறைப்பதன் மூலமும் சந்தையில் அக்கம்பனியின் பங்குகள் குறைந்து போனதன் பின்னரும் ஈட்டிக் கொள்ளப்பட்டது. ஆனால் அத்துடன் அக்கம்பனி விற்பனை செய்த சகல வாகனங்களினதும் இலாபம் நூற்றுக்கு 37 வீதத்தினால்(கடந்த ஆண்டைக் காட்டிலும்) அதிகரிக்கப்பட்டது, வருமானம் 3.7வீதத்தினால் வீழ்ச்சி கண்டதன் பின்னருமாகும். இந்தப் பெறுபேறுகளைப் பெற்றது எப்படி ?

தொழிலாளர்களின் எண்ணிக்கையை10000 னால் வெட்டிக் குறைத்ததன் மூலமாகும். இன்று ஜெனரால் மோட்டர்ஸ் கம்பனியின் நடவடிக்கைகள் அதன் பக்டரிகளின் கருவிகள் புதுப்பிக்கப்பட்ட சகல தருணங்களிலும் தொழில்களை மூன்றில் ஒரு பங்கினால் குறைப்பதை அடிப்படையாக் கொண்டுள்ளது.

இந்தப் போக்கானது அக்கம்பனிக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது அல்ல. எங்கும் பரந்து பட்டது. சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட மற்றொரு அறிக்கையின்படி அமெரிக்காவின் 500 முன்னணி கம்பனிகளில் இலாபம் 1996ல் 23.3வீதத்தினால் உயர்ந்தது. இது கூட்டு வருமானம் 8.3 வீதத்தினால் அதிகரித்து இருந்த ஒரு நிலைமையினுள் இடம்பெற்றது. கடந்த ஆண்டில் இலாப அதிகரிப்பை அறிக்கை செய்த 305 கம்பனிகளில் 78 வீதமானவற்றின் இலாப அதிகரிப்பு வேகம் வருமானம் அதிகரிப்பு வீதத்தைத் தாண்டி இருந்தது. வேறு வார்த்தைகளில சொன்னால் ஜெனரால் மோட்டார்ஸ் கம்பனி சம்பந்தமாகத் தொழிற்படுவது முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஆதிக்கம் கொண்டுள்ள நிலைமைகளே. இலாபங்களை குவிப்பது தொழில் அழிப்புக்களின் மூலமும் தொழிலாளர் வர்க்கத்தின் அதிகரித்த பகுதியினரை வரவர வறுமைக்குள் தள்ளுவதன் மூலமுமேயாகும்.

முதலாளித்துவ ஒழுங்கின் உறுதிப்பாட்டுக்கான இந்த நிலைமைகளின் முன்னொரு போதும் இல்லாத ஆபத்தான தாக்கங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் சில பிரதிநிதிகளுக்கு புரிந்து கொள்ளாது போகவில்லை.போர் ஜூன் 500ன் பெறுபேறுகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மோர்கன் ஸ்டான்லி கம்பனியின் பிரதம பொருளியலாளர் இது ஒரு "சாதகமான அறிகுறி" இல்லை எனத் தெரிவித்தார். கோபரேட் அமெரிக்கா தொழிற்பாட்டுத் திறமையைப் பற்றி கவனம் செலுத்துகையில் மிகவும் நன்றாகச் செய்துள்ளது. ஆனால் அவ்வாறு செய்கையில் அது அபிவிருத்தியின் நீடிப்பை ஆபத்தில் மாட்டியுள்ளது." வேறு வார்த்தைகளில் சொன்னால் காரணத்தைப் பற்றிச் சைகை செய்யாமல் அவர் இலாபம் கறக்கும் அடிப்படையாகி உள்ள தொற்றுநோய் ஒட்டுண்ணியை நோக்கி விரலை நீட்டுகின்றார்.

இலாபமுறையின் ஆழமாகி வரும் நெருக்கடி சகல பெரும் முதலாளித்துவ நாடுகளும் சமூக நலன்புரி சேவைகளையும், சுகாதாரம், கல்வியையும் தவிடுபொடியாக்கும் முடிவற்ற தொடர்ச்சியின் இருதயத்தில் இருந்து கொண்டுள்ளது.

இறுதி ஆய்வுகளில் மூலதனத்தின் நிலைப்பாட்டில் இருந்து பார்க்கும் போது இந்தச் சகல செலவுகளும் இலாபமாகச் சுருட்டிக் கொள்ளக் கூடிய பெரும் உபரி இலாபத்தில் இடம்பெறும் ஒரு குறைப்பாகும்.ஆகையால் மூலதனம் இந்தச் சகல சலுகைகளும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என இடைவிடாது கோருகின்றது. வங்கிகளதும் சர்வதேச பணச் சந்தையினதும் திணிக்கப்பட்ட கோரிக்கையின் பின்னணியில் உள்ள நிஜ திட்டம் இதுவே. எனவேதான் சகல தேசிய அரசாங்கங்களும் தமது வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளை செலவு வெட்டுக்கள் மூலம் குறைக்கின்றன.

அமெரிக்காவின் போட்டி அந்தஸ்தை தொடர்ந்து பராமரிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தை சமப்படுத்துவதோடு செலவுகளை வெட்டவும் வேண்டும் என கிளின்டன் நிர்வாகம் பிரகடனம் செய்துள்ளது.

அவ்வாறே ஐரோப்பாவில் மாட்ரிட் உடன்படிக்கையின் கீழும் தனி நாணயத் திட்டத்தின் கீழும் பல்வேறு தேசிய அரசாங்கங்கள் யுத்தத்துக்கு பின்னைய நலன்புரி அரசை நிர்மூலமாக்கி வருகின்றன. அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் எதிரான பூகோள ரீதியான போராட்டத்தில் ஐரோப்பாவின் அந்தஸ்தை தாக்கிப்பிடிக்க அவை செயற்படுகின்றன. இதன் பெறுபேறுகள் பேரழிவு நிறைந்தவை. தனி நாணயத் திட்டத்தின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுமிடத்து முழு செலவின வெட்டானது ஐரோப்பாவின் மொத்த தேசிய உற்பத்தியில் கால் பங்கிற்கு சமமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எந்த ஒரு தேசிய ஆட்சியாளரும் இந்த போரில் இருந்து விலக்களிக்கப்படவில்லை. கீற்றிங் அரசாங்கமும் இப்போது ஹொவாட் அரசாங்கமும் அவுஸ்திரேலியா ஒரு போட்டி நிறைந்த அனைத்துலக கோர்ப்பரேட் வரி முறையை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் இல்லாது போனால் பெரும் நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை வேறு எங்கேனும் அமைத்துக் கொள்ளும் எனவும் வலியுறுத்திக் கொண்டுள்ளன.

கீற்றிங் அரசாங்கத்தின் கோர்ப்பரேட் வரி வெட்டுக்களின் பெறுபேறாக ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் 17 பில்லியன் டாலர்கள் வரி வருமானத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது. வரி அலுவலகத்தின் அறிக்கையின்படி இன்றைய ஆட்சியின் கீழ் ஆண்டு தோறும் கூட்டுத்தாபனங்கள் 17 பில்லியன் டாலர்களை வரி ஈடாகப் பெற்றுக் கொள்கின்றன. போட்டி மாநில அரசுகளில் கூட்டுத்தாபனங்கள் வெற்றி கொள்ளப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மாநில அரசாங்கங்கள் வேறும் பல வரிச் சலுகைகளையும் வழங்குகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஆண்டொன்றுக்கு பல கோடிக்கணக்கான டாலர்களைக் கொண்ட நிஜ செல்வம், சுகாதாரம், கல்வி, சமூக நலன்புரி சேவைகளில் இருந்து வெட்டப்பட்டு இலாபம் திரட்டும் பொருட்டு கூட்டுத்தாபனங்களின் பயன்பாட்டுக்கென வழங்கப்படுகின்றது.

நாம் மிகவும் சுருக்கமான விதத்தில் உலக மக்கள் முகம் கொடுத்துள்ள பெரும் சமூக பேரழிவுகளின் அடியில் இருந்து கொண்டுள்ள பொருளாதார போக்குக்களை முன்வைக்கவும் அவர்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ள முரண்பாடுகளையும் - அதாவது, உற்பத்திச் சக்திகளின் பிரமாண்டமான அபிவிருத்திக்கும் பொதுமக்களின் சமூக நிலைமை என்றும் இல்லாத விதத்தில் மோசம் அடைவதற்கும் இடையே இருந்து வரும் முரண்பாடுகளதும் நிஜ ஊற்றுவாயை அம்பலமாக்குவதற்கேயாகும்.

## ஆழமான அரசியல் தாக்கங்கள்

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இப்போது அரசியல் முடிவுகளுக்கு வந்தாக வேண்டும். இந்த நெருக்கடிக்கான காரணம், உற்பத்தியின் பூகோளமயமாக்கமோ அல்லது புதிய தொழில் நுட்பங்களின் அபிவிருத்தியோ அல்ல என்பது தெளிவு. இது ஒரு திட்டவட்டமான சமூக ஒழுங்கின் விதிகளில் இருந்து இலாபமுறையில் இருந்து தோன்றுவதாகும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது வேலைத் திட்டத்தை அபிவிருத்தி செய்ய இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் மார்க்ஸ் சுட்டிக்காட்டிய நோக்கை நேரடி அடிப்படையாகக் கொண்டுள்ளது. "கம்யூனிஸ்டுகளின் கோட்பாட்டு முடிவுகள்" அவர் தெளிவுபடுத்தியது போல் "அந்த அல்லது இந்த உலகளாவிய சீர்திருத்தவாதியினால் கண்டுபிடிக்கப்பட்ட கருத்துக்கள் அல்லது அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளவில்லை. அவை பொதுவில் வெறுமனே வெளிக்காட்டுவது இருந்துவரும் வர்க்க போராட்டத்தில் இருந்து எமது கண்களின் எதிரில் இடம்பெற்றுவரும் வரலாற்று இயக்கத்தில் இருந்து தோன்றும் நிஜ உறவுகளையே ஆகும்."

இந்த அணுகுமுறை எம்மை பல்வேறு குட்டி முதலாளித்துவ தீவிர போக்குக்களுடனும் அவற்றின் தேசியவாத வேலைத் திட்டங்களுடனும் மோத வைப்பது நிச்சயம்.

அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தை தேசிய அரசை அடிப்படையாகக் கொண்ட பழைய போராட்ட வடிவங்களுடனும் எல்லாவற்றுக்கும் மேலாக தேசிய அடிப்படையிலான தொழிற் கட்சிகளுடனும் தொழிற் சங்கங்களுடனும் பிணைத்துப் போடும் பொருட்டு பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியின் சிறப்பு முக்கியத்துவத்தை மறுக்க முயற்சிக்கின்றனர்.

பூகோளரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட மூலதனத்துக்கு ஏதேனும் ஒரு எல்லையைத் திணிப்பது தேசிய ஆட்சியாளர்களினால் செய்யப்பட வேண்டியுள்ளதாக கோரும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் எவ்வாறெனினும் சோசலிசம் இந்தப் பாதையின் ஊடாக அடையப்பட வேண்டும் என வாதிக்கின்றார்கள்.

முதலாளித்துவத்தைப் போன்றே பழமையான இந்த முன்நோக்குக்கு எதிராக 1820க்கு முன்பு சிஸ்மொன்ட் இதே நிலைப்பாட்டையே முன்வைத்தார். ம்மார்க்சிசம் "எமது கண்களின் எதிரில் இடம்பெறும்" போக்கில் இருந்தே சோசலிசம் தோன்றுகின்றது என்ற விளக்கத்தினுள் வேரூன்றி உள்ளது.

ஆதலால் இது உற்பத்தியின் பூகோளமயமானது மனித உழைப்பினால் நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட உற்பத்தி சக்திகள் முதலாளித்துவ சமுதாய உறவுகளின் எல்லைகளில் இருந்தும் கால் விலங்குகளில் இருந்தும் உடைத்துப் பிரிக்கச் செய்யும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாகும் என்பதை அங்கீகரிக்கின்றது.

இந்த சமூக உறவுகள் இன்று 'டிமொக்கிளின்' வாளைப் போன்று போராடும் மனித இனத்தின் தலைக்கு மேலாகத் தொங்கிக் கொண்டுள்ளது. தேசிய அரசும் இது பேணிக் காக்கும் தனியார் இலாப அமைப்பும் பொருளாதார செயற்பாட்டின் நிலைப்பாட்டில் இருந்து எடுப்பின் காலவதியாகிப் போயுள்ளதோடு அரசின் அரசியல், இராணுவ ஆயுதம் பூகோளரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சந்தைகளுக்கும் இலாபத்துக்குமாக நீண்ட காலம் செல்வதற்கிடையே மற்றொரு ஏகாதிபத்திய யுத்தத்தை உருவாக்க அச்சுறுத்தும் உலகளாவிய போட்டியில் பெரிதும் முக்கியத்துவத்தை ஈட்டிக் கொள்கின்றது.

பூகோள மூலதனத்தை உள்ளடக்கி வைத்திருக்கவென தேசிய அரசின் அதிகாரத்தை பலப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட அனைத்து வேலைத்திட்டங்களதும் படுவங்குரோத்து மட்டுமன்றி நிஜ ஆபத்துக்களும் இதன் மூலம் தெளிவாகின்றது. இவை புதிய பெரும் குமுறல்களை ஏற்படுத்த அச்சுறுத்தும் தேசிய அரசினைப் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளன.

1848ல் கார்ள் மார்க்ஸ் சுதந்திர வர்த்தகம் பற்றி நிகழ்த்திய ஒரு விரிவுரையில் சுதந்திர வர்த்தக அமைப்பு பழைய அமைப்பு முறையை அழிக்கக் காரணமாக இருப்பதால் அதற்கு ஆதரவாக வாக்களிப்பதாக விளக்கினார். இது பழைய தேசியங்களை உடைத்து எறிகின்றது. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான பகைமையை உச்சக் கட்டத்திற்குத் தள்ளுகின்றது. ஒரு வார்த்தையில் சொன்னால் சுதந்திர வர்த்தக அமைப்பு சமூகப் புரட்சியை விரைவுபடுத்துகின்றது."

நாம் இந்த அர்த்தத்திலேயே உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தை தரிசிக்கின்றோம். அது நாம் போராடும் வேலைத்திட்டத்தினைப் பலம் வாய்ந்த முறையில் நிரூபிக்கின்றது: உலக சோசலிச புரட்சிக்கான போராட்டத்தில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதாகும்.

தொழில்நுட்பத்தின் பிரமாண்டமான அபிவிருத்திகளின் அடிப்படையில் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியின் அபிவிருத்தியானது பரந்த புரட்சிகரப் போராட்டங்களுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் அதே வேளையில் இந்த வளங்கள் முழு மனித இனத்தினதும் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தக்கூடிய நிலைமையை சிருஷ்டிக்கும் புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான பொருளாதார அத்திவாரத்தையும் இடுகின்றது.

இதன் மிகவும் பாரிய ஒரு விளைவு உலக ஜனத்தொகையின் பெரும்பான்மையினரை பாட்டாளிகள் ஆக்குவதாகும். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் கடந்த காலங்களில் சில சலுகைகள வழங்கப்பட்ட உழைப்புப் படையின் முழுப் பகுதியினரும் யதார்த்தத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. மூலதனத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் பெரும் கூலி ஊழைப்புக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. உலகம் பூராவும் தொழிலாளர் வர்க்கத்தின் சக்திவாய்ந்த புதிய படையணிகள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பூகோள பரம்பலால் சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

மார்க்ஸ் தமது புகழ்பெற்ற அழைப்பான "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"! என்பதை விடுத்த வேளையில் தொழிலாளர் வர்க்கம் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் சனத்தொகையில் சிறுபான்மையினராக விளங்கியது. இன்று தொழிலாளர் வர்க்கம் உலகச் சனத்தொகையில் பெரும்பான்மையினரைக் கொண்டுள்ளது.

தொழிலாளர்கள் எந்த நாட்டில் வசித்தாலும் அவர்கள் ஒரே தாக்குதல்களுக்கே முகம் கொடுத்துள்ளனர். கடந்த காலத்தில் வசிக்கும் நாட்டுக்கும் வருமானத்துக்கும் இடையே தொடர்பு இருந்து வந்தது. இன்று அது சரிந்து கொண்டு வருகின்றது. உயர் செல்வந்தர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் அல்லது ஆசியாவிலும் வசித்தாலும் அவர்கள் உலகத்தைச் சேர்ந்தவர்களைப் போன்று தேசியம் அல்ல வர்க்கமே. வுருமானத்தினதும் சமூக நிலைமையை நிர்ணயிக்கும் தனி தொழிலாளர் வர்க்க உலகம் அதிகரித்த விதத்தில் ஸ்தானமாகி வருகின்றது. தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தின் அபிவிருத்திக்குச் சாதகமான நிலைமைகள் இந்தளவுக்கு முன்னர் ஒரு போதும் சாதகமாக இருந்தது கிடையாது.

உற்பத்தியின் பூகோளமயமாக்கம் முன்னர் ஒருபோதும் இல்லாத அளவுக்கு தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை பலப்படுத்தியுள்ள தோடு இது ஒரு திட்டமிட்ட உலக சோசலிச பொருளாதாரத்துக்கான அத்திவாரத்தையும் நாட்டி உள்ளது.

முதலாளி வர்க்கத்தின் உத்தியோகபூர்வமான சிந்தனாவாதம் சந்தை சிலையின் எதிரில் வீழ்ந்து வணங்குவதாகும். அதாவது, நனவற்ற பொருளாதார போக்குக்களின் தொழிற்பாட்டின் எதிரில் வீழ்ந்து வணங்குவதாகும்.

ஆனால் நிஜ வாழ்க்கையில் இந்த மதம் பின்பற்றுவதற்கு பதிலாக மீறப்படும் விதத்தை காணமுடிகின்றது. முதலாளித்துவ உற்பத்தியின் நிஜ நடைமுறையானது கண்டங்களுக்கு ஊடாகவும் கால பிராந்தியங்களுக்கு ஊடாகவும் 24 மணித்தியால அடிப்படையில் பொருளாதார போக்குக்கள் மிகவும் விரிவான திட்டமிடலுடன் இணைந்து கொண்டுள்ளது.

ஒரு திட்டமிட்ட உலக சோசலிச பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு கற்பனாவாதம் அல்ல. அதற்கான அத்திவாரம் ஏற்கனவே நாட்டப்பட்டுள்ளது. அனைத்துலக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களினால் இலாப நோக்கில் உலக ரீதியில் பொருளாதாரத் திட்டமிடலும் உற்பத்தியும் இடம்பெற முடியுமானால் ஒன்றிணைக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மனித இனத்தின் தேவையினதும் முழு மனித இனத்தின் நலன்களதும் அடிப்படையில் உற்பத்தியை அபிவிருத்தி செய்வது மிகவும் ஏற்ற விதத்தில் செய்யப்படக் கூடியதாகும்.

அது வெறுமனே சாத்தியமானது அல்ல. இலாப அமைப்பினை நடாத்திச் செல்வதனுள் தோன்றும் சமூக பேரழிகளை தவிர்க்க மனித இனம் அவசியம் செய்ய வேண்டியதுமாகும். நேரடியாக எதிரில் இருந்து கொண்டுள்ள புரட்சிகரப் போராட்டங்களினுள் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப் படுத்த நான்காம் அகிலம் இந்த வேலைத்திட்டத்திலேயே நின்று கொண்டுள்ளது. சோசலிசமா அல்லது காட்டுமிராண்டித்தனத்துக்குள் வீழ்வதா என்பது எதிரில் உள்ள இந்தப் போராட்டத்திடம் மனித இனத்தினதும் நாகரீகத்தினதும் எதிர்காலத்தை பணயம் வைக்கின்றது.

www.padippakam.com

# இந்திய பொதுத் தேர்தலும் முதலாளி வர்க்க நெருக்கடியும்

கே. ரத்னாயக்க

இந்திய குஜ்ரால் அரசாங்கத்தின் பொறிவும் உரிய காலத்துக்கு முன்னரே லோக் சபாவைக் கலைத்து பொதுத் தேர்தலை நடாத்தும்படி ஆளும் வர்க்கம் தள்ளப்பட்டமையும் இந்தியாவின் ஆளும் வர்க்கத்தை தலைமுதல் கால் வரையும் பிடித்துக் கொண்டுள்ள ஆழமான நெருக்கடியை நன்றாகக் காட்டிக் கொண்டுள்ளது. இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்த நெருக்கடியானது உலக ரீதியாக முதலாளித்துவ ஆளும் வர்க்கம் புதையுண்டு கொண்டுள்ள ஆழ்ந்த நெருக்கடியின் ஒரு அம்சமாகும். இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியான இலங்கையின் தொழிலாளர் வர்க்கமும் இந்த நெருக்கடியின் புரட்சிகரத் தன்மையைக் கருத்தில் கொண்டு இத்துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசினை நிறுவும் நோக்கில் அணிதிரட்டப்படுவது இன்று மிகவும் அத்தியாவசியம் ஆகியுள்ளது.

காங்கிரஸ் கட்சியினர் இந்தியப் பிரதமர் இந்திரஜித் குஜ்ராலின் முதலாளித்துவ ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு வழங்கிவந்த ஆதரவை நிறுத்திக் கொண்டதைத் தொடர்ந்து நவம்பர் 25ம் திகதி அரசாங்கம் கவிழ்ந்தது. இதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி தலைவர்களும் பாரதீய ஜனதா கட்சியும் கைலஞ்ச வாக்குறுதிகளை வழங்கி அமைச்சர்களை தேடிப்பிடித்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டன. ஸ்டாலினிச துரோகிகளின் ஒரு கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்) காங்கிரஸ் கட்சியின் இறுதி அறிவிப்பு பிரகாரம் தி.மு.க.வை ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேற்றி, காங்கிரசின் பக்கபலத்துடன் அரசாங்கத்தைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்த எடுத்த முயற்சியும் பிசுபிசுத்துப் போயிற்று. முதலாளித்துவக் கட்சிகள் இந்த விதத்தில் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்க நஞ்சைக் கண்டு நடுங்கியது போல் நடுநடுங்கி மற்றொரு கூட்டரசாங்கத்தை அமைக்க குழம்பி ஓடித் திரிந்தன. இறுதியில் சகல முயற்சிகளும் பயனற்றுப் போய் தேர்தலுக்குத் தள்ளப்படும் நிலைக்கு ஆளும் வர்க்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

பொதுத் தேர்தலில் பொதுமக்களை முகம் கொடுக்க முடியாத அளவுக்கு இக்கட்சிகளை பயம் பிடித்துக் கொண்டுள்ளது. காரணம்?தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இக்கட்சிகளைப் பற்றி மக்கள் பலத்த கோபமடைந்து உள்ளனர். தமக்கு இருந்து வந்த ஆதரவு சிதறுண்டு போயுள்ளதை இக்கட்சி முதலாளிகள் நன்கறிவர். எதிர்வரும் பெப்பிரவரி மாதத்தில் நடைபெறவுள்ள இத்தேர்தலில் எந்த ஒரு கட்சியும் தனித்து அரசாங்கத்தை அமைக்க இலாயக்கற்றவை என முதலாளித்துவ தொடர்புச் சாதனங்கள் கூறிக்கொண்டுள்ளன. அனைத்துலக ரீதியில் போன்றே இந்தியாவிலும் வர்க்க உறவுகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் இலாப வெறி தேவைகளுக்கு ஏற்ப செயற்பட்டு இந்திய ஆளும் வர்க்கம் தொடுத்துவரும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ச்சிகளில் இறங்கத் தள்ளப்பட்டுள்ளனர்.

1991ல் ஆட்சிப் பீடம் ஏறிய நரசிம்மராவின் காங்கிரஸ் கட்சி அரசாங்கம் ஏகாதிபத்திய பன்நாட்டுக் கம்பனிகளின் தேவைக்காக இந்தியப் பொருளாதாரத்தைத் திறந்துவிட்டு, மக்கள் மீது தொடுத்த தாக்குதல் காரணமாக மக்கள் எதிர்ப்புக்கு உள்ளாகியது. 1996ல் பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுமுடியாது போன பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் 13 நாட்கள் மட்டுமே நின்று பிடித்தது. இந்நிலையில் இந்திய ஆளும் வர்க்கத்துக்குத் தோள் கொடுத்தோர் ஸ்டாலினிச துரோகிகளே.

காங்கிரஸ் முதலாளித்துவக் கட்சியின் ஆதரவைப் பெறும் நோக்குடன் 13 பிராந்திய முதலாளித்துவக் கட்சிகள் ஒன்றிணைந்து, ஐக்கிய முன்னணி என்ற பெயரில் முதலாளித்துவ அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சீ.பீ.எம்., சீ.பீ.ஐ.கட்சிகள் இரண்டும் முன்னணியில நின்றன. சீ.பீ.ஐ.அரசாங்கத்துள் நுழைந்து கொண்டது. சீ.பீ.எம்..அரசாங்கத்துக்கு வெளியில் நின்று ஆதரவு வழங்கும் வேலைத்திட்டத்துக்கு இணங்கியது. இந்த ஸ்டாலினிஸ்டுகள் முன்னணியில் நின்று தொடுத்த முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கம், தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களைக் குழப்பியடிக்கவும் அவர்களை நசுக்கி, உரிமைகளை துவம்சம் செய்யவும் அனைத்துலக மூலதனத்தின் சுரண்டல் சர்வாதிகாரத்தை நிறுவுவதில் சிறந்த சாதனமாகியது. இதனை ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய முதலாளிகளும் ஒப்புக் கொண்டனர்.

தமது சுய கட்டளைப்படி ஆரம்பிக்கப்பட்டு ஏகாதிபத்தியச்சார்பு வேலைத்திட்டத்தின் ஊடாக ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை கொண்டு நடாத்தி தோல்வி கண்ட காங்கிரஸ் முதலாளிகள் அரசாங்க அமைச்சர்களின் கேவலமான ஊழல் விளையாட்டுக்களை மூடி மறைக்கும் முயற்சிகளில் இறங்கினர். இந்த வகையில் ஜென் கமிசன் அரசாங்கத்தை கவிழ்க்க உதவிய ஒன்று மட்டுமே. தொழிலாளர் வர்க்கத்துக்கு பதிலீடாக ஒரு அரசாங்கத்தைக் கொண்டு வருவது அவர்களுக்கு அவசியமாகியது. ஏகாதிபத்தியவாதிகள் இந்திய முதலாளிகளுக்கு அமுல் செய்யும்படி வழங்கிய கட்டளைகள் தொடர்ந்தும் தாமதமாகி வருவதையிட்டு ஆளும் வர்க்கம் குழம்பிப் போயுள்ளது.

## 40 இலட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

40இலட்சம் இந்திய தொழிலாளர் சம்பள உயர்வு கோரி கடந்த செப்டம்பரில் பொது வேலைநிறுத்தத்தில் இறங்கியமை தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சியின் புதிய கட்டத்தை எடுத்துக் காட்டியது.அரசாங்கம் 40வீதம் சம்பள உயர்வு உள்பட்ட 12கோரிக்கைகளை வழங்கியதன் மூலமே தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆணையின்படி சம்பளவெட்டு அமுல் செய்யப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த ஒரு தருணத்திலேயே இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.அரசாங்கத்தின் இந்தச் சம்பள உயர்வுத் தீர்மானம் சில முதலாளித்துவப் பகுதியினரால் மட்டுமல்லாது இந்திய மத்திய அரசாங்க நிதி அமைச்சர் பீ.சிதம்பரத்தின் விமர்சனத்துக்கும் உள்ளாகியது. அத்துடன் இச்சம்பள உயர்வுடன் இலட்சக்கணக்கான தபால் சேவையைச் சேர்ந்த உயர்மட்ட, கீழ்மட்ட ஊழியர்களிடையே பெரும் சம்பளப் பாகுபாடுகள் ஏற்பட்டன. இந்தச் சம்பளத் திட்டத்தை எதிர்க்கும்படியும் தொழிற்சங்கத் தலைவர்களை சங்கங்களில் இருந்து விலகிப் போராடுமாறும் கோரித் தொழிலாளர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்தனர். இது தொழிற்சங்கத் தலைவர்களையும் தாண்டி தொழிலாளர் போராட்டங்கள் வளர்ச்சி காண்பதற்கான ஒரு அறிகுறியாகும்.

கடந்த ஆண்டில் 15இலட்சம் வங்கி ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். இதற்கிடையே 80இலட்சம் பிராந்திய அரச ஊழியர்கள் தற்சமயம் சம்பள உயர்வு கோரி பிரச்சாரத்தில் இறங்கி உள்ளனர்.கல்வி வெட்டுக்கு எதிராக ஆசிரியர் மாணவர்களிடையே பிரச்சாரம் வெடித்துள்ளது. ஸ்டாலினிச ஆட்சி நிலவும் கேரள மாநிலத்தில் பல்லாயிரக் கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் ஸ்டாலினிச தலைவர்கள் தமது பிரச்சாரத்துக்கு எதிராக இருந்து கொண்டுள்ள நிலையிலும் கூட



இந்திய பிரதமர் குஜராலும் அமெரிக்க வர்த்தக செயலாளரும்

சென்று எதிர்ப்புக் காட்டிக் கொண்டுள்ளனர். தனியார்மயமாக்கப்பட்டுவரும் அரசாங்கத் துறை நிறுவனங்களிலும் இழுத்து மூடப்பட்டு வரும் முதலாளித்துவ கம்பனிகளிலும் கூட தொழிலாளர் போராட்ட அவசியத்துடன் இருந்து கொண்டுள்ளனர். வறிய விவசாயிகளின் பிரச்சாரம் வெடித்து எழுவதைத் தவிர்க்க. பெரும் நிலவுடமை பண்ணையர்கள் எத்தகைய கொடிய ஒடுக்குமுறைகளில ஈடுபட்டுள்ளனர் என்பதை(நவம்பர் ) பீகாரில் பெண்கள் குழந்தைகள் உட்பட 61பேர் கொடூரமாக கொலைசெய்யப்பட்டமை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பொதுஜன அதிருப்தி மிகப் பாரிய அளவில் வளர்ச்சி கண்டுவருகின்றது. இது வளர்ச்சி கண்டுள்ள சமூகத் துருவப்படுத்தலை எடுத்துக் காட்டுகின்றது. தேசியவாத வேலைத்திட்டங்களின் பொறிவினைத் தொடர்ந்து செயற்படும் அனைத்துலக மூலதனத்துக்கு வழிவகுக்கும் வேலைத் திட்டத்தினால் பொதுமக்கள் மேன்மேலும் ஆதாள பாதாளத்தில் தள்ளப்பட்டு வருகின்றனர்."பிசினஸ் இந்தியா" சஞ்சிகை இந்தியாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் இந்திய ஜனத்தொகையில் 52 வீதத்தினர் என்கின்றது.48வீதத்தினருக்கு படிப்பறிவு கிடையாது என்கிறது. இத்தகைய படிப்பறிவற்ற பெண்கள் 64 வீதம் எனவும் அது குறிப்பிடுகின்றது. 5வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களில் 63வீதத்தினர் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். சனத்தொகையில் 71வீதத்தினருக்கு எந்தவிதமான குறைந்த பட்ச வைத்திய வசதி தன்னும் கிடையாது. சிறுவர் உழைப்பு பெருமளவில் பெருகி வருகின்றது. முதலாளித்துவ செய்திப் பத்திரிகைகளில் வெளியான மற்றொரு செய்தியின் படி வாழ்க்கை நடாத்த வழியில்லாததால் 250க்கு மேற்பட்ட சிறுமியர்களும் பெண்களும் தினசரி விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவின் பெரும் செல்வந்த முதலாளிகள் தேசிய வருமானத்தின் பெரும் பங்கினை விழுங்கி ஏப்பமிடும் ஒரு நிலையிலேயே தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இந்நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய முதலாளித்துவ அரசாங்கம் வீழ்ச்சி காண்பதன் மூலம் தமக்கு அவசியமான "சீர்திருத்தங்களை" தடையற்ற வகையில் நடைமுறைக்கிடுவதில் மந்தநிலை ஏற்படுவதையிட்டு மனக்கிலேசம் அடைந்துள்ளனர். டிசம்பர் 2ம்3ம் திகதிகளில் நடைபெற்ற இந்திய யப்பானிய கூட்டு வர்த்தக சபைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய "கொண்டா" கம்பெனியின் அதிபர் நொடிகிகோ கவாதிடோ வர்த்தகர் களிடையேயான உறுதிப்பாட்டு நிலைமைக்கான தமது "விருப்பத்தை" வெளிக்காட்டிக் கொண்டுள்ளார். அத்தோடு சில வங்கிகள் இந்திய மூதலீட்டுக்கு சற்றுக் கவனம் காட்ட வேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடப்பட்டது.

புதுடில்லியில் டிசம்பர் 2ம் வாரத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மேடை கூட்டத்தில் பேசிய நிதியமைச்சர் சிதம்பரம் "அரசாங்கம் வீழ்ச்சி கண்டாலும் சீர்திருத்தம் தொடர்ந்து அமுலுக்கிடப்படும்"எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக்க, ஐரோப்பிய, யப்பானிய பிரதிநிதிகள் வங்கிகள் காப்புறுதிக் கம்பனிகள் உட்பட்ட நாணயப் பிரிவுகளும் வெளிநாட்டு மூலதனத்துக்கு திறக்கப்படுதல், ஏஞ்சியுள்ள அரசாங்க துறைகள் தனியார்மயமாக்கப்படுதல், விவசாயத்துறையை வெளிநாட்டு முதலீட்டுக்குத் திறத்தல் போன்ற நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றுள்ளனர். டிசம்பர் முற்பகுதியில் இடைக்கால மத்திய அரசாங்க, மாநில அரசாங்க தலைவர்களைச் சந்திக்க பெரும் வர்த்தகர்கள் குழுவுடன் இந்தியா வந்த பில் கிளின்டன் அரசாங்கத்தின் வர்த்தகச் செயலாளர் வில்லியம் டாலியும் தெரிவித்தார்.

இதே சமயம் உலகச் சந்தையை இயக்க நிறுவப்பட்ட உலக வர்த்தக அமைப்பு (WTO) அமைந்துள்ள ஜெனீவா நகரக் கூட்டத்தில் கைச்சாத்தான நாணய சேவை உறவுகளைத் தளர்த்தும் ஒப்பந்தத்திலும் இந்தியா கைச்சாத்திட நேரிட்டுள்ளது. அதன் பிரகாரம் 1999 மார்ச் வரை இந்திய காப்புறுதி கம்பனி வங்கித் தொடர்புகள் திறக்கப்படவும் வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகளின் இந்த நெருக்குவாரத்தின் அர்த்தம் என்ன?இப்போது கூட ஆபத்தான நிபந்தனைகளுக்கு முகம் கொடுத்துள்ள தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களது வாழ்க்கை, தொழில் நிலைமைகளுக்கும் ஏனைய உரிமைகளுக்கும் பரந்த அளவில் தாக்குதல் தொடுப்பதே திட்டம்.இது உலக ரீதியாக வளர்ச்சி கண்டுவரும் நாணய, வர்த்தக சந்தை நெருக்கடியை பிரதிபலிக்கின்றது. இந்தியாவினுள் ஏகாதிபத்தியவாதிகள் இலாபகரமான சுரண்டல், வளங்களைச் சூறையாடல்களை தீவிரமாக்க இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

## "நிலையான அரசாங்கம்"

உலக நாணய அமைப்பை வெட்டிச் சரிக்க சகல வகையிலும் இடம்பெறும் நெருக்கடி இந்தியாவினுள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இந்த யுகத்தின் உலகப் பொருளாதார ஆதிக்கத்தின் பிடியில் இருந்தும் அதன் நெருக்கடியில் இருந்தும் தலையெடுக்க எந்த ஒரு நாட்டினாலும் முடியாது. கடந்த அக்டோபரில் இந்திய ரூபாவின் பெறுமதி நூற்றுக்கு 10வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.இந்திய முதலாளிகள் ரூபாவை நூற்றுக்கு 15 20 வீதத்தினால் மதிப்பிறக்கம் செய்ய உத்தேசித்துள்ளனர்.

இந்த அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் புதிய அபிவிருத்திகள் காரணமாக பிரமாண்டமான தொழிலாளர் வர்க்கத்தையுமும் கோடிக்கணக்கான விவசாயிகளையும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களையும் புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தள்ளும் பாரிய கொந்தளிப்புக்களுக்கு தூண்டுகோலாக அமையும். ஆளும் வர்க்கத்தின் சகல கட்சிகளும் அவர்களின் முகாமுக்குள் நுழைந்து கொண்டுள்ள ஸ்டாலினிஸ்டுகளும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் வெடித்தெழும் அச்சத்தினால் குழப்பம் அடைந்துள்ளனர். அனைத்துலக பன்னாட்டுக் கம்பனிகளின் இலாப வெறி அவசியங்களினால் தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம் ஆரம்பித்துள்ள போராட்டங்களின் ஒரு பாகமாக இந்தியத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்கள் வளர்ச்சி கண்டுள்ளன.

இந்நிலைமைகளின் கீழ் காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதா கட்சியும் ஸ்டாலினிஸ்டுகள் தோள் கொடுக்கும் முதலாளித்துவ ஐக்கிய முன்னணியும் ஒரு "நிலையான அரசாங்கம்" அமைக்கும் சுலோகத்தை முன்வைத்துள்ளன. இத்தகைய

www.padippakam.com



தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு பலத்த அடி கொடுப்போர் ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் ஆணையை நடைமுறைக்கிடுபவர்களாக உள்ளனர். ஆதலால் இந்த நிலையான அரசாங்கம் என்ற சுலோகம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு இன்றுள்ள தேவையை பிரதி பலிக்கின்றது.

சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர் இந்தியாவில் தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்களை அடக்கியவாறு மூன்று தசாப்தங் களுக்கு மேல் ஆதிக்கம் செலுத்திய இந்திய தேசிய காங்கிரஸ் பிராந்திய எல்லைகளுடன் சிதறுண்டு போயுள்ளது. எஞ்சிய சகல காங்கிரஸ் முதலாளிகளும் பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதே சமயம் இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சியானது ஸ்டாலினிஸ்டுகளது காட்டிக் கொடுப்பைப் பயன்படுத்தி பாசிச சிவசேனா போன்ற குழுக்களுடன் இணைந்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் பிற்போக்கு கருவியாக ஆட்சியைக் கைப்பற்றத் தயாராகின்றது. பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் ஏற்படவுள்ள சமூக கொந்தளிப்பு பற்றி அச்சம் கொண்டுள்ள முதலாளித்துவ வர்க்கப் பகுதிகள் இக்கட்சியின் பின்னால் செல்வது பற்றி சிந்தித்தபடி உள்ளன. ஆனால் முதலாளி வர்க்கம் இந்த அரசியல் நிச்சயமின்மையில் நீண்டகாலம் தங்கியிருக்கப் போவதில்லை. இராணுவ பாசிச சர்வாதிகார ஆட்சிக்கு மாற்றிச் செல்ல ஆளும் வர்க்கம் பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் ஆபத்து அபிவிருத்தி கண்டு வருகின்றது. இதையிட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகள் இந்திய ஆளும் வர்க்கத்தின் மீது நடாத்தும் தலையீட்டினால் வளர்ச்சி காண்பது இந்தப் பிற்போக்குச் சக்திகளே. இதே சமயம், இந்திய தொழிலாளர் வர்க்கத்தையும் வறிய மக்களையும் இனரீதியாக வேறு படுத்துவதன் மூலம் அவர்களைச் சுரண்டலுக்கு கீழ்ப்படுத்தவும் தமக்குச் சில சலுகைகளை பிடுங்கிக் கொள்ளவும் முதலாளித்துவப் பிரிவுகள் வாயூறிக் கொண்டுள்ளன. ஏகாதிபத்தியத்தின் இடைவிடாத ஒத்துழைப்பு மாநில முதலாளிகளுக்கு கிடைத்து வருகின்றது.

நெருக்கடியில் தலைமூழ்கியுள்ள இந்திய முதலாளி வர்க்கத்தை காப்பாற்றவும் அந்த இலக்கில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை உடைத்து தகர்க்கவும் ஏகாதிபத்திய முதலீடுகளை இந்தியாவுக்குள் ஈர்க்கவும் உக்கமளிக்கும் முக்கிய பிற்போக்குச் சக்தியாக ஸ்டாலினிச சீ.பீ.ஐ.-சீ.பி.எம் கட்சிகள் செயற்படுகின்றன. ஐக்கிய முன்னணி முதலாளித்துவ பக்க பலம் நெருக்கடியை தீர்க்க முடிந்ததற்கு காரணம் அதனுள்ளிருந்த சீ.பீ.ஐ.யினாலும் வெளியில் இருந்து தோள் கொடுத்த சீ.பீ.எம்.மினாலுமே. கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் வெளிநாட்டு முதலீட்டாளரைக் கவரும் வேலைத் திட்டத்தினை செயற்படுத்த இவர்கள் முன்னின்று உழைக்கின்றனர்.

டிசம்பர் 13ம் திகதி நடைபெற்ற அமெரிக்க முதலீட்டாளர் மகாநாட்டில் வர்த்தக செயலாளர் வில்லியம் டாலியுடன் பேசிய ஜோதிபாசு "தொழில் நுட்பக் கைத்தொழில் அபிவிருத்தியை நன்கு செயற்படுத்த வெளிநாட்டு முதலீட்டாளரை கூட்டுச் சேர்க்க வங்காள அரசு சகல ஒத்துழைப்பையும் வழங்கும்" என மீண்டும் உறுதி வழங்கினார். ஸ்டாலினிச மாநில அரசாங்கம் வர்க்க நடவடிக்கைகளில் இறங்கும் தொழிலாளர்களுக்கு எதிராக மிலேச்ச தாக்குதல்களை நடாத்தி வருகின்றது. ஸ்டாலினிச தொழிற்சங்க அணிகளில் இருந்து தொழிலாளர்கள் விலகி செல்கின்றனர். தற்சமயம் இந்த இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளும் மற்றுமோர் முதலாளித்துவ அரசாங்கத்தை ஆட்சிப் பீடம் ஏற்ற இத் தேர்தலில் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றன.

தமது உரிமைகளுக்காகவும் அவற்றைப் பேணவும் முன்வரும் இந்தியத் தொழிலாளர் வர்க்க. ஒடுக்கப்படும் மக்களுக்கு மாற்று வேலைத் திட்டத்தையும் புதிய தலைமையையும் வழங்கும் பொறுப்பு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கட்சியைக் கட்டியெழுப்பப் போராடும் சோசலிசத் தொழிலாளர் கழகத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக மூலதனத்திற்கும் அதன் ஏஜன்டான இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் தாக்குதலுக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு அனைத்துலக சோசலிசத்திற்காகப் போராடும் பகுதியினராக இந்திய தொழிலாளர் வர்க்க ஒடுக்கப்படும் மக்கள் தமது போராட்டத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும். நான்கு தசாப்தகால முதலாளித்துவ தேசிய வேலைத்திட்டம், உற்பத்தியின் பூகோளமயமாக்கலின் எதிரில் பொறிந்து போயுள்ளது. இது அனைத்துலக மூலதனத்துடன் இணைந்து இந்திய முதலாளி வர்க்கம் நடாத்தும் புதிய தாக்குதல்களின் எதிரில் இந்தியப் பொது மக்கள் தமது சோசலிச சமத்துவ ஆட்சியை நிறுவிக் கொள்ளாது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு கிடையாது என்ற கருத்தை நிலைநாட்டி உள்ளது.

தொழில், வாழ்க்கைத் தரத்தைப் பேணவும் அடிமைச் சுரண்டலை நீக்கவும் வறிய விவசாயிகளின் உற்பத்தி வசதிகளை வழங்கவும் ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்துடமைகளை தொழிலாளர் ஆட்சியின் கீழ் செயல் படுத்துவதன் மூலமே முடியும். அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் பகுதியாக இந்தியக் குடியரசின் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தை பேணுவது எப்படி? இன, மத, சாதி வேறுபாடுகளின் அடிப்படையில் முதலாளி வர்க்கத்தினால் சிருட்டிக்கப்பட்ட சமத்துவமின்மைக்கு மாறாக ஜனநாயக உரிமைகளைப் பேண இம்மக்களை ஐக்கியப்படுத்துவதும் வறிய விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்குவதும் ஜனநாயக பணிகளை இட்டுநிரப்புவதும் தொழிலாளர் - விவசாயிகள் ஆட்சியின் கீழ் மட்டுமே சாத்தியமாகும். அதற்கான சோசலிச வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஜனநாயக உரிமைகளை நிறைவு செய்யும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொண்டுவரும் முன்நோக்கினை இந்திய சோசலிச தொழிலாளர் கழகம் பாட்டாளி மக்கள் முன்வைக்கின்றது.

சோசலிசத் தொழிலாளர் கழகம் இத்தடவை தமிழ் நாட்டில் வட சென்னை, மேற்கு வங்காளத்தில் வடக்கு கல்கத்தா, கர்நாடகத்தில் கோலார் பகுதிகளில் மேற்சொன்ன முன்னோக்கின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. சோசலிச தொழிலாளர் கழகம் முன்வைக்கும் மாற்று மார்க்சிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சோசலிச மக்கள் இயக்கத்தை இந்தியா பூராவும் கட்டியெழுப்ப வேண்டும். இப்போராட்டமானது இந்தியாவில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் - இளைஞர்கள் புத்திஜீவிகள் இடையே சிந்திக்கும் ஆற்றல் படைத்த மக்கள் பகுதியினரை வென்றெடுத்து, புரட்சிகரக் கட்சியைக் கட்டியெழுப்பும் போராட்டத்துடன் இணைந்துள்ளது.

இலங்கையில் சோசலிச சமத்துவக் கட்சி சோசலிச தொழிலாளர் கழகத்தின் இப்போராட்டத்துடன் மிக நெருக்கமாக நின்று, இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் முழு இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசுக்கான முன்நோக்கினை சமர்ப்பிக்கின்றது.

பிரான்சு:

# இலட்சக் கணக்கான ட்ரக் சாரதிகள் வேலைநிறுத்தம்

பல இலட்சக் கணக்கான பிரான்சிய ட்ரக் சாரதிகள் நவம்பர் மாத முற்பகுதியில் ஒரு கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் ஐரோப்பிய வீதிப் போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்ததோடு சோசலிசக் கட்சிப் பிரதமர் லயனல் ஜொஸ்பின் அரசாங்கத்தையும் சவால் செய்தனர். பிரான்சின் பெரும் சாரதிகள் தொழிற்சங்கமான சீ.எப்.டி.ரி.தலைமைக்கும் சிறிய ட்ரக் நிறுவனங்களுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை ட்ரக் சாரதிகள் நவம்பர் 2ம் திகதி நிராகரித்ததைத் தொடர்ந்து இந்த வேலைநிறுத்தம் ஆரம்பமாகியது. அவர்கள் ஒப்பந்த பிரதியை தீயிட்டுக் கொழுத்தியதோடு தமது சொந்தக் கார்களைக் கொண்டு ஒரு பெரும் எரிபொருள் விநியோக நிலையத்தையும் போக்குவரத்துச் செய்ய முடியாத வகையில் தடைசெய்தனர்.

றீம்ஸ், லிமோகேஸ், கிரநோபிள், டூர்ஸ் பொயிட்டியேர்ஸ் முதலான இடங்களில் தொழிற்சங்க அங்கத்தவர்கள் உடனடியாக ஒப்பந்தத்தை நிராகரிக்கும்படியும் வேலைநிறுத்தம் செய்யும் படியும் வாக்களித்தனர்.ஒரு சில மணித்தியாலங்களுள் ட்ரக் சாரதிகள் நூற்றுக்கணக்கான பெருந்தெருக்களையும் எல்லை கடவைகளையும் போக்குவரத்துச் செய்ய முடியாத வகையில் தடைசெய்தனர்.அத்தோடு பெரும் கைத்தொழில், வர்த்தக மையங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடியாத நிலைமையை உருவாக்கினர்.

இந்த வேலைநிறுத்தம் 1996 நவம்பரில் வெடித்த இரண்டு வார மோதுதல் மீண்டும் வெடிப்பதாக விளங்கியது. இந்த மோதுதலின் போது ட்ரக் சாரதிகள் முழு நாட்டையுமே ஒரு ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தத் தகராறு அலன் ஜூப்பே அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கையைத் தொடர்ந்து முற்றுப்பெற்றது. அதில் சாரதிகளின் ஓய்வுபெறும் வயதினை 55ஆகக் குறைக்கவும் ஏககால போணஸாக 3000 பிராங்குகளை வழங்கவும், சாமான்களை ட்ராக்குகளில் ஏற்றவும் இறக்கவும் செலவாகும் நேரத்துக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கவும் இணக்கம் காணப்பட்டது. ஆனால் இந்த உடன்படிக்கையை பிரான்சின் 38000 ட்ராக்குகள் கம்பனிகளில் 5 வீதமானவை மட்டுமே கௌரவித்தன.

இந்த வேலை நிறுத்தம் தொழிலாளர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.பிரான்சில் 40வீதமான எரிவாயு நிலையங்களில் 18000 எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் பல கைத்தொழிற்சாலைகள் தொழிற்படமுடியாது போயிற்று. எல்லைகளிலும் பாலங்களிலுமான தடைகள் பிரான்சினை ஐரோப்பியாவுடன் இணைக்கும் பாதைகளை இயங்காது செய்தன. ஆயிரக்கணக்கான வெளிநாட்டு ட்ரக்குகள் பிரான்சில் அடைபட்டுக் கிடக்க நேரிட்டது. சிறப்பாக ஸ்பானிய, போர்த்துக்கல் கைத்தொழில்கள் இந்த வேலைநிறுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டன.ஏனெனில் இவற்றுக்கு ஐரோப்பாவுடனான ஒரே பாதையாக பிரான்சு இருப்பதே காரணம்.

ஆறு நாள் வேலைநிறுத்தத்தின் பின்னர் தொழிற்சங்கத் தலைவர்கள் ஒரு சமரசத்தை ஏற்படுத்த முடிந்தது. இது ஒரு மாதத்துக்கு 10000பிராங்குகளை(1700டொலர்) சம்பளத்தில் அதிகரிக்க இணங்கியது. இருந்த போதிலும் இந்த உடன்படிக்கை 2000 ஆண்டுகள் வரை செல்லுபடியாகாது. அத்தோடு ஒரு சிறிய சிரேஷ்ட ட்ரக்கு சாரதிகளுக்கு மட்டுமே இச்சலுகை கிடைக்கும். அத்தோடு இந்த போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாக விளங்கிய வேலை நேரத்தை குறைக்க வேண்டும் என்பதற்கு எதுவித தீர்வும், கிடைக்கவில்லை.பாரிய தொழிற்சங்கமான சீ.எப்.டீ.ரி.யின் 61 வீதமான அங்கத்தவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் கம்பனி முதலாளிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள வாக்களித்த போதிலும் சில போராளிகள் இந்த உடன்படிக்கையை எதிர்த்ததோடு தமது தொழிற்சங்க அங்கத்தவர் அட்டைகளையும் தீயிட்டுக் கொழுத்தினர்.

பிரான்சிய ஜொஸ்பின் அரசாங்கம் இந்த வேலைநிறுத்தத்தில் கடுமையாகத் தலையிட்டது. இரண்டு ஸ்பானிய, ஜேர்மன் எல்லைகளில் வேலைநிறுத்தக்காரர்களுக்கு எதிரான வன்முறையில் பிரான்சிய அரசாங்கம் இறங்கியது. என்றாலும் ஆட்சியாளர்கள் பதட்ட நிலைமையைத் தணிக்கவும் இருசாராருக்கும் இடையே பேரம் பேசவுமே முயன்றனர். பிரான்சிய முதலாளித்துவ அமைச்சரவையில் போக்குவரத்து அமைச்சராக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் கிளாடி கேசொட் தனிப்பட்ட முறையில் தொழிற்சங்கங்களுக்கும் கம்பனி முதலாளிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டு இருந்தார்.

# நியூயோர்க்கில் பட்டினி அதிகரிப்பு

சமீபத்தில் வெளியான ஒரு அறிக்கை நியூயோர்க் நகரில் வறுமை அல்லது "உணவு இன்மை"யால் வாடும் மக்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்தைத் தாண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கையை வறுமை ஒழிப்புக்கான சனசமூக உணவு வள நிலையம் வெளியிட்டுள்ளது. இந்த அமைப்பின் முக்கிய கண்டுபிடிப்புக்கள் வருமாறு :

* அமெரிக்காவின் பெரும் நகரமான நியூயோர்க்கின் சனத்தொகையில் 15 வீதத்துக்கும் அதிகமானோர் (1.07 மில்லியன்) உணவு இன்மையால் வாடுகின்றனர்.310000மக்கள் சாதாரண பட்டினியால் வாடுகின்றனர். 90000 பேர் கடும் பட்டினியால் வாடுகின்றனர்.

* நியூயோர்க் நகரில் சுமார் 2.4மில்லியன் ஏழைகள் உள்ளனர். இதில் 52 வீதமானவர்கள் குழந்தைகள். 31 வீதமானவர்கள் முதியவர்கள். இவர்கள் வறுமைக்கோட்டிற்கு குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுடனேயே வசிக்கின்றனர்.

* இந்த நிலையத்தின் ஆய்வின்படி 'சூப் கிச்சின்கள்' மாதம் ஒன்றுக்கு 450000மக்களுக்கு 4.5மில்லியன் உணவுகளை வழங்குவது தெரிய வந்துள்ளது.

www.padippakam.com

உடப்பு

# இனவாத அரசின் தாக்குதல்களை எதிர்த்து மீனவர்களின் நடவடிக்கை குழு

முதலாளித்துவ அரசின் பொலிஸ் இராணுவத்தினர் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் வாழும் பகுதிகளுள் நுழைந்து இளைஞர்களை சந்தேக நபர்களாகக் கைது செய்யும் சம்பவங்கள் தொடர்கின்றன. உடப்பு பிரதேசம் இத்தகைய தாக்குதல்களுக்கு அடிக்கடி உள்ளாகின்றது. 1997 தை, மாசி மாதங்களில் கைது செய்யப்பட்ட 5 மீனவர்கள் இதுவரை சிறையிலேயே உள்ளனர். கைது செய்யப்படும் அப்பாவி இளைஞர்களை புலிகள் எனச் சேறடிக்கும் முதலாளித்துவ அரசிற்கும் அதன் அடிவருடிகளான பத்திரிகைகளுக்கும் எதிராக சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் பத்திரிகைகளான தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்தவும் தொடர்ந்து போராடி வந்துள்ளன.

உடப்புவில் கடந்த ஜனவரியில் கைது செய்யப்பட்டவர்களுள் பெருமாள் ராஜா, முத்துராமன் வைரவமூர்த்தி, செல்வநாயகம், முத்துவைரன், ஐயன் குருமூர்த்தி ஆகியோரும் அடங்குவர். முத்துராமு வைரமூர்த்தி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மீனவரான இவரின் மனைவி கூறியதாவது: சிவில் உடையில் வந்த மூன்று பொலிசார் எமது வீட்டினுள் நுழைந்து தேசிய அடையாள அட்டையைச் சோதிக்க வேண்டுமென்று கைது செய்தனர். கைது செய்த 10 நாட்களின் பின்னரே அவர் பற்றிய விபரங்கள் தெரிய வந்தன. நான்கு வருடங்களுக்கு முன்னர் வைரவமூர்த்தியுடன் மீன்பிடித் தொழில்புரிந்த அவரின் நண்பரை வவுனியாவில் கைது செய்தபோது அவர் வைரவமூர்த்தியைச் சந்திக்கச் சென்றதாகக் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்தே வைரவமூர்த்தி கைது செய்யப்பட்டார். தற்போது அவர் சந்தேக நபராக மகசீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 24ம் திகதி இரவு 12மணிக்கு சிவில் உடையில் உடப்பு மீனவர்களின் குடியிருப்புக்குள் பாய்ந்த 3 பொலிசார் பெருமாள் ராஜாவின் வீட்டுக்குள் நுழைந்து அவரையும் கைது செய்தனர். அவரைப் பார்க்க ஏழு தடவைகள் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. அதையும் பொலிசார் தடைசெய்துள்ளனர். அவரும் மகசீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

உடப்பு ஆண்டி முனையில் வசித்துவந்த செல்வநாயகம் ஜனவரி 31ம் திகதி அவரின் வீட்டிற்கு அருகே குளித்துக் கொண்டிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்டார். முல்லைத்தீவில் இருந்து அகதிகளாக வந்த செல்வநாயகத்தின் சகோதரிகளின் பிள்ளைகளை திருப்பி அனுப்பியதே அவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும். இவரும் தாக்கப்பட்டு மகசீன் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

களுத்துறைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஐயன் குருமூர்த்தி கடலுக்குச் செல்லத் தயாராகி வரும்போது கைதுசெய்யப்பட்டார். இந்தக் கைது செய்தல் சம்பந்தமான தகவல் அவரின் குடும்பத்தவர்களுக்கு கிராமவாசிகள் ஊடாகவே கிடைத்தது. இல்லையேல் அவருக்கு என்ன நடந்தது என்பதே தெரியவந்திருக்காது.

உடப்புவில் வசிக்கும் மீனவரான தாமோதரம் மகேந்திரன் கடந்த செப்டம்பர் 3ம் திகதி முந்தளம் கரவில்லு சந்தை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார். புலிகளுக்கு பொருள்களை விநியோகம் செய்தார் என்ற பொய்க் குற்றச்சாட்டு இவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. இதை மகேந்திரன் ஏற்றுக் கொள்ளாமல் அவரை விடுதலை செய்வதாக கூறியுள்ளனர். இதை ஏற்கமறுத்ததைத் தொடர்ந்து மகேந்திரனின் கால் பெருவிரல் இரண்டையும் இணைத்துக் கட்டி தலைகீழாகத் தொங்கவிடப்பட்டார். கண்களுக்கும் மூக்குக்கும் மிளகாய்த் தூள் தூவியதோடு அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். விரல் நகங்களை குறட்டினால் ஒற்றி இழுத்த பொலிசார் காலையும் விரல்களையும் தாக்கியுள்ளனர். மூன்று நாட்கள் உடப்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த மகேந்திரன் பின்னர் சிலாபத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நீர்கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார். செப்டம்பர் 15ம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் முந்தளம் பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையெழுத்திட வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளதோடு அவருக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக்கைது செய்தல் சம்பவங்களுக்கு முன்னர் 1996ல் உடப்புவில் 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து நடைபெறும் கைதுகளுக்கும் சித்திர வதைகளுக்கும் மத்தியில் முதலாளித்துவ பத்திரிகைகள் இவர்களை புலி சந்தேக நபர்களாகச் சேறடித்துக் கொண்டுள்ளன. அரச ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்துள்ள உடப்பு மீனவர்கள் மத்தியில் இயங்கும் புளொட் இயக்கம் பொலிசாருடன் சேர்ந்து இந்த இளைஞர்களை விடுதலை செய்வதாகக் கூறி ரூபா.2500 ரூபா.5000 வரை மக்களிடம் சுரண்டியதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் புலி சந்தேக நபராக கைது செய்யப்பட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவரான செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்யவும் கைதாகி இருந்த தோட்டப்புற இளைஞர்களை விடுதலை செய்யவும் சோசலிச சமத்துவக் கட்சி இலங்கையின் உள்ளும் அனைத்துலகிலும் முன்னெடுத்த பலம் வாய்ந்த போராட்டத்தின் மூலம் தனது பாத்திரத்தினை வெளிப்படுத்தியது. இப்போராட்டத்தில் பங்குகொண்ட மீனவர்களின் ஒத்துழைப்புடன் சோசலிச சமத்துவக் கட்சி நடவடிக்கை குழுவை அமைத்துக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைக் குழு சிங்கள, தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தின் ஊடாக கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞர்களின் விடுதலைக்காகவும் இனவாத அரசிற்கு எதிராகவும் போராடச் சபதம் பூண்டுள்ளது.

கொட்டாஞ்சேனை புளூமென்டால் தமிழ்-சிங்கள பாடசாலை

# இனவாத பொறியில் வீழ்ந்து விடாதீர்கள்!

புளூமென்டால் தமிழ் சிங்கள பாடசாலை சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக டிசம்பர் 3ம் திகதி வெளியான திவயின பத்திரிகை குறிப்பிட்டது. ஆனால் பிரச்சினைக்கு அடிப்படையான காரணங்கள் தொடர்ந்தும் அப்படியே இருந்து வருவதால் அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட சமாதானம் எனப்படுவது நீண்ட நாட்கள் செல்ல முன்னரே சிதறுண்டு போகும் ஆபத்து இருந்து கொண்டுள்ளது.

1962க்கு முன்னர் சுகததாச விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்தில் இருந்து வந்த இந்தப் பாடசாலை விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்கும் காரணத்தினால் புதிய இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் இரண்டு பாடசாலைகளுக்கு போதுமான விதத்தில் ஒதுக்கிக் கொடுத்த இடமோ அல்லது கட்டிடமோ இல்லாததால் அடிக்கடி பிரச்சினைகள் தலையெடுத்து வந்தன.

1991ம் ஆண்டுவரை இந்தக் கட்டிடத்தில் காலையில் சிங்களப் பாடசாலையும் மாலையில் தமிழ்ப் பாடசாலையும் இயங்கி வந்தன. இதனால் தமிழ் ஒடுக்கப்படும் சிறுவர்கள் காலையில் கல்வி பெறுவதற்கான உரிமை பறிக்கப்பட்டிருந்தது. காலையில் வகுப்புக்களை நடாத்துவதற்கு அவசியமான தனிக்கட்டிடத்தை தமக்கு வழங்கும்படி கோரி தமிழ் மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அன்று இருந்து வந்த யூ.என்.பி. அரசாங்கம் அதற்கு எந்தவிதமான ஆதரவும் காட்டவில்லை. பின்னர் ஒரு கொடைவள்ளலின் நிதி உதவியோடும் கல்வி அமைச்சின் எதுவிதமான நிதி ஒதுக்கீடுகளும் இல்லாமலே இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதோடு அதில் காலையில் வகுப்புக்களை நடாத்துவதற்கும் தமிழ் பாடசாலையின்பெற்றோர் -ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இருந்தபோதிலும் பொது இடத்தின் வரையறுக்கப்பட்ட வசதியும் கட்டிடத்தின் தட்டுப்பாடும் தொடர்ந்தும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்தது. இரண்டு பாடசாலைகளுக்கும் நீர் வழங்கும் குழாய் சிறியதாக இருந்ததால் ஒரு பாடசாலைக்கு நீர் வழங்கும் போது மறு பாடசாலைக்கு தண்ணீர் இல்லாது போகும் பிரச்சினை ஏற்பட்டுவந்தது.

இந்த பாடசாலை வளங்களின் தட்டுப்பாடு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகையில் சிங்கள இனவாதக் கும்பல்கள் சிங்களப் பெற்றோரையும் மாணவர்களையும் தூண்டி தமிழ் பாடசாலை வளங்களை நாசமாக்குவதிலும் மாணவர்களைத் தாக்குவதிலும் ஈடுபட்டனர். சிங்கள பாடசாலையின் பெயர்ப் பலகையைக் கழற்றி, தமிழ் பாடசாலையின் பெயர்ப் பலகைக்கு முன்னால் மாட்டுவதும் தமிழ் பாடசாலையின் நீர் விநியோகக் குழாயை உடைப்பதும் இந்த ஆத்திரமூட்டலின் ஒரு பாகமாக இடம்பெற்றது.

இரு பாடசாலைகளதும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் இந்த இனவாத பொறியில் வீழ்ந்து விடாது பிரச்சினைக்கு அடிப்படையான பாடசாலை வளங்களை பெறும் போராட்டத்தில் கூட்டாக ஈடுபடவேண்டும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் உட்பட்ட முதலாளித்துவ அரசாங்கங்கள் இலவசக் கல்விக்கு முழுக்கு போடுவதை இலக்காகக் கொண்டு தொழிற்படுவதால் அந்த அரசாங்கங்களின் கீழ் இந்த உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாது. இதற்கு இரண்டு பாடசாலைகளதும் பெற்றோர் ஆசிரியர் மாணவர்களைக் கொண்ட நடவடிக்கைக் குழு அமைக்கப்பட வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி கூறுகின்றது. அதன் அடிப்படையில் சோசலிச வேலைத்திட்டத்துக்கு போராடுவதன் மூலமே ஒடுக்கப்படும் மக்களின் இலவசக் கல்வி உட்பட்ட அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் பாடசாலைகள் இரண்டினதும் பிரச்சினைக்கு மூலகாரணமான வளங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்படும்.

# ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் அரசியல் . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

மைதானத்தில் நடாத்திய முதலாவது கூட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு முதலில் நன்றி தெரிவித்ததோடு, பு.க.க. அலுவலகத்துக்கும் வருகை தந்து நன்றி தெரிவிக்கத் தள்ளப்பட்டார். என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்த போதிலும் முதலாளி வர்க்க அரசின் அடக்குமுறைகளில் இருந்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை விடுதலை செய்யும் போராட்டத்தை கீர்த்தி சவிரக்கம் அற்ற முறையில் நடாத்தினார்.

தோழர். கீர்த்தி இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியின் தலைவர்களான கொல்வின் ஆர்.டி. சில்வா, டொரிக் டி சூசா, லெஸ்லி குணவர்தனா ஆகியோர் பிற்காலத்தில் துரோகிகளாக மாறி இழைத்த எதிர்ப்புரட்சி பாத்திரங்களையிட்டு எந்த அளவுக்கு கசப்பும் தணியாத வெறுப்பும் கொண்டிருந்தாரோ அந்த அளவுக்கு யுத்தகாலத்தில் அவர்கள் வழங்கிய கொள்கைப் பிடிப்பான புரட்சிகரத் தலைமையையிட்டு மதிப்பும் கௌரவமும் கொண்டிருந்தார். இந்திய துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை-ஈழம் சோசலிசக் குடியரசினை கட்டியெழுப்ப அந்தப் போராட்ட வரலாறுகளால் அனைத்து போராளிகளும் ஆயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என்பதில் கீர்த்தி இரும்புப் பிடியாக இருந்தார். 1983 கறுப்பு ஜூலைக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் 1948-3-5ல் அகில வங்காளி மாணவர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கொல்வின் ஆர்.டி. சில்வா இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு நிகழ்த்திய உரையை கீர்த்தி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சிங்கள, தமிழ் பத்திரிகைகளில் வெளியிட்டார். அத்தோடு அது ஒரு சிறு நூல் வடிவிலும் வெளியிடப்பட்டது. இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் கலவரங்கள் இடம்பெற்று வந்த சமயத்தில் ஆற்றிய உரையில் கொல்வின் ஆர்.டி.சில்வா கூறியதாவது: "பிற்போக்கு இனவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரே வழி, சோசலிசத்துக்காக இடம்பெறும் முற்போக்கு வர்க்கப் போராட்டமே என்பதைச் சுட்டிக் காட்டுவது இன்று அவசியமா? தமது நிலவுடமையாளர்கள்- முதலாளிகளுக்கு எதிரான விவசாயிகள்-தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டம் கூர்மையடைந்ததும் இனவாதப் போராட்டங்கள் இந்தியாவின் சகல பாகங்களிலும் மேலும் மேலும் பின்னடிக்கத் தள்ளப்படும். வர்க்கப் போராட்டத்தின் அலைவீச்சு தணிந்ததும் சுரண்டலாளர்கள் இனவாத ஆயுதத்தைப் பெறுவது சுலபமாகிவிடும். இப்பிரச்சினை பற்றியும் இது தொடர்பான எமது திடசங்கற்பத்தை பற்றியும் இதுதான் வரைவிலக்கணம்"

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் வர்க்கப் போராட்ட "அலைவீச்சை" பிரயோகிப்பதில் கீர்த்தி பெரிதும் உறுதியாக இருந்தார். எனவேதான் அவர் சீர்திருத்தவாத, ஸ்டாலினிச மோசடித் தீர்வுகளையிட்டு தனது வெறுப்பைக் கொட்டினார்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கில் வந்திறங்குவதற்கு முன்னதாக 1986ல் ஜே.ஆர் ஜயவர்தனாவின் பாதுகாப்பு அமைச்சராக விளங்கிய லலித் அத்துலத் முதலியினால் வடமராட்சியில் நடாத்தப்பட்ட காட்டுமிராண்டி "ஒப்பரேசன் லிபரேசன்" இராணுவ நடவடிக்கையை எதிர்த்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு கொம்பனித்தெரு மமெல் பார்க்கில் நடாத்திய கூட்டத்தில் பேசிய தோழர் கீர்த்தி "அயர்லாந்தின் விடுதலைக்காக பிரித்தானிய தொழிலாளர் வர்க்கம் போராடுவரை பிரித்தானிய தொழிலாளர் வர்க்கத்திற்கு விடுதலை கிடையாது" என்ற கார்ள் மார்க்சின் எச்சரிக்கையை சுட்டிக்காட்டி நிலைவுபடுத்தினார். இனவாத யுத்தத்துக்கு முடிவு கட்டுவதில் தொழிலாளர் வர்க்கம் இட்டுநிரப்ப வேண்டிய பாத்திரத்தின் அவசியத்தை கீர்த்தி வலியுறுத்தினார். இதைக் கீர்த்தி இன்றைய சில சந்தர்ப்பவாத இடதுசாரிகள் செய்வது போல் முதலாளித்துவ பத்திரிகையாளர்கள் முன் ஆசனத்தில இருந்து குறிப்பெடுப்பதற்காக கூறவில்லை. அன்று யூ.என்.பி.யின் இனவாத பிரச்சார பகட்ட நிலைமையிலும் ஆயுதப்படையினர் ஆத்திரமூட்டும் வகையில் கூட்ட மைதானத்தைச் சுற்றிக் குவிக்கப்பட்டு இருந்த நிலையிலும் இனவாதக் குண்டர்கள் வீசிய கற்கள் கூட்ட மேடையில் வந்து வீழ்ந்து கொண்டிருந்த நிலையிலுமே குறிப்பிட்டார்.

கீர்த்தியின் இந்த மார்க்சிசத்துக்கான போராட்டமும் புரட்சிகரக் காரியாளர்களைப் பயிற்றி எடுப்பதில் அவர் காட்டிய விசேட அக்கறையும் சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதங்களுக்கு எதிரான அவரின் உறுதியான போராட்டமும் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் 1985 அக்டோபர் தொடக்கம் 1987 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் அனைத்துலகக் குழுவின் கோட்பாட்டு, அரசியல் மறுமலர்ச்சிக்காக ஆற்றிய ஈடுசெய்ய முடியாததுமான பாத்திரமும் கீர்த்தியினை ஒரு அனைத்துலக புரட்சித் தலைவராக ஸ்தாபிதம் செய்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# களுத்துறை சிறையில் தமிழ் சிறைக் கைதிகள் மூவர் படுகொலை...

1ம் பக்கத் தொடர்ச்சி

மூடி முறைத்து தமிழ், சிங்களத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளும் கொடிய அடக்குமுறை இயக்கம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினாலும் முதலாளித்துவ அரச இயந்திரத்தினாலும் எப்படி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது என்பதைப் புரிந்து கொள்ள நிஜ சம்பவங்களையிட்டு எமது கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

கொலை செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் கம்பர்மலை முத்துலிங்கம் தர்மலிங்கம் (24 வயது) யாழ்ப்பாணம் சண்முகராஜா சிவநேசன்( வயது 20) மன்னார் எச்.பீ.மொஹமட் ஹான் ஆகிய தமிழ் தேசிய இன அரசியல் கைதிகளாவர்.

காயமடைந்தோர்: 1.கொக்குவில் கிருஷ்ணபிள்ளை சிறீமோஹன்( 44)2. கிரான் சிவநாதன் திவாகரன்(20) 3.முனைக்காடு வெற்றிவேல் திருச்செல்வம்( 26) 4.ஊர்காவற்துறை இரத்தினம் தனபாலசிங்கம்(25)5.திருக்கோவில் இராஜதுரை கோபாலகிருஷ்ணன்(21) 6.உருத்திரபுரம் பசுபதிப்பிள்ளை சேந்திரன்(24) 7.களுவாஞ்சிக்குடி முருகமூர்த்தி திலகேஸ்வரன்(24) 8.மட்டக்களப்பு நாகமணி தேவேந்திரம்(24)9.பளுகாமம் நல்லையா இராஜலிங்கம்(20) 10.மட்டக்களப்பு இளையதம்பி சிறீரங்கதாஸ்(25) 11.யாழ்ப்பாணம் செல்வரத்தினம் குமணன் 12.வவுனியா சிவப்பிரகாசம் சொரூபன் (27) 13.யாழ்ப்பாணம் பஞ்சாட்சரம் செங்கோடன்(24) 14. திருக்கோவில் இளையதம்பி சுதாகரன்(24) 15.முள்ளியவளை அழகையா ரவிச்சந்திரன்(27) 16.யாழ்ப்பாணம் வீரப்பன் யோகராஜா.

காயமடைந்த இவர்கள் களுத்துறை நாகொடை ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.இவர்களில் மூவர் படுகாயமடைந்து இருந்தனர். 12ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொலைகாரத் தாக்குதலுக்கு முன்தினம் தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த சிறைக் கைதிகளுக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதலில் படுகாயம் அடைந்த நீராவியடி ஏ.பாலச்சந்திரனும் கொடிகாம் எஸ்.கருணாகரனும் நாகொடை ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றனர்.

## இனவாதத் தூபம்

கடந்த டிசம்பர் 10ம் திகதியில் இருந்து தமிழ்கைதிகளை தாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி இருந்தது .உணவுப் பங்கீடு சம்பந்தமான பிரச்சினையே இதற்குக் காரணமாகக் காட்டப்பட்டது. சில தினங்களுக்கு முன்னர் சிங்களக் கைதிகள் தமிழ் கைதிகளுக்கு தம்மைக் காட்டிலும் அதிக உணவும் தரமான உணவும் வழங்கப்பட்டு வருவதாகக் கூறியிருந்தனர். இதைத் தொடர்ந்து தமிழ்க் கைதிகளின் உணவின் தரம் குறைக்கப்பட்டது. சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளின் உணவை பலாத்காரமாக பிடுங்கிக் கொள்ளும் நிலைமையும் உருவாகி இருந்தது. தமிழ்க் கைதிகள் தமக்கு இடம்பெற்ற அநீதிகள் பற்றி எதிர்ப்புத் தெரிவிததனர். சிறைக் கைதிகளின் உணவுப் பங்கீட்டின் அளவையும் தரத்தையும் வெட்டிக் கொத்தி மடியில் கட்டிக் கொள்ளும் சிறை அதிகாரிகள் அதைப் பூசிமெழுகும் பொருட்டு தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக சிங்கள தேசியஇனத்தைச் சேர்ந்த சிறைக் கைதிகளிடையே இனவாத மோதுதல்களை தூண்டிவிட்டது தெரிகின்றது.

புதன்கிழமை(டிசம்பர்10) சிங்கள, தமிழ் கைதிகளிடையே உணவுப் பிரச்சினை பற்றி வாக்குவாதங்கள் ஏற்பட்டதோடு சிங்களக் கைதிகள் தமிழ் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்த "டீ" பகுதிக்குள் நுழைந்து கொள்ளவும் முயற்சித்தனர். சிறை அதிகாரிகள் செய்தது என்ன? இரு பகுதியினரையும் பிரித்து வைக்கும் கதவை மூடி அபிவிருத்தி கண்டுவரும் நிலைமையை கண்டும் காணாதது போல் இருந்தனர்.

டிசம்பர் 11ம் திகதி வியாழக்கிழமை சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளை தாக்கினர். படுகாயம் அடைந்த ஏ.பாலச்சந்திரனும் எஸ்.கருணாகரனும் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். 1983 கறுப்பு ஜூலையின் போது வெலிக்கடை சிறையில் யூ.என்.பி.இனவாதிகளால் வழிநடாத்தப்பட்ட குண்டர்கள் குட்டிமணி, தங்கத்துரை ஜெகன் உட்பட 51 அரசியல் கைதிகளை காட்டுமிராண்டித்தனமான முறையில் கொலை செய்ததற்குச் சமமான ஒரு நிலைமை களுத்துறைச் சிறையிலும் அபிவிருத்தி அடைகின்றதோ என்ற அச்சம் தமிழ்க் கைதிகளிடையேயும் தோன்றியது. அவர்கள் சிறை அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்து. பாதுகாப்பு வழங்கும்படி கோரினர்.

இரண்டு தினங்களாகத் தமிழ்க் கைதிகளுக்கு எதிரான தாக்குதல்களும் பயமுறுத்தல்களும் தொடர்ந்து கொண்டிருந்த நிலையிலும் தமக்கு பாதுகாப்பு வழங்கும்படி தமிழ்க் கைதிகள் சிறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நிலையிலும் பாதுகாப்பு வழங்கக் கடமைப்பட்ட சிறை அதிகாரிகள் அதைச் சட்டை செய்யவில்லை.

டிசம்பர் 11ம் திகதி தன்னைப் பார்வையிட வந்த மனைவியடம் ஒரு தமிழ் அரசியல் கைதி அன்றைய சம்பவங்களை எடுத்து விளக்கியதோடு தமிழ் அரசியல்வாதிகளிடம் இந்த ஆபத்தை எடுத்துக் கூறும்படியும் கேட்டுக் கொண்டிருந்தார்.மனித உரிமைகள் இயக்க நடவடிக்கைக் குழுவின் சட்டத்தரணி ஒருவர் 12ம் திகதி காலை கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதியிடம் இந்த ஆபத்தை எடுத்துக் கூறினார்.நீதிபதி டிசம்பர் 16ம் திகதி தமக்கு ஒரு முழு அறிக்கை சமர்ப்பிக்கும்படி களுத்துறை சிறைச்சாலை அதிகாரிக்கு கட்டளையிட்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.ஆனால் 12ம் திகதி ஒரு சில மணித்தியாலங்களுள் இந்தக் காட்டுமிராண்டித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

## காட்டுமிராண்டித் தாக்குதல்

டிசம்பர் 12ம் திகதி வெள்ளிக்கிழமை 2.20மணி அளவில் சுமார் 200 சிங்கள சிறைக் கைதிகள் தமிழ்க் கைதிகள் இருந்த பகுதிக்குள் நுழைந்து கொள்ள முயன்றனர். தமிழ்க் கைதிகள் கதவை இழுத்துப் பிடித்துக் கொண்டதன் மூலம் அவர்கள் உள்ளே நுழைவதைத் தடுக்க முயன்றனர். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைய இந்தக் குண்டர்கள் 45 நிமிடங்கள் முயற்சி செய்துள்ளனர். இவை எல்லாம் சிறைக் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரும் சிறை அதிகாரிகளும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இடம்பெற்றன. சிறைக் கதவை தள்ளித் திறக்க எடுதத முயற்சி தோல்வி கண்டதைத் தொடர்ந்து குண்டர்கள் தமிழ்க் கைதிகளைக் கலைக்கும் பொருட்டு கொதி தண்ணீரும் மிளகாய்த் தூளும் வீசுவதில் ஈடுபட்டனர். இனியும் குண்டர்கள் நுழைவதைத் தம்மால் தடுக்க முடியாது என்பதைக் கண்ட தமிழ்க் கைதிகள் தாம் இருந்து வந்த கட்டிடத்தை நோக்கி ஓடத் தொடங்கினர்.கானும் சிவநேசனும் தர்மலிங்கமும் ஓடுகையில் தடக்கி விழுந்தனர்.

குண்டர்கள் கானையும் தர்மலிங்கத்தையும் பிடித்துக் கொண்டு அவர்களை பொல்லுகளால் தாக்கினர். கத்திகளால் வெட்டினர். தாக்கப்பட்ட நிலையில் இராணுவ காவல் நிலையத்தை நோக்கி ஓடிய சிவநேசன் தம்மைக் காக்கும்படி படையாட்களை வேண்டிய போதிலும் அவர்கள் சும்மா பார்த்துக் கொண்டிருந்தனர். சிவநேசனை பிடித்துக் கொண்ட குண்டர்கள் அவரின் உள்ளங்கியையும் களட்டியெடுத்து நிர்வாணமாக்கியதோடு வெட்டியும் கொத்தியும் கொன்றதோடு, காவலில் ஈடுபட்டிருந்த படையாட்களின் எதிரில் இருந்த சாக்கடையில் தள்ளினர்.

ஏனைய சிறைக் கைதிகளையும் கொன்று தள்ளும் நோக்குடன் இந்தத் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. இரத்தக் களரியின் பின்னர் அழைக்கப்பட்ட இராணுவத்தினர் ஆகாயத்தில் வெடி தீர்த்து "நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள்" கொணர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. சிறை அதிகாரிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இந்த காட்டுமிராண்டித் தாக்குதலைத் தவிர்க்க நேரம் காலம் மட்டுமன்றி அதற்கான வாய்ப்பும் இருந்தது. ஆனால்" அவர்களுக்கு அதை அங்ஙனம் தவிர்க்கும் அவசியம் இல்லாதிருந்ததோடு அத்தாக்குதலை நடாத்துவதற்கான அவசியமும் இருந்து வந்துள்ளதை இது எடுத்துக்காட்டவில்லையா?காடையர்கள் சிறைச்சாலை குசினிக்குள்ளும் சிறைக்கைதிகளின் கட்டிடத்துக்குள்ளும் எந்த விதமான தடையும் இல்லாமல் நுழையவும் அகப்பட்டவர்களைத் தாக்கவும் வசதி இருந்ததை இது காட்டுகின்றது. காடையர்கள் பொல்லு , இரும்பு கம்பி, வாள் கொண்டு தாக்கியுள்ளனர். காடையர்களுக்கு வாள் கிடைத்தது எப்படி?சிறை அதிகாரிகளால் அல்லது அவர்களின் கையாட்களாகச் செயற்பட்டவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் சிறைக்குள் வாள் வருவதற்கு வாய்ப்பு இல்லை.

களுத்துறை சிறைக் கொலைகளில் அரசின் தொடர்பை பூசி மெழுகவும் முயற்சி இடம்பெறுகின்றது. தாக்குதலுக்கு மறுநாள் தமிழ் கைதிகளின் பாதுகாப்புக்கெனக் கூறி 225 சிங்கள கைதிகளை வெலிக்கடை சிறைக்கு அனுப்பும் நடவடிக்கையில் சிறை அதிகாரிகள் ஈடுபட்டனர். இது அடையாள அணிவகுப்பில் காடையர்கள் இனங்காணப்படுவதைத் தவிர்க்கவே செய்யப்பட்டது.

களுத்துறை சிறையில் உள்ள 223 தமிழ் அரசியல் கைதிகளை அங்கு கொண்டு சென்று மூன்று கிழமையும் இல்லை. இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களாக பேர் சூட்டப்பட்டு முன்னர் வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டு இருந்தனர். அவர்களில் சிலர் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக சித்திரவதைகளுக்கு இலக்காகி உள்ளவர்கள். கடந்த நவம்பர் 27ம் திகதி இக்கைதிகள் தமக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்தால் சட்ட நடவடிக்கை எடுத்து விடுதலை செய்யும்படி அல்லது தண்டனை வழங்கும்படி கோரும் பிரச்சாரத்தில் இறங்கியதோடு எட்டுப்பேர் சாகும் வரை உண்ணாவிரதத்திலும் இறங்கினர். 23 சிறைக்கைதிகள் தமது பிரச்சாரத்துக்கு கவனத்தைத் திருப்பும்பொருட்டு சிறைச்சாலையின் கூரையில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். அரசாங்கத்தின் பதில் இவர்களின் கோரிக்கைகளுக்கு செவி கொடுப்பதாக இருக்கவில்லை. மாறாக கிளர்ச்சி அடக்கும் பொலிஸ் படையை இறக்கி 223 கைதிகளையும் அவர்களின் உறவினர்கள் சோகத்துடன் பார்த்து நிற்கையில் பலாத்காரமாக அடைந்து தள்ளி களுத்தறை சிறைச்சாலைக்கு அனுப்பியதே . இந்த பலாத்கார நடவடிக்கையை மூடிமறைக்கவும் சிறைக் கைதிகளுக்கு எதிராக இனவாதத்தை தூண்டிவிடவும் அரசாங்கம் பொய்ப் பிரச்சாரத்தில் இறங்கியது. இக்கைதிகள் சிறையில் இருந்து தப்பியோட வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் வைத்திருந்தனர் என்ற பிரச்சாரத்தினை முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் ஊடாக நடாத்தின. அன்றைய தினம் புகைப்படப்பிடிப்பில் ஈடுபட்ட வீரகேசரி படப்பிடிப்பாளர் சுரேந்திரனைத் தாக்கிய பொலிசார் அவரின் கமராவையும் பறித்துக் கொண்டனர்.

இன்று கவனத்துக்கு உள்ளாகியுள்ள அரசியல் கைதிகளின் பிரச்சாரத்தை நசுக்க கலகம் அடக்கும் பொலிசாரை ஏவியதும் அவர்களைப் பெருந்தொகையாக களுத்துறைக்கு பார்சல்கட்டி அனுப்பியதும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் உயர்பதவிகளில் இருப்பவர்களதும் முதலாளித்துவ அரச இயந்திரத்தின் உச்சியில் இருப்பவர்களதும் பூரண அங்கீகாரம் இல்லாமல் இடம்பெற்றிருக்க முடியாது. 16நாட்களின் பின்னர் களுத்துறை சிறைச்சாலையில் இந்த கைதிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட கொலைகாரத் தாக்குதல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் அரச இயந்திரத்தினதும் உச்சியில் உள்ளவர்களினால் தூண்டிவிடப்பட்டது என்பதையிட்டு ஏதேனும் சந்தேகம் இருக்கமுடியுமா?

## அரசாங்கத்தின் நீதி

இந்தக் கொலைகளின் பின்னர் களுத்துறை சிறையில் உள்ள 350 தமிழ் அரசியல் கைதிகள் தம்மைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றும்படி கோரி சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். பாதுகாப்பு இல்லாத நிலைமையுள் மரணம் சம்பந்தமாக மஜிஸ்திரேட் விசாரணையில் சாட்சியளிக்கப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.கொலையையும் உண்ணாவிரதத்தையும் பற்றிய செய்திகள் பரந்து கொண்டு வந்த ஒரு நிலையில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இராணுவ, பொலிஸ் அதிபர்களையும் சிறைச்சாலை ஆணையாளரையும் இன்னும் பல அரசாங்க அதிகாரிகளையும் கூட்டி டிசம்பர் 15ம் திகதி கலந்துரையாடியதாகவும் "நீதியை" இட்டுநிரப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் சிறைக்கைதிகளை பாதுகாக்க மாற்று நடவடிக்கை எடுப்பதாகவும் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அமைச்சர் "நீதியை இட்டுநிரப்புவதைப் பற்றிக் குறிப்பிடுகையிலேயே படுகொலைசெய்யப்பட்ட சிவனேசன், தர்மலிங்கத்தினது சடலங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களின் வீடுகளில் ஒப்படைக்க முன்வந்த உறவினர்களின் கோரிக்கைகளை களுத்துறை நீதிமன்றம் நிராகரித்தது. இந்தக் கோரிக்கைகளை அவர்களின் சார்பில் மனித உரிமைகளுக்கான அமைப்பின் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் முன்வைத்திருந்தார். அத்தகைய கோரிக்கையை தாக்கல் செய்ய வேண்டாம் என மகேஸ்வரி வேலாயுதத்தை சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை செய்ததாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் கூறியதாக பிரபல பத்திரிகையாளர் டி.பீ.எஸ்.ஜெயராஜ் ஐலன்ட்(1997டிசம்பர்17) பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் கொலையுண்டவர்களின் இறுதிக் கிரியைகள் நடைபெறுகையில் அவர்களின் சடலங்கள் பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும் என அரசாங்க தரப்புச் சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

சோசலிச சமத்துவக் கட்சி செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்ய நடாத்திய அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் தாக்குதல்களுக்கு எதிராக சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும். சோ.ச.க. மட்டுமே இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கான முன்நோக்கினை முன்வைத்துள்ளது.

www.padippakam.com

# தபால் ஊழியர்களுக்கு வேலைத்திட்டம் வேண்டும்

தபால் திணைக்களத்தை தனியார்மயமாக்குவதற்கு எதிராக டிசம்பர் 7ம் திகதி தபால் மா அதிபர் அலுவலகத்தின் எதிரில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான தபால் ஊழியர்கள் பங்கு கொண்டனர். இந்த மறியல் போராட்டமும் அதற்கு முன்னர் நவம்பர் 18-24 வரை நடைபெற்ற மேலதிக நேர வேலை பகிஷ்கரிப்பிலும் பெரும்பான்மையான ஊழியர்கள் கலந்து கொண்டனர். இவை தனியார்மயமாக்கத்துக்கு எதிராகவும் தமது உரிமைகளைக் காக்கவும் தபால் ஊழியர்களிடையே இருந்து வரும் பெரும் அவசியத்தைக் காட்டிக் கொண்டுள்ளது.

ஆனால் அத்தகைய போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு அவசியமான வேலைத்திட்டத்தையும் தலைமையையும் வழங்குவதில் இருந்து வரும் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் பிரச்சினை அவர்களின் எதிரில் இருந்து கொண்டுள்ளது.

தபால் ஊழியர் போராட்டத்தின் உச்சியில இருந்து கொண்டுள்ள தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் போராட்டத்துக்கு அவசியமான சரியான வேலைத்திட்டத்தை வழங்க தவறியுள்ளனர். தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனம் ஆக்க அரசாங்கம் தீர்மானம் செய்த போது இவர்கள் கூறியது என்ன? தபால்ஊழியர்களில் 90வீதமானவர்கள் கூட்டுத்தாபனமாக்குவதற்கு ஆதரவாக உள்ளனர் என்பதே. ஆதலால் அந்த கூட்டுத்தாபனமயமாக்கலுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுக்க தபால் ஊழியர்கள் தயார் இல்லை என தபால் திணைக்கள ஊழியர்களையே குற்றம் சாட்டினர். அத்தோடு இந்த போராட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பில் இருந்து தப்பிக் கொள்ளவும் அவ்வாறே தமது காட்டிக் கொடுப்பை மூடி மறைக்கவும் முயன்றனர். இது இன்றைய காலகட்டத்தில் சகல சந்தர்ப்பவாத தொழிற்சங்கவாதத் தலைவர்களும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகத் திணிக்கும் குற்றச்சாட்டாகும்.

தபால் திணைக்கள ஊழியர் சங்கத் தலைவர்கள் இக்குற்றச்சாட்டைத் சுமத்தி போராட்டத்தில் இருந்து தலைதப்ப முயன்று வந்த அதே வேளயில் தபால் ஊழியர்களிடையே போராட்டத்துக்கான அவசியம் என்றும் இல்லாத விதத்தில் வளர்ச்சி கண்டது. இந்த நிலைமையில் ஏனையதொழிற்சங்கத் தலைவர்கள் பின்னணியில் இருக்கையில் தபால் ஊழியர்களை அரசியல் ரீதியாகவும் வேலைத்திட்ட ரீதியிலும் நிராயுதபாணிகளாக்கும் பொறுப்பை தபால், தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத் தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த நிலைமையில் தபால் ஊழியர்களின் எதிர்ப்பை ஏதோ ஒரு விதத்தில் கழுவித் தள்ளவும் அவர்களின் போராட்டத்தை முறியடிக்கவும் தம்மால் தனித்து முடியாது என்பதைத் புரிந்து கொண்ட தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்க அதிகாரிகள் தொழிற்சங்க முன்னணிய விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கினர். தற்சமயம் ஐந்து தொழிற் சங்கங்களைக் கொண்ட "தபால் திணைக்களத்தைக் காக்கும் தொழிற்சங்கக் கமிட்டி" என்ற பெயரில் ஒரு முன்னணி அமைக்கப்பட்டுள்ளது. இதில் யூ.என்.பி., சிறீலங்கா, ஜே.வீ.பி. பிற்போக்கு சக்திகளையும் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தலைவர்கள் சோசலிச வேலைத்திட்டம் நடை முறையானது அல்ல எனவும் கற்பனையானது எனவும் கூறி அதைத் தாக்கி வருகின்றனர். இதன் இலக்கு தபால் ஊழியர்களின் போராட்டத்தை தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பகுதியினரதும் போராட்டங்களுடன் இணைப்பதை எந்த விதத்திலும் தடுத்து அவர்களின் போராட்டத்துக்கு குழி பறிப்பதேயாகும். முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு திட்டங்களுக்கு தபால் ஊழியர்களை பலியாக்குவதே. டெலிகொம் ஊழியர்களின் போராட்டம் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு பலியிடப்பட்டமை இந்த வங்குரோ எதிர்ப்பு போராட்டங்களின் பெறுபேறாகு சோசலிச வேலைத்திட்டத்தி அடிப்படையில் போராட்டத்தி முன்னெடுக்கும் நடவடிக்கை குழுக்கை தபால் திணைக்களத்தில் அமைப்ப உடனடி அவசியம் ஆகியுள்ளது. சோசல சமத்துவக் கட்சி இப்போராட்டங்கள தொழிற்சங்கவாதிகளின் வங்குரோத்துச் எதிராக முன்னெடுக்கப் போராடுகின்ற

---

பகிரங்க விரிவுரை

## பொதுமக்களுக்கு எதிரான யுத்தமும் வரவுசெலவுத்திட்டமும் அரசியலமைப்பும்

ஜனவரி 20 மாலை 5மணி
ஜேம்ஸ் ஜோர்ஜ் மண்டபம்
மொரட்டுவை பல்கலைக் கழகம்
விரிவுரையாளர்: கே. ரத்னாயக்க
(ஆசிரியர்--கம்கறுமாவத்த)

ஜனவரி 20 மாலை 4.30 மணி
பேராதனை பல்கலைக் கழக கலாமண்டபம்

ஜனவரி 31 மாலை 2 மணி
கேகாலை நகர மண்டபம்

சோசலிச சமத்துவக் கட்சி,
இளம் சோசலிஸ்டுகள்

---

## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு




### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

### சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இராஜ்குமார் கைதியாக இருந்து விடுதலை செய்விக்கப்பட்ட போராட்டத்தின் படிப்பினை



சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் செல்லையா இராஜ்குமார் 1996ஜூன் 14ம் திகதி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு. 1997 ஜூலை 20ம் திகதி வரை -ஒரு ஆண்டுக்கும் அதிக காலம் சிறைவைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானார். சோசலிச சமத்துவக் கட்சியும் அது இணைந்து கொண்டுள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் முன்னெடுத்த போராட்டத்தின் அனைத்துலக பிரச்சாரத்தின் பெறுபேறாகவே அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த அனைத்துலகப் போராட்டத்தினை பிரதிபலிக்கும் ஒரு தொகை கடிதங்களதும் பேச்சுக்களதும் தொகுதி இது.

விலை ரூபா. 10.00

தொழிலாளர் பாதை வெளியீட்டாளர்கள்
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10.

---




சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

---

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . திகதி . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்